
www.padippkam.com

# கோடாங்கி

தலித் இலக்கியக் காலாண்டிதழ் ● சனவரி – ஜுன் 1996



படிப்பகம்

www.padippkam.com

# கோடாங்கி

**தலித் இலக்கியக் காலாண்டிதழ்**

| | |
|---|---|
| தனி இதழ் | 25.00 |
| ஆண்டுக் கட்டணம் | 100.00 |
| வாழ்நாள் கட்டணம் | 1000.00 |

**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| அரைப்பக்கம் | 2,500.00 |
| முழுப் பக்கம் | 5,000.00 |
| பின் அட்டை | 10,000.00 |

கோடாங்கி - ஒடுக்கப்பட்ட மக்களுக்கான இதழ் மட்டுமல்ல - இயக்கமும் கூட.

படிப்பகம்

www.padippkam.com

# கோடாங்கி

434, கட்டபொம்மன் தெரு,
பெரம்பூர், சென்னை – 600 039.

ஆசிரியர் குழு

கருத்தம்மா
சந்ரு
ப்ரதிபா ஜெயச்சந்திரன்

ஓவியங்கள்

சந்ரு

அச்சிட்டு வெளியிட உதவியோர்:

கிறித்துவ தலித் விடுதலை இயக்கம்
CDLM, வேலூர்.

ஒளி அச்சுக் கோர்வை:

தலித் விடுதலைக் கல்வி அறக்கட்டளை
சென்னை

நன்கொடை: ரூ. 25.00

படிப்பகம்

www.padippkam.com

படிப்பகம்

www.padippkam.com



மரண தண்டனை விதிக்கப் பெற்ற இரு நபர்களை சிறு அறைக்குள் அடைத்து வைத்திருக்கிறார்கள். உணவு இன்றி நாட்கள் கடந்தன.

- ஒருவன் தன்னை ஒப்புக் கொடுத்தான் அவனை மற்றவன் கடித்து தின்றான்.
- தன்னை ஒப்புக் கொடுக்காத நிலையிலும் அவனை மற்றவன் கடித்து தின்றான்.
- இருவரும் ஒருவரை ஒருவர் கடித்துத் தின்ன முயன்றார்கள்.

பல மாதங்களுக்குப் பின் ஒருவனின் எலும்புக் கோர்வை; மற்று ஒருவன் அழுகிய சடலம். அல்லது கடி தடயங்களுடன். அழுகி வற்றிய இரு சடலங்கள்.

இவர்கள் இருவருக்கும் மரண தண்டனை கொடுத்ததும், நிறைவேற்றியதும் எவர்? யார்? விதியின் பேரில் பழி போட்டு மனிதனை மனிதன் கொலை செய்து தனது தீனியாக ஏற்பதை நியாயமாக்குவதில் 'மனிதன்' 'மனிதப் பண்புகள்' என்பன என்ன?

மனிதனை மனிதன் கொலை செய்து தனது தீனியாக்கிக் கொள்ளும்படி மனித இனம் முழுவதையும் குறுகிய சிறைக்குள் உணவு இன்றி அடைத்துப் போட்டது யார்? எது?

அனைத்தையும் தன்வயமாகக் கொண்டு இயங்குகிற இயற்கை என்றால், இயற்கைச் சிறையிலிருந்து நாம் வேண்டுகிற விடுதலை என்ன? மனிதனை மனிதனே சிறை படுத்துகிறான் என்றால் மனிதரிலிருந்து நாம் வேண்டுகிற விடுதலை என்ன?

வரலாறுதொட்டு அதிகாரம், இனக்குழு, நம்பிக்கை என்பதாக மனிதனின் கொலைக்கருவிகள் வளர்ச்சியுற்ற சுழற்சியில் நீதிமான்களும் மரணதண்டனையும் நமது நியாயங்களாக இறுக்கமடைந்து நாம் நமக்குள்ளேயே சிறை பட்டு கிடப்பதிலிருந்து நாம் வேண்டுகிற விடுதலை தான் என்ன?

ஒப்புக் கொடுத்தலும் இணங்குதலும் புரிதலுமாக மனித இன வளர்ச்சி என்பது பரந்த மனோபாவமாக வெளிப்படுகிற நிலையை நோக்கி இன்றைய வாழ்க்கைச் சூழலின் வேகத்திற்கும் இரைச்சலுக்கும் மத்தியில் பூமியின் அடி ஆழத்தில் ஒடுகிற அமைதியை கிளைத்தெழுப்புகிற இசைக்கலைஞர்களாக இசைக் குழுவாக மனிதரில் மனிதர் சாதியின் பெயரால் தாழ்த்தப்பட்டவர்களாக ஒடுக்கப்பட்ட மக்கள் தலித் எனற பெயரில் ஒன்றிணைந்து தலித் கலை விழா காண்கிறோம்.

20.7.96 சனிக்கிழமை சென்னையில் நடைபெறும் 'தலித் கலை விழா மலராக' 'கோடாங்கி' தலித் பண்பாடு, அரசியல், கலை, இலக்கியங்கள் என தனது முன் வைப்புகளை கொண்டு தங்களோடு பகிர்ந்து கொள்ளவிருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர் குழு

படிப்பகம்

www.padippkam.com

# தலித் இயக்கங்களுக்கிடையேயான அய்க்கியமும், பிரச்சனைகளும்

உஞ்சை ராசன்

சிதறடிக்கப்பட்ட சாதியான தாழ்த்தப்பட்ட சாதியார்கள் ஒன்றுபடுவதற்கே போராடிக் கொண்டிருக்கிறார்கள். சுரண்டல் வடிவமான சாதிமுறையை மிகவும் இலகுவாகப் பயன்படுத்தி படிநிலைச் சாதிகளில் அடிநிலைச் சாதிகளின் மீது வன்முறையை ஏவி ஒடுக்குகின்றனர். இவ்வொடுக்குமுறையை சாதி சுரண்டல் வடிவங்கொண்ட நாள் முதலே எதிர்த்து வருபவர்கள்தான் இன்று தீண்டத்தகாத சாதிகளாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு ஒதுக்கி வைக்கப்பட்ட சாதியார்களும் ஒன்றுபட்டுவிடக் கூடாது என்றே இன்றளவும் புதிய முறைகளைப் புகுத்தி பிரித்து வருகின்றனர்.

நிலத்தை அடித்தளமாகக் கொண்ட பண்டைய உற்பத்தி முறைக்கேற்றவாறு உழைப்பைச் சார்ந்து உழைப்பவர்களாகப் பிரிந்தனர். பெருவீத உற்பத்தி முறைக்கேற்றவாறு துணைத் தொழில்களும் இத் தொழில்களைச் சார்ந்த உழைப்பாளர்களுமாகப் பிரிந்தனர். இவ்வாறு உழைப்பவர்கள் தங்களுக்குள்ளேயே உழைப்பை அடிப்படையாகக் கொண்ட பண்பாட்டு வழி நின்று பிரித்தறியும் தோற்றங் கொண்டனர். இதனையே சாதகமாகக் கொண்ட பார்ப்பனீயர்கள் (ஆரியர்கள்) பெருவீத உற்பத்தியார்கள், சிறுவீத உற்பத்தியாளர்கள், பண்டமாற்றாளர்கள், படையாளர்கள், நிலவுடைமையாளர்கள், எனப் படி நிலைப்படுத்தினர்.

இப்படி நிலைப்படுத்தும் போக்கை எதிர்த்த பெருவீத உற்பத்தியாளர்களை அமைதியைக் குலைத்து ஆளுமையை எதிர்ப்பவர்கள் என்று கூறி ஒதுக்கினர். சிறுவீத உற்பத்தியாளர்களை, பண்டமாற்றாளர்களை படையாளர்களை, நிலவுடைமை யாளர்களை, பெருவீத உற்பத்தியாளர்களுக்கு எதிராகச் சித்தரித்தனர். இதன் வளர்ச்சி நிலையில்தான் தீண்டாமை, காணாமை, அண்டாமை என்கிற விசவடிவங்கள் இவ்வுழைப்பாளர்கள் மீது திணிக்கப்பட்டன.

இவ்வாறு நிலமான்ய முறை உச்சமடைந்தபோது ஏற்படுத்தப்பட்ட இந்த சாதி ஒதுக்கல் முறை நிலமானிய முறை நீச்சமடைந்து முதலாளிய முறை உச்சமடைந்து வரும் இக்காலத்திலும் உறுதிகொண்டிருக்கிறதென்றால் பார்த்தீனியச் செடியாய் அனைத்து ஆளுமை வடிவங்களுக்குள்ளும் வேர்க்கொண்டிருக்கிற பார்ப்பனியமே பாதுகாத்து வருவதன்றி வேறில்லை. பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு வகையான உற்பத்தி முறைகள் தோன்றியுள்ளன. இந்த உற்பத்தி முறைகளுக்கேற்ப சமூக அமைப்பு முறை மாறிவந்துள்ளது. இன்று உற்பத்தி முறை மாறியிருக்கிறது என்று சமூக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனில் இச் சமூக அமைப்பும் மாறியிருக்க வேண்டும். ஒரு சமூக அமைப்பு மாறுகிறதென்பது நிலைத்திருக்க ஒரு அமைப்பு முறை அழிந்து புதிய அமைப்பு முறை



படிப்பகம்

www.padippkam.com



தோற்றங்கொண்டிருக்க வேண்டும். இங்கு ஏற்கெனவே இருக்கிற சாதியமைப்பு முறை அப்படியே தான் இருக்கிறது. ஆக இங்கு உற்பத்தியில் சில மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும் சமூக அமைப்பு முறையில் எவ்விதச் சரிவும் ஏற்படவில்லை. மாறாக உற்பத்தி மாற்றங்களுக்கேற்றபடி சாதியச் சமூக அமைப்பும் தன்னைப் புத்துருவாக்கிக் கொள்கிறதேயன்றி சரியவில்லை. இப்புத்துருவாக்கத்தின் அரசியல் வெளிப்பாடுதான் இன்று பூதமாய் காட்சி தரும். இந்துத்துவத் தாங்கியான பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ், விசுவ இந்து பரிசத், இந்து முன்னனி போன்றவைகள் இவ்வாறு மீண்டும், மீண்டும் சாதியச் சமூக அமைப்பு முறை நவீனப் படுத்தப்படுகிறதேயொழிய அதன் எந்த விசக் கொடுக்கும் ஒடிக்கப்படவில்லை.

இன்று சாதி என்றுமில்லாத வகையில் வேர்ப்பற்ற எடுக்கிற முயற்சியும் அதை முறித்து வேரறுக்க எடுக்கிற முயற்சியும் தான் ஆதிக்கச் சாதிகளுக்கும் அடிமைச் சாதிகளுக்கும் நடக்கிற போராகும். இந்தப் போர் பகுதியின் தன்மை சார்ந்து (அதாவது அம்பேத்கர் கூறியதைப் போல் சாதியின் வட்டாரத் தன்மைக்கேற்றபடி) உச்சநீச்சமடைகிறது. அரை நூற்றாண்டுக்கு மேல் பார்ப்பனீய எதிர்ப்பை முன்மொழிந்த பின்னும் மீண்டும் பார்ப்பனீயமே வெற்றிப்படியில் நிற்பதாகக் கொள்ள வேண்டும். காரணம் பார்ப்பனீயத்தை அம்பேத்கர் எதிர்க்க அதே கால கட்டத்தில் பெரியார் பார்ப்பனீய எதிர்ப்பை பார்ப்பன எதிர்ப்பாகக் குறுக்கியதன் விளைவுதான் என்பதாகவும் பார்க்க வேண்டும். பார்ப்பனீயத்தின் வேர் (மூலம்) பார்ப்பனரேயெனினும் இன்று அதன் கிளையாக, விழுதாக பல ஆதிக்க சாதிகள் தங்களை மாற்றிக்கொண்டிருக்கின்றன. நிலவும் சாதிய சமூக அமைப்பு முறையை இந்திய நீதி, நிர்வாக அமைப்புகளின் மூலமே பார்ப்பனர்கள் சாதித்து வருகின்றனர். அரசியலில் தேசிய இன உணர்ச்சி மேலோங்க மேலோங்க பார்ப்பனர்களின் குவி மையம் மத்தியில் நிலைத்தது. இந்த உணர்ச்சியைப் பயன்படுத்தி அந்தந்தப் பகுதி ஆதிக்க சாதிகள் ஆட்சி அதிகாரங்களைப் பங்குபோட்டுக் கொண்டதும் அதே அரசதிகார மையங்களுக்குள் தங்களை நிறுவிக்கொண்டு பார்ப்பனர்கள் செய்த அதே பார்ப்பனீய வேலைகளையே செய்கின்றனர். எனவே தான் இங்கும் ஆதிக்க சாதியினர் முன் மொழியும் பார்ப்பனீய எதிர்ப்பு என்பதெல்லாம் சாரத்தில் பார்ப்பன எதிர்ப்பாகவும் சந்தர்ப்பத்தில் பார்ப்பன உடன்பாடாகவும் முற்றியுள்ளது. **மத்திய அரசு இந்த கட்சிக்கு மாநில அரசு இந்த கட்சிக்கு என்ற அரசியல் மனோநிலை மக்களிடம் உருவாக்கப்பட்டுள்ளதற்கு இந்திய தேசிய உயர்ச்சியோ தமிழ் தேசிய உணர்ச்சியோ காரணமல்ல. மாறாக மேலாதிக்க சாதிகளுக்கு மத்திய அரசு, ஆதிக்க சாதிகளுக்கு மாநில அரசு, அடிமைச் சாதிகளுக்கு கிராமப்பஞ்சாயத்து என்கிற அதிகாரப் படி நிலையும் உருவாக்கப்பட்டுள்ளது தான்.**

இவ்வாறு அரசதிகாரத்தையும் படி நிலைப் படுத்துவதன் மூலம் ஏற்கனவே உள்ள சாதிப்படி நிலைகளை அப்படியே வைத்திருக்கலாம் என்கிற பார்ப்பனீய சூழ்ச்சிக்கே இட்டு செல்லப்பட்டிருக்கிறோம். எனவே தான் ஆதிக்க சாதியினர் பெரும்பான்மையை எந்தக்



படிப்பகம்

www.padippkam.com

இருமாப்படைய முனைகின்றனர். இதற்காக சாதியின் தோற்றுவாயைப் பார்க்காமல் அதன் முடிவைப் பற்றிக் கவலை கொள்ளாமல் இடைப்பட்ட காலத்தில் சாதி வகுத்த பாத்திரத்தை தன் சாதிக்கானதாக்கி மகிழ்கின்றனர். எனவே இச் சாதி இழிவைப் போக்கத் துணியும் இயக்கங்களுடன் முரண்படுகின்றனர். எனவே இவ்வகை இயக்கங்களை தலித் இயக்கங்கள் என வரையறுக்க முடியவில்லை. குறிப்பாக பறையர்களுக்குள்ளும் பள்ளர்களுக்குள்ளும், சக்கிலியர்களுக்குள்ளும் சாதிப் பெருமை பேசும் வக்கிரம் வளராமலில்லை. இந்த வளர்ச்சி சாதி ஒழிப்பை முதன்மைப்படுத்தும் இயக்கங்களுக்கு சவாலாகவே அமைந்து விடுகின்றன. இப்படியும் எழுந்துள்ள இயக்கங்களை ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு இன்று நிகழ்ச்சி நிரலில் இடம் பெறும் தலித் இயக்கங்கள் குறித்த பார்வையை ஆழப்படுத்த வேண்டும். இவைகளுக்கு இடையேயான அய்க்கியம் மிகவும் அவசியமானதாகும்.

அம்பேத்கர் கூறியதைப் போல் ''சாதிவட்டாரத் தன்மை கொண்டது'' எனவே வட்டாரத்தில் நிகழும் சாதியின் வெறித்தனத்தையொட்டியே அப்பகுதியில் அதற்கு எதிரான போக்கும் வளரும் இவ்வகையில் பார்த்தோமானால் தமிழகத்தைப் பொருத்த வரை தெற்கு மற்றும் தென் கிழக்கு மேற்கு மற்றும் வடமேற்கு, வடக்கு மற்றும் வட கிழக்கு எனப் பாகுபடுத்தலாம். இவைகளில் முறையே பெரும்பான்மைச் சாதிகளாக பள்ளர்கள், சக்கிலியர்கள், பறையர்கள் எனவும் பகுக்கலாம். இவர்களின் பகுதிகளுக்கேற்ற சாதித் தன்மைப்படி சாதி எதிர்ப்பு இயக்கங்கள் தோற்றம் கொண்டிருப்பதை வரலாற்றுப் போக்கிலும் கொள்ளலாம். எனவே ஒருமுகத் தன்மையில்லாமல் சில ஏற்ற இரக்கங்களுடன் இயக்கங்கள் தோன்றியுள்ளன. ஆயினும் அம்பேத்கர் நூற்றாண்டுக்குப் பின் இவ்வியக்கங்களின் சமூகப் பார்வையில் ஒருவித மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே இவைகள் தலித்தியத்தை உயர்த்திப் பிடிக்கும் அரசியல் செயல்பாட்டில் நடைபோடுகிறது. இவ்வாறு கருத்தளவில் ஒற்றுமை கொண்டுள்ள சில தலித் (இடதுசாரி) இயக்கங்கள் தங்களுக்குள் கட்டுத்துவத்தை ஏற்படுத்திக் கொள்ள முனைகின்றன. இவ்வகையான கட்டுத்துவ முயற்சி வட்டார வகைப்பட்டதாகவும், தமிழ்க அளவினதாகவும் அமைகின்றன. வட்டார வகைப்பட்ட இயக்கங்கள் பெரும்பாலும் தோன்றும் பண்பாட்டு வகைப்பட்ட பிரச்சனைகளுக்கு ஒன்றுபட்டு தற்காலிகமான போராட்டங்களை முன்னெடுக்கின்றன. எனினும் இவ்வகையான கூட்டு முயற்சி வெகு எளிதில் தோன்றி வெகு எளிதில் சிதைந்து போகிறது என்றாலும் தொடர்ந்து இருப்பதைப் போன்ற நிழலுருவைத் தந்துகொண்டிருக்கும். காரணம் நம்பணி மன்றம் என்ற வகைக்குள்ளும் பகுதி பிரதான அரசியல் கட்சிகளுக்கு தரகர்களாகச் செயல்படும் வகையினதாகவும் விளங்குகின்றன. எனவே இவைகளின் கூட்டு முயற்சியை பகுதி அரசியல் கட்சிகளே தீர்மானிக்கின்றன.

தமிழக அளவிலான இயக்கங்கள் சில செயல்படுகின்றன. இவைகள் பெரும்பாலும் தலித் அரசியலை முன்மொழிபவையாக உள்ளன. இவ்வியக்கங்களில் சில குறைந்தபட்ச



படிப்பகம்

www.padippkam.com

நோக்கங்களைக் கொண்டு ஒன்றுபட்டு நிற்கின்றன. எனினும் இவைகளுக்குள் ஆழமான கூட்டுத்துவச் செயல்பாடு இல்லையென்றே கூற வேண்டும். காரணம் பரந்துபட்ட அளவினையுடையதாக அமைப்பு வடிவங்கொண்டிருந்த போதிலும் சாரத்தில் பகுதி அமைப்பாகவே பிரதிநிதித்துவப்படுத்திக் கொள்கிறது. மேலும், **தலித் அரசியலை, தலித் பண்பாட்டு தலித் தலைமையை முன்மொழிந்து சாதியை ஒழித்து சமூக மாற்றத்தை ஏற்படுத்தும் புரட்சிகர நடவடிக்கையிலுள்ளது என்று கூறிக் கொண்டாலும் தனித்தனி இயக்கங்களும் தங்களுக்கான அரசியல் அறிக்கை, திட்டம், அமைப்பு விதி என்ற ஏதுமில்லாமலிருக்கின்றன. இதனால் ஒரு இயக்கம் மற்றொரு இயக்கத்தைப் பற்றி முழுமையாகப் புரிந்து கொண்டு அய்க்கியப்படவோ ஒன்றுபடவோ முடியவில்லை.** மேலும் எழுகின்ற பிரச்சனைகளை அரசியல் படுத்துவதில் ஏற்படும் அனுபவமின்மையும் காரணமாகிறது. திட்டமிட்ட உருவாக்கமாக அமைப்பு இல்லாமல் பிரச்சனையிலிருந்து வளர்ச்சி கொள்கிற அதே வேளை பிரச்சனையின் தன்மைக்கேற்ப கூடுவதால் பகுதிப் பிரச்சனையற்ற இயக்கங்கள் பெரிதாய் அலட்டிக்கொள்வதில்லை. இதனால் ஒவருவருக்கொருவர் குறையாகப் பார்க்கும் சராசரிப் பார்வையே மிஞ்சுகிறது. காலப்போக்கில் இது விமர்சனமாக, முரண்பாடாக வளர்ந்து பகைமையாக மாற வாயப்பேற்படுகிறது.

இன்னொரு வகையில் இவ்வியக்கங்களுக்குள் ஊடுருவியுள்ள பல தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் இவ்வமைப்புக்குள் பகைமையை வளர்க்கின்றன. காலப்போக்கில் இவ்வியக்கங்ளின் முன்னணிச் சக்திகளை சோரப்படுத்திவிட்டு இந்நிறுவனங்கள் ஒதுங்கிக் கொள்கிற வரலாறுகளை பதிவு செய்து கொள்ளும் சில இயக்கங்கள் இக் கூட்டுத்துவத்தை மறுக்கின்றன. அத்துடனில்லாது இந்நிறுவனங்கள் துவக்கத்தில் இவ்வியக்கத் தலைவர்களுக்கு நல்ல வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு அதே சமயத்தில் இவர்களைதலைமைத் தகுதிக்கு லாயக்கற்றவர்களாகவும் ஆக்கி மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தி விடுகின்றன. இப்போக்கைப் புரிந்துகொள்ளும் இயக்கங்களின் அடிமட்டத் தொண்டர்கள் தலைமைகள் நோக்கமற்ற கொள்கையற்ற கூட்டைத் தடுக்கின்றனர்.

இப்படி பலவகையான முரண்கள் தோன்றிய போதிலும் பரந்துபட்ட ஒரே இயக்கமாக உருக்கொள்ளாதவரையிலும் இவ்வியக்கங்களுக்கிடையிலான 'கூட்டமைப்பு' தவிர்க்க முடியாதது. எனவே, இத்தலித் இயக்கங்கள் தாழ்த்தப்பட்ட இம்மக்களை விடுதலையடையச் செய்ய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துக்காக ஒன்றுபட்டு நிற்க வேண்டிய அவசியமிருக்கிறது. இவ்வுயரிய நோக்கத்துக்காக சில தியாகங்களையாவது நாம் செய்தாக வேண்டும். அவ்வாறின்றி மக்களை முட்டாள்கள் என்று தன்முனைப்புத் தனமாகச் செயல்படுவார்களெனில் மக்களிடமிருந்து அந்நியப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை. ●



படிப்பகம்

www.padippkam.com

# தமிழ்த் தேசியமும் தலித் விடுதலையும்

இரா. அதியமான்

உலகெங்கும் ஒடுக்கு முறையும் - அடக்குமுறையும் நாளும் நாளும் மிகுந்து வருகின்றன. குறிப்பாக, சோசலிச அரசுகளின் வீழ்ச்சிக்குப் பின்பு, வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்பது நடைமுறைச் சட்டமாகியுள்ளது. எனினும் இதற்கெதிரான போராட்டங்களும் விறுகொண்டு வருகின்றன. ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக் குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கி உள்ளது. நிற வேறுபாட்டால் ஒடுக்கப்படுவோர், பால் வேறுபாட்டால் ஒடுக்கப்படுவோர், இனத்தின் பெயரால் ஒடுக்கப்படுவோர், மொழி, மதங்களின் பெயரால் ஒடுக்கப்படுவோர் சாதித் தீண்டாமையால் ஒடுக்கப்படுவோர் ஆகிய இந்த விளிம்பு மனிதர்களின் உரிமையும் - விடுதலையும் விவாத மய்யப் பொருள்களாகி உள்ளன.

ஒடுக்கு முறைகளின் தன்மைக்கேற்ப அதற்கெதிரான போராட்டங்களின் தன்மையும் அமையும். இன ஒடுக்குமுறை கூர்மை அடைந்துள்ள இடத்தில் இன விடுதலையின் அடிப்படையில் மக்கள் ஒன்று திரள்வார்கள். அதற்காகப் போராடுவார்கள். நிற அடிப்படையில், மத அடிப்படையில் என அந்தச் சூழ்நிலைக்கேற்ப மக்களின் போராட்டங்கள் அமையும். இந்தியா தேசிய இனங்களின் சிறைக்கூடமாகவும், சாதிகளின் பெயரால் பரந்து பட்ட மக்களை ஒடுக்கும் கொலைக்கூடமாகவும் இருப்பதால், தேசியங்களின் விடுதலை, ஒடுக்கப்பட்ட சாதிகளின் விடுதலை ஆகிய இரண்டிற்குமான போராட்டங்கள் பொலிவு பெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில் தமிழ்த் தேசியத்திற்கான இயக்கங்களும், தலித் விடுதலைக்கான இயக்கங்களும் இருக்கின்றன. மக்களின் விடுதலையை உண்மையாய் நேசிப்பவர்கள் இவ்விரண்டு அணிகளில் ஏதாவது ஒன்றில் இருப்பார்கள். இரண்டு அணிகளுமே விடுதலைக்கான அணிகள்தாம். தமிழ்த் தேசியம் பேசுவோர் தலித் விடுதலையை உள்ளடக்கிய விடுதலையைத் தான் தாங்கள் பேசுவதாகக் கூறுகிறார்கள். தலித் விடுதலை பேசுவோர் தாங்களும் தமிழ்த் தேசியத்திற்கு நிற்பதாகத்தான் கூறுகிறார்கள். ஆனாலும், இவ்விரு அணிகளுக்கு இடையில் இடைவெளியும் உள்ளது. இரண்டு அணிகளிலும் உள்ள போலிகள் -மக்கள் விடுதலையின் மீது உண்மையான அன்பும் அக்கறையும் இல்லாதவர்கள் - இவ்விடைவெளியை ஊதிப் பெருக்க பெருமுயற்சி செய்து வருகிறார்கள். எனவே, இவ்விரண்டிற்கான உறவையும், தொடர்பையும் ஒன்றில்லாமல் மற்றொன்றில்லை என்பதின் தெளிவையும் புரிந்துகொள்ள வேண்டும். இதன்மூலமே நம்முள்ளே ஊடுருவியுள்ள எதிரிகளை அடையாளங் காணமுடியும்; எதிரிகள், நண்பர்கள் இனங்காணப்பட்டு விடுதலைப் போரை முன் நகர்த்த முடியும்.

இதற்கு ''இந்தியா'' என்கிற அரசியலமைப்பைப் புரிந்துகொள்வது முதல் தேவையாகிறது. இங்கு ''இந்தியத் தேசியவாதி''களால் முன்மொழியப்படும் இந்தியா பற்றிய பெருமிதங்களையும் கற்பிதங்களையும் ''இந்திய ஒற்றுமை'' குறித்த



படிப்பகம்

www.padippkam.com

கவலைகளையும் கணக்கில் கொள்ள வேண்டியதில்லை. ஆனால், இந்தியர முழுவதிலும் உள்ள ஒடுக்கப்பட்டோரின் ஒற்றுமை, பாட்டாளி மக்களின் ஒற்றுமை, இவர்களின் ஒருங்கிணைந்த போராட்டம் ஆகியவற்றை முன் வைக்கும் முற்போக்காளரின் கருத்துக்களை கவனத்தில் கொண்டாக வேண்டும். இவர்களில் பெரும்பாலானோர் வர்க்க விடுதலை, தலித் விடுதலை பேசும் இருவரும் இதில் அடங்குவர். இந்தியாவில் உள்ள எல்லாத் தேசிய இனங்களின் ஒடுக்கப்பட்ட மக்களும் ஒன்று சேர்ந்து போராடுவதின் மூலம் தான் தங்களுடைய விடுதலையைப் பெற முடியும் என்ற நம்பிக்கை உடையவர்கள். இவர்கள் கீழ்க்கண்ட காரணங்களை முன் வைக்கின்றனர்.

1. எல்லா இன மக்களையும் ஒடுக்குவது ஒரே அரசு. அது திறமையான மய்யப் படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பைக் கொண்டது. உலகின் நான்காவது படைவலிமை உடையது. எல்லா இன மக்களும் ஒன்று சேர்வதின் மூலமே இதனை எதிர்கொள்ள முடியும். தனித்தனியான சிதறுண்ட போராட்டங்கள் எளிதில் நசுக்கப்பட்டுவிடும்.

2. ஒரு பெருந்தேசியம், மற்ற சிறுபான்மைத் தேசிய இனங்களை நசுக்குகிறது. ஒன்றில்லாமல், எல்லாத் தேசிய இனங்களும் தற்சார்பான வளர்ச்சிக்கு வாய்ப்பின்றி உள்நாட்டு வெளிநாட்டுப் பெருமுதலாளியத்தால் நசுக்கப்படுகின்றன. அப்பெரு முதலாளியத்தின் காவல் நாய்தான் இந்திய அரசு. எனவே, அதனை ஒன்று சேர்ந்த போராட்டத்தின் மூலமே எதிர்கொள்ள முடியும். தனித்தனி தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் இந்தியப் பாட்டாளி வகுப்பைப் பிளவுபடுத்துவதற்கான சதி.

3. இந்தியா முழுவதிலும் உள்ள தாழ்த்தப்பட்ட/பிற்படுத்தப்பட்ட/ மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நிலைமை ஒன்று போலத்தான். அவர்களை ஒடுக்குவது பார்ப்பனியம். பார்ப்பனியத்திற்கு எந்தத் தனித் தேசியமும் இல்லை. மய்ய அரசு பார்ப்பனிய அரசு; எனவே ஒட்டுமொத்தமாக எதிர்கொண்டு முறியடித்தாக வேண்டும். ஆக, இவர்கள் முன் வைக்கும் காரணங்கள் சரியாகத் தான் படுகின்றன. ஆனால், இவர்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். ''இந்தியா'' என்ற இந்த அமைப்பு சுரண்டலுக்கான அமைப்பு; ஆங்கிலேயன் தன்னுடைய சுரண்டல் நலன்களுக்காக ஏற்படுத்திய அமைப்பு. பார்ப்பன, பனியாக்கள் தங்களுடைய சுரண்டலுக்காக இந்த அமைப்பை அப்படியே தக்கவைத்துக் கொண்டுள்ளனர். உலக முதலாளியத்திற்கும், அது ஏற்றதாக உள்ளது. எனவே, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை என்பது இந்த அமைப்பை உடைத்து நொறுக்குவதில்தான் உள்ளது. ''இந்தியா''வைத் தக்க வைத்துக்கொண்டே, ''இந்திய மக்களுக்கு'' விடுதலை என்பது கைகூட முடியாத கற்பனைக் கனவே. விடுதலை பெற்ற தேசிய இனங்கள் விரும்பி இணைந்து உருவாக்கும், ''புதிய இந்தியா'', நல்ல கற்பனையே! இணைந்திருப்பதும், தனித்திருப்பதும் அந்தந்தத் தேசிய இனங்களின் தன்னுரிமைக்குட்பட்டது, இருக்கும் ''இந்தியா'' உடைந்து நொறுங்கிய பின் தன்னுரிமை பெற்ற தேசிய இனங்கள் சமமாய் உட்கார்ந்து பேசி முடிவெடுக்க வேண்டியது.



படிப்பகம்

www.padippkam.com

அடுத்து, இன்னொன்றையம் இவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும் ''இந்தியா'' என்பது பரந்து விரிந்த ஏற்றத் தாழ்வுகளான வளர்ச்சி உடைய ஒரு துணைக்கண்டம். ஒரு தேசிய இனம் பெற்றுள்ள அரசியல் பொருளாதார வளர்ச்சியை இன்னொரு தேசிய இனம் பெற்றிருப்பதில்லை. ஒரு பகுதி மக்கள் பெற்றுள்ள அரசியல் விழிப்புணர்வை இன்னொரு பகுதி மக்கள் பெற்றிருப்பதில்லை. மக்களின் போராட்டங்கள் அவர்கள் பெற்றுள்ள அரசியல் விழிப்புணர்வுக் கேற்பவே அமையும். விழிப்புணர்வு பெற்ற மக்கள் தங்கள் போராட்டத்தை முன்னெடுத்து செல்வதே இயற்கையானது; இவர்கள் விழிப்புணர்வு பெறாத மக்களுக்காகக் காத்திருக்க வேண்டும் என்பது எல்லோருடைய விடுதலையும் தள்ளிப் போடுவது. எனவே இந்தியாவிலுள்ள எல்லாத் தேசிய இனமக்களும் ஒன்று சேர்ந்து ஒரே போலப் போராடுவது என்பது போராட்ட இயங்கியலுக்கு முரணானது.

எந்த வகையில் பார்த்தாலும் ஒரே சமயத்திலான 'அகில இந்தியப் புரட்சி' சாத்தியமற்றது என்பது தெளிவு. 'அகில இந்தியம்' உள்ளவரை எந்த விடுதலையும் சாத்தியமற்றது என்பதும் தெளிவு. ஆக, தலித் விடுதலைக்கும் ''இந்தியம்'' உடைபட வேண்டும் என்பது முன் நிபந்தனையாகிறது. ''இந்தியம்'' ''இந்தியா'' உடைபடுதல் என்பது எப்படி? அது தேசிய இனங்களின் விடுதலைப் புரட்சியில் அடங்கியுள்ளது. மய்யம் சிதைவதில்தான் விளிம்புகளின் வாழ்வு நிலைத்துள்ளது.

ஆனால், இப்பொழுது நம்முன் ஒரு பெரிய கேள்வி எழுகிறது. தேசிய இனங்களின் விடுதலையை யார் முன்னெடுத்துச் செல்வது? எந்தச் சக்திகள் எடுத்துச் செல்லும்? தமிழகச் சூழலில் வைத்து கேள்வியை இப்படிக் கேட்டால் விடை காண்பது எளிதாக இருக்கும். தமிழ்த் தேசியத்தை இன்று தமிழ்நாட்டில் பேசுவோர் யார்? 1. தூய இனவாதிகள், 2. தன்னுரிமை அடிப்படையில் தமிழ்த் தேசியம் பேசுவோர். 3. தலித் விடுதலையை முன்னிருத்தி தமிழ்த் தேசியம் பேசுவோர். பொதுவாக இந்த மூன்று பிரிவுகளில் ஏதாவது ஒன்றில் தமிழ்த் தேசியம் பேசுவோர் அடங்கிவிடுவர்.

முதல்வகையைச் சேர்ந்த தூய இனவாதிகள் மொழி, இனப்பெருமை

> *இந்தியா முழுவதிலும் உள்ள தாழ்த்தப்பட்ட/ பிற்படுத்தப்பட்ட/ மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் நிலைமை ஒன்று போலத் தான். அவர்களை ஒடுக்குவது பார்ப்பனியம். பார்ப்பனியத்திற்கு எந்தத் தனித் தேசியமும் இல்லை. மய்ய அரசு பார்ப்பனிய அரசு; எனவே ஒட்டு மொத்தமாக எதிர்கொண்டு முறியடித்தாக வேண்டும்.*



படிப்பகம்

www.padippkam.com



பேசுவோர். ஆண்ட பரம்பரையை மீண்டும் ஆள வைக்கத் துடிப்பவர்கள். தமிழ்நாட்டை ''தமிழ்பேசும்'' தமிழன்தான் ஆளவேண்டும் என முழங்குபவர்கள் வேற்றுமொழி பேசுவோர் மீது காழ்ப்பை உமிழ்பவர்கள்; தாழ்த்தப்பட்டவர்கள் தமிழ்ப்பற்று இல்லாதவர்களாக இருக்கிறார்களே எனக் கவலைப்படுபவர்கள். இவர்களிடம்தான் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இவர்கள் தமிழ்மக்கள் உட்பட எவருக்கும் விடுதலை பெற்றுத் தரப் போவதில்லை. தேசியம் பேசுவோர் பாசிஸ்டுகளாக மாறக்கூடிய அபாயம் உள்ளது என்பதை மெய்ப்பிப்பவர்கள் இவர்களே. தூய இனவாதிகளில் இப்பொழுது ஒரு புதிய வகையினர் தோற்றம் பெற்றுள்ளனர். இவர்கள் ''தூய தமிழ் தலித்'' தலைமை பேசுவோர். இவர்கள் முன்னவர்களிலும் மிகுந்த ஆபத்தானவர்கள் - தாழ்த்தப்பட்டோரிடத்தும் மொழி வேற்றுமை பாராட்டுவோர். தமிழ் பேசும் பார்ப்பனர்களை ஏற்றுக்கொள்ளும் இவர்கள் தங்களை ''தலித்'' என அழைத்துக் கொள்வது', 'தலித்துக்களையும் மற்றவர்களையும் ஏமாற்றுவதற்கே.

இரண்டாவது வகையில் - தன்னுரிமை பேசுவோர் - பலரை அடக்கலாம். மார்க்சிய - லெனினியக் குழுக்கள், பெரியாரியக் குழுக்கள் என இவர்கள் பலர். இவர்கள் மொழி, இன, உணர்ச்சி/பெருமை அடிப்படையில் தமிழ்த் தேசியம் பேசுவதில்லை. இதுவே இவர்களை முதல்வகையிடமிருந்து பிரித்துக் காட்டும் நல்ல பண்பாகும். தங்களுடைய அரசியல், பண்பாட்டு, பொருளியல் வாழ்வைத் தீர்மானித்துக் கொள்ளும் (Right to Self-Determination) உரிமை ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் உண்டு என்ற லெனினிய அடிப்படையிலும், பாட்டாளி வர்க்கம் தேசிய அடிப்படையில் ஒன்று திரள்கிறது என்ற கோட்பாட்டு அடிப்பனுலும் தமிழ்த் தேசியத்தை முன் வைக்கின்றனர். ஆனாலும், இவர்களில் பலர் 'சுயநிர்ணய உரிமை' என்பதை அந்தந்த தேசிய இனமக்களை தங்களின்கீழ் ஒன்று திரட்டுவதற்கான ஒரு 'போர்த்தந்திரமாகப் பயன்படுத்துகின்றனர். இது இவர்களின் பெரிய பலவீனமாகும். தங்களுடைய குறிக்கோள் எது என்பதில் இவர்களிடமுள்ள தெளிவின்மையையே இது காட்டுகிறது. இது மீண்டும் இவர்களை 'அகில இந்தியப் புரட்சிக்கே' இட்டுச் செல்லும். சுய நிர்ணய உரிமை'' / ''சுய நிர்ணயம்'' இந்தியக்கூட்டாட்சி/ தமிழ்த்தேசியக் குடியரசு ஆகிய இவை பற்றிய விரிவான விவாதம், தொலைநோக்கும், இடைக்காலக் கோரிக்கை ஆகியனவற்றை வரையறுத்துக் கொள்ள உதவும், அணிகளிடையே உள்ள பல குழறுபடிகள் நீங்கி காலப்போக்கில் ஓரணியாய் வலுவுடன் ஒன்றுபடவும் உதவும்.

தலித் விடுதலையை முன்னிருத்தி தமிழ்த் தேசியம் பேசுவோர் தங்கள் கொள்கையில் மிகவும் தெளிவாக உள்ளனர். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையே மற்றனைத்து மக்களையும் விடுவிக்கும். இதுவே தமிழ்த் தேசிய விடுதலையாக மலரும். தலித் தலைமையிலான தேசியப் புரட்சியே உண்மையான மக்கள் குடியரசுக்கு வழிவகுக்கும் என்பது இவர்கள் பிற தமிழ்த் தேசியவாதிகளுக்கு எதிராக முன் வைக்கும் விவாதம். தமிழ்த் தேசிய இயக்கங்களும், பொதுவுடைமை இயக்கங்களும் தலித் விடுதலையே



படிப்பகம்

www.padippkam.com

எல்லாவற்றிற்கும் அடிப்படை என்பதை மறுக்கின்றன என்பது இவர்களின் குற்றச்சாட்டு. ஈழச்சிக்கலிலும், தமிழ்த்தேசிய சிக்கல்களிலும் இவர்கள் காட்டும் அக்கறை, தலித் சிக்கல்களில் காட்டுவதில்லை என்பது இவர்கள் பேசும் தமிழ்த் தேசியத்தை அய்யத்திற்கு உள்ளாக்குகிறது என்பதும் தலித்துகளின் குற்றச்சாட்டு. கொடியன்குளம், தென்மாவட்டங்களில் நடைபெற்ற ஆதிக்க சாதிகளின் தாக்குதல் ஆகியவற்றில் தமிழ்த் தேசியவாதிகள் தலித்துக்களுக்கு ஆதரவாக எந்தப் போராட்டங்களையும் நடத்தவில்லை என்பதை தமிழ்த் தேசியவாதிகளுக்கு எதிரான தங்கள் விமர்சனங்களுக்கு ஆதாரமாக முன் வைக்கின்றனர்.

தலித் போராளிகளின் இந்த விமர்சனங்கள் நியாயமானவையாகும். தூய இனவாதிகளுக்கு தலித்துக்களின் இந்த விமர்சனங்கள் பற்றிய கவலையில்லை. நமக்கும் இவர்களைப் பற்றி கவலையில்லை. இவர்கள் - தூய தலித்வாதிகளும் இதில் அடங்குவர் - தமிழ்த் தேசியத்திற்கும், தலித்துகளுக்கும் எதிரிகள். ஆனால், இரண்டாவது வகையினர் தலித்துக்களின் கேள்விகளுக்கு விடை சொல்லியாக வேண்டும். தலித்துகளும், பிறரும் இவர்களைத்தாம் ''தமிழ்த்தேசியவாதிகள்'' என அங்கீகரித்து கேள்விகள் எழுப்புகின்றனர். எனவே இவர்களுக்கிடையிலான மனந்திறந்த விவாதம் ''மக்கள் விடுதலையை'' குறிக்கோளாய் கொண்ட இரு அணியினரும் நெருங்கி வர வழி வகுக்கும்; தலித்துக்கும் தமிழ் தேசியத்திற்கும் பகை மூட்ட நினைக்கும் எதிரிகளை விரட்டி அடிக்கும்.

ஒரே ஒரு அடிப்படையான நிலைப்பாட்டில் உள்ள முரண்பாடுதான் இரு அணிகளுக்கிடையே வேறுபாட்டை வளர்க்கிறது. தமிழ்ச் சமூக விடுதலை எல்லா மக்களுக்கும் விடுதலையைப் பெற்றுத் தரும்; தமிழ்நாடு சோசலிச/பொதுவுடைமைக் குடியரசில் தலித்துகள் விடுதலை பெற்ற மக்களாய்த் திகழ்வர் என்பது தமிழ்த்தேசிய அணிகளின் வாதம். ஆனால், இந்த வாதத்தின் அடிப்படைப் பலவீனமே தமிழ்ச் சமூகத்தின் அடித்தளத்தைப் பற்றிய புரிதலின்மையே ஆகும். இது பார்ப்பனியத்தால் கட்டமைக்கப்பட்ட சாதியச் சமூகம். இச்சமூகத்தை அப்படியே வர்க்கச் சமூகத்தோடு சமப்படுத்தி பாட்டாளி வர்க்க ஒற்றுமை, வர்க்கப் போராட்டம், சமூக விடுதலை எனப் பேசுவது பொருளற்றது. தமிழர் ஒற்றுமை என்று பேசுவது நகைப்புக்குரியது. அச்சப்படக்கூடியதும், ஏமாற்றுத் தன்மையை உள்ளடக்கியதும் அதனால் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியதும் ஆகும்.

பாட்டாளி வர்க்க ஒற்றுமை என்பதும் தமிழர் ஒற்றுமை என்பதும் சாதி ஒழிப்பிற்கான போராட்டத்தில் தான் அடங்கியுள்ளது. சாதி ஒழிப்பு என்பது சாதி என்ற இக்கொடிய அமைப்பு யாரை மிகவும் பாதிக்கின்றதோ, அவர்களுக்குத் தான் முதல் தேவையாகிறது. சாதி அமைப்பு யாருக்கு நலன் பயக்கின்றதோ அவர்களுக்கு தான் முதல் தேவையாகிறது. சாதி அமைப்பு யாருக்கு நலன் பயக்கின்றதோ அவர்களுக்கு சாதி ஒழிப்பு தேவையற்றதாகிறது. எனவே தலித்துகள் தங்கள் விடுதலைக்கு ஒன்று திரள்வதும், மேல் சாதித் தமிழர்கள்



படிப்பகம்

www.padippkam.com

அதற்கெதிராவதும் இயல்பாகிறது. எனவே மக்கள் விடுதலை/சமூக விடுதலை/ தமிழ்த் தேசிய விடுதலை எனப் பேசுவோர் தலித் மக்களுக்காய் போராட வேண்டியது முன் கட்டாயம் ஆகிறது. தலித் மக்களுக்கான போராட்டத்தின் ஊடாய்த்தான் தமிழ்த் தேசியத்திற்கான அணியைத் திரட்ட முடியும் என்பது தெளிவாகிறது. தமிழ்த் தேசியம் கருத்தியல் என்ற நிலையிலிருந்து பொருளியல் ஆற்றலாய் வளர இதுவே வழி.

சாதி ஒழிப்பு என்பது எப்படிச் சாத்தியம்? சாதி என்பது பிறப்பின் அடிப்படையாய் இருப்பதும், அதன் வழி தொழில்கள் குலஞ்சார்ந்து அமைந்திருப்பதும், அதனால் தலித் மக்கள் உடைமை அற்றவர்களாயிருப்பதும் தொடர்ந்து நீடித்து வருவதாலேயே சாதியும் தொடர்ந்து நீடிக்கிறது. குலத்தொழில் ஒழிப்பு, உடைமைப் பகிர்வு என்பது அதிகாரத்தை வென்றெடுப்பதில் அடங்கியுள்ளது. தமிழ்மக்கள் தங்கள் அரசியல்/பொருளியல் வாழ்வுகளைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை வென்றெடுப்பது என்பதுதான் இதன் பொருள். தமிழ்த் தேசியம் தலித்துகளுக்கு முன்கட்டாயம் என்பது தெளிவு பெறுகிறது. ஆனால், இவ்விடத்தில் ஒரு நியாயமான கேள்வி எழும். குலத் தொழில் ஒழிப்பு, உடைமைப் பகிர்வு ஆகியன சாதியை ஒழித்து விடுமா? உறுதியாய் ஒழித்து விடாது. அகமணன முறை தொடர்ந்து நீடிக்கும் வரை சாதியும் தொடர்ந்து உயிர் வாழும். தொடர்ந்த பண்பாட்டுப் புரட்சியே சாதியை முடிவுக்குக் கொண்டுவரும். எனவே இங்குங்கூட அணிகள் சுரண்டல் ஒழிப்பு/சாதி ஒழிப்பு ஜனநாயகம்/புரட்சிகர சமூக நீதி ஆகியவற்றை ஆழமாய் விவாதித்து, தொலைநோக்கு, உடனடிக் கோரிக்கை என்பனவற்றை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இப்பொழுது நாம் ஒரு தெளிவான புரிதலுக்கு வரலாம். ஒன்று தமிழ்த் தேசியப் போராட்டம் என்பது தலித் மக்களின் போராட்டத்தை முன்னெடுப்பதில் மூலமே வலுப்பெறும்; வர்க்க ஒற்றுமை, தமிழர் ஒற்றுமை என்பது இதன் மூலமே இயலும். தமிழ்த்தேசியம் என்ற கருத்தியல் இவ்வழிதான் பொருளியல் சக்தியாய் மாறும். இரண்டு, தலித் மக்கள் சம உரிமையும் விடுதலையும் பெறுவதற்கு தமிழ்த் தேசியம் தனக்கான அரசியல்/பொருளியல்/சமூக அமைப்புகளை நிறுவிக்கொள்ளும் தன்னதிகாரத்தைப் பெறவேண்டி உள்ளது. ஆக தமிழ்த் தேசிய விடுதலை என்பதும், தலித் விடுதலை என்பதும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. ஒன்றில்லாமல் மற்றொன்றில்லை. இந்த ஒன்றை மற்றொன்று வளர்த்துச் செல்லும் இயங்கியல் உறவு.

**இறுதியாய் ஒன்று, தலித்துகளை ஏளனத்தோடு பார்க்கும் தமிழ்த் தேசியவாதிகள் தலித்துகளுக்கும் எதிரிகள். தமிழ்த் தேசியத்திற்கும் எதிரிகள். தமிழ்த் தேசியத்தைப் பகையாகப் பார்க்கும்/பார்க்கத்தூண்டும் தலித்துக்கள்/தலித்துக்களுக்கு ஆதரவாய் துடிப்பவர்கள் தமிழ்த் தேசியத்திற்கும் எதிரிகள். தலித்துகளுக்கும் எதிரிகள்.** ●

*இக்கட்டுரை ஆழமாய்/விரிவாய் விவாதிக்கப்பட வேண்டியவற்றை குறிப்புகளாய் முன் வைத்துள்ளது. இவை எதுவுமே முற்ற முடிந்த முடிவுகளல்ல.*



படிப்பகம்

www.padippkam.com

# தலித்தியம் - சில குறிப்புகள்

ராசாத்தி

பார்ப்பனிய எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, சாதி ஒழிப்பு, பெண் விடுதலை இவற்றைப் பெரியாரியம் வலியுறுத்தினாலும் திராவிட இயக்கங்களின் செயல்பாடுகள் பிற்பட்டோர் நலனைப் பேணுவதாகவும், பார்ப்பனிய எதிர்ப்பு - கடவுள் மறுப்பு என்ற அளவில் அதைக் குறுக்குவதாகவும் அமைந்ததால் - தலித் விடுதலை - சாதி ஒழிப்பு என்பவை இன்று பெரியார் வழித் தோன்றல்களால் பொதுக்கூட்டங்களில் பேசக்கூடிய சடங்காக மாற்றப்பட்டுவிட்டன. பெண் விடுதலை என்பது மேம்போக்கான கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதார சீர்திருத்தங்கள், வரதட்சணை - கற்பழிப்பு இவற்றிற்கு எதிர்ப்பு என்றளவில் சுருக்கங்கண்டுள்ளது.

தமிழ் தேசியம், சாதி ஒழிப்புப் பற்றி மவுனம் காத்த மார்க்சிய இயக்கங்கள் மண்ணுக்கேற்ற மார்க்சியத்தை வளர்த்தெடுக்காது. அப்பட்டமான இறக்குமதி சரக்குகளாக மலினப்பட்டுள்ளன.

அம்பேத்காரியம் சாதி ஒழிப்பை மய்யப்படுத்திய போராட்ட அரசியலாக எதிர்கொள்ளப்பட்டாலும் பூனா ஒப்பந்தம், புத்தமதம் இவற்றைப் பற்றிய விமர்சனங்களும் உண்டு.

இத்தகையச் சூழலில், இன்று அம்பேத்காரியம், மார்க்சியம், பெரியாரியம் இவற்றில் வேர்களைக் கொண்டுள்ள, மனித விடுதலையை முன்வைக்கும் தத்துவமாக தலித்தியம் எதிர்கொள்ளப்படுகிறது.

வர்க்கக்கூறுகளுடன் சாதியக் கூறுகளை இணத்து சாதி ஒழிப்பு, தலித் விடுதலை, பெண் விடுதலையை மய்யப்படுத்தி போராட்டமாக வளர்த்தெடுப்பது என்பதுடன், நுகர்வுக் கலாச்சாரத்திற்கான எதிர்க் கலாச்சாரம், ஏகாதிபத்திய எதிர்ப்பு, உலகெங்கிலுமுள்ள ஒடுக்கப்பட்டோருக்கு ஆதரவு, இயற்கையோடிணைந்த வாழ்வு என்ற தலித் வாழ்வியலை முன்வைப்பது என்றளவில் தலித்தியம் மனித விடுதலையை நோக்கமாகக் கொண்ட உலகத்தன்மையுடைய வலுவுள்ள சித்தாந்தமாக முன்வைக்கப்படுகிறது.

இச்சிந்தனையை முன்வைத்து செயல்படும் தலித் இயக்கங்களுக்கு முற்போக்கு முகாமிலிருந்து கடுமையான எதிர்ப்பு வந்தவண்ணமிருக்கிறது.

சாதி அடையாளங்களை மறுத்து, கூலி உயர்வுப் போராட்டம், ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் என்று செங்கொடியின் பின்னால் அணிவகுக்கச் செய்தவர்கள், கீழாகப் புரட்டும் போராட்டத்துக்கு தலித்துகள் தயாரான பின் தலித் அரசியல் சாதி அரசியலாக சுருங்கிவிட்டது என்ற குற்றச்சாட்டை வைக்கிறார்கள்.

சித்தாந்த தலைமை என்ற போர்வையில் முற்போக்கு - திராவிட அரசியலில், உயர்சாதி பிற்பட்ட சாதி தலைமையை ஏற்றுக்கொண்டதைப் போலவே, இப்போதும் அவர்கள் தலைமையை ஏற்றுக்கொள்ள வேண்டம் என்ற எதிர்பார்ப்பில், அல்லது உயர் சாதி - பிற்பட்ட வகுப்பினரே தலைமையேற்க வேண்டும் - முடியும் என்ற நம்பிக்கையில்,



படிப்பகம்

www.padippkam.com



தனியான தலித் அமைப்புக்கள் வைத்துக்கொள்வது ''தலைமைக்காகத்தான்'' என்று கூசாமல் வரையறுப்பதும் முற்போக்கு முகாமில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

அடுத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசிய இன நெருக்கடியே இன்று உடனடியாக எதிர்கொள்ளப்பட வேண்டியவை. இதற்கு சாதி ஒடுக்குமுறையை பெரிதுபடுத்தாத நிபந்தனையற்ற ஒற்றுமை தேவை என்று பிரச்சனையை திசைதிருப்பும் செயலில் முற்போக்கு வாதிகளில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

பாராளுமன்றப் பாதையைத் தேர்ந்தெடுத்தபின், எண்ணிக்கையில் அதிகமுள்ள தலித் அல்லாதவர்களைக் கருத்தில் கொண்டு சாதி ஒழிப்புப் பற்றி வேண்டுமென்றே மெத்தனமாயிருந்த முற்போக்கு இயக்கங்கள் இப்போதும் அதே தொனியை வேறுவார்த்தைகளில் வெளிப்படுத்துகின்றன. அதாவது தலித்துக்கள் தனித்துச் செயல்பட்டாலும் தலித் அல்லாத மக்களின் - சனநாயக புரட்சிகர சக்திகளின் வலுவான ஆதரவு தேவைப்படுவதால் அவர்களைப் புறக்கணித்து அமைப்பு கட்டிவிட முடியாது என்பதே அது.

தலித் இயக்கங்கள், தங்கள் வோட்டு வங்கிகளைப் பாதிக்கும் வலுவான அரசியல் சக்தியாக உருப்பெறவில்லையென்று குளிர் காய்ந்து கொண்டிருக்கிறார்கள் திராவிட அரசியல் கட்சிகள். தேவேந்திரகுல வேளாளர், பறையர், அருந்ததியர் என்ற பிரிவினையும் இவர்களுக்கு பக்கபலமாயிருக்கிறது.

இச் சூழ்நிலையில் தலித் இயக்கங்கள் இவற்றை எப்படி எதிர்கொள்கின்றன?


அம்பேத்கர் நூற்றாண்டு கொண்டாட்டங்களைத் தொடர்ந்து தமிழகத்தில் தலித் எழுச்சி முன்னெப்போதும் இல்லாத அளவு ஏற்பட்டுள்ளது என்பது பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

தலித் விடுதலையையும், தமிழ் தேசியத்தையும் மய்யப்படுத்திய திருமாவளவன் தமிழகத்தில் சுமார் நான்கைந்து மாவட்டங்களில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பையும், உஞ்சைராசன் 'தலித் பண்பாட்டுப்' பேரவை'யை ஓரிரு மாவட்டங்களிலும், பொழிலன் 'ஒடுக்கப்பட்டோர் விடுதலை முன்னணி'யையும், வினோத் செங்கறப்பட்டு மாவட்டத்தில் 'ஆதித்தமிழர் பேரவை' என்ற இயக்கத்தையும், சந்திரபோஸ் 'இமானுவேல் பேரவையையும், அரங்க குணசேகரன் 'தமிழ் தேச மனித உரிமை கழகத்தை'யும், அதியமான் - கல்யாணசுந்தரம் ஆகியோர் 'அருந்ததியினர் இயக்கங்களை'யும் கட்டி எழுப்பி வருகின்றனர். மேற்கண்ட இயக்கங்களில் ஒத்த கருத்துடைய இயக்கங்கள் இணைந்து கூட்டுச் செயல்பாட்டுத் திட்டங்களையும் கொண்டுள்ளனர். ஆதிக்க சக்திக்கு துணை போகிறவர்கள் இவர்களை ''சாதியாளர்கள்'' ''வன்முறையாளர்கள்'' என்ற வர்ணிப்பில் முடக்கினாலும், கிராமப்புறங்களில் இவர்களின் செயல்பாடுகள் அர்த்தமுள்ளவையாக அதிக அளவில் தொடர்கின்றன. அரசியல் ரீதியாகவும் தலித்துகளை அணிதிரட்டி வருகின்றனர்.



படிப்பகம்

www.padippkam.com



பால் ஒடுக்குமுறை, நிறவெறி, இனவெறிக்கெதிரான, தனி அமைப்புக்களைப் போல, சாதி ஒழிப்பை மய்யப்படுத்திய தலித் அமைப்புகள் அவசியமென உணரப்பட்டுள்ளது. முற்போக்கு இயக்கங்களில், கிராம அளவில் கூலி உயர்வுக்காகப் போராடியும் சாதிகள் இணைய முடியவில்லை. மாறாக, சில இடங்களில் கூலி உயர்வுப் போராட்டமே ஒடுக்கப்பட்டோர் மீதான வன்முறையாகப் பாய்ந்திருக்கிறது. பிற்பட்டவர்களும், தலித்துகளும் இணைந்து அமைப்புக் கட்டுவதினாலேயே சாதி ஒழிப்பு நிகழ்ந்துவிடாது என்பதற்கான படிப்பினை வரலாற்றில் உள்ளது.

இதை உணர்ந்தே தனி தலித் அமைப்புக்கள் - இயக்கங்கள் எழுப்பப்பட்டுள்ளன. சாதி ஒழிப்பு என்பது அடைந்து தீரவேண்டிய லட்சியமாக இருந்தாலும், இடைநிலையில் சாதி ஒற்றுமைக்கான சுமூகமான சூழலை வளர்த்தெடுப்பதில் அம்பேத்கர் இயக்கங்கள் அரசியல் ரீதியில் பலம் பொருந்திய, தனக்கென தனிகவனத்தை ஈர்க்கின்ற அமைப்புகளாக எழுப்பப்படுவது தவிர்க்க முடியாததாகிறது.

**தலித் அல்லாதோர் பெரும்பான்மையாக இருக்கும் நிலையில், அவர்களின் ஆதரவு இல்லாமல் பாராளுமன்றப் பாதையில் தலித் இயக்கங்கள் பெரிதாக சாதிக்கமுடியாது என்பது உண்மைதானென்றாலும், பிற்பட்ட சாதியினருக்கும், வர்க்க ரீதியாக ஒடுக்கப்பட்டோருக்கும் அதே நிலைதான். ஒருவருக்கொருவர் பரஸ்பரம் ஆதரவு தேவை என்ற நிலையில், அதை தலித் இயக்கங்களின் தேவையாக மட்டும் வர்ணிப்பதில் அரசியல் தொனிக்கிறது.**

தலித் இயக்கங்களுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு, தமிழ் தேசியம் இவற்றை தலித் விடுதலைக்கு மிக அருகாமையில், வைத்துப்பார்த்தாலும் அவற்றை உடனடித் தேவையென மையப்படுத்தி தலித் பிரச்சனையை ஒத்திப்போடுவதில் இசைவு இல்லை. இதை திசைதிருப்பும் உத்தியாகவே கணிக்கின்றன.

**தலித்துகளுடன் தலித் ஆதரவாளர்கள் தங்கள் விடுதலையைக் குறித்து அக்கறை கொண்டிருக்கும் பட்சத்தில் தலித் விடுதலையை முன்னெடுத்துப் போராடுவதையே நோக்கமாகக் கொள்ள வேண்டும். தலித் தலைமை இருந்தால்தான் என்ன, குடியா முழுகிவிடும்?**

தலித் அல்லாதோரின், முற்போக்கு இயக்கங்களின் குற்றச்சாட்டுக்கு, வலுவாகக் கட்டியெழுப்பப்படும் தலித் இயக்கமே சரியான பதிலாக இருக்கமுடியும்.

தலித் இலக்கிய களம் இன்று வலுப்பெற்றுள்ளது. தலித் பேனா பிடித்துவிட்டதைக் கண்டு இலக்கிய ஆச்சாரம் போச்சு. குய்யோ முறையோ என்று கூக்குரலிடுகிறார்கள். தலித் எழுதுவதுதான் தலித் இலக்கியமா, என்று போட்டிக்கு விட்டு தலித் அல்லாதவர்கள் தங்களுக்கு ஆதரவு சேர்க்கிறார்கள். தலித்துகள் எழுதுவதே தலித் இலக்கியம் என 'கோடங்கி 'தலித் காலாண்டிதழ் தகுந்த விளக்கம் அளித்துள்ளது (காண்க - 'கோடங்கி'



படிப்பகம்

www.padippkam.com



ஏப்ரல் - சூன் 96) தலித் இலக்கியம் எப்படி இருக்க வேண்டும் என்ற இலக்கண முயற்சிகளுக்கும் குறைவில்லை. பார்ப்பனியத்திற்கு எதிரான தலித்தின் கலகக்குரல், கிறித்துவ மதத்தில் சாதிய ஒடுக்குமுறைக்கான எதிர்ப்பு, தலித் விடுதலையொட்டிய தலித் அரசியல், பெண்ணியக் குரல், எல்லாவித அமைப்புக்கும் எதிரான குரல், விளிம்பு மக்களின் வாழ்வியல், தலித் பண்பாட்டைப் பிரதானப்படுத்துதல் என்று பன்முகப் பரிமாணங்களுடன் நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை என்று வடிவங்களை ஏற்றும், உடைத்தும் படைப்புக்கள் வந்த வண்ணமிருக்கின்றன. உலகத்தரத்துக்கீடான நல்ல தமிழ் நாவல் இன்னும் எழுதப்படவில்லை அல்லதுஒரு நாவல்தான் எழுதப்பட்டுள்ளது என்ற குரல்களுடன், இன்னும் சிறந்த தலித் படைப்பு வரவில்லை, விரைவில் வெளிவந்துவிடும் என்ற குரல்களும் கேட்டுக்கொண்டிருக்கின்றன. இது ஒருபுறமிருக்க, தலித் இயக்கங்கள் தலித் இலக்கியத்தால் புத்துணர்ச்சியும் உத்வேகமும் பெற்றுள்ளன என்பதை மறுக்கமுடியாது. இயக்கம் சார்ந்த இலக்கியம் என்பது ''தல்த் அரசியலை'' மய்யப்படுத்திய ''தலித் பார்வை'' ''தலித் அணுகுமுறை'' என்பதாகத்தான் அர்த்தங் கொள்ளப்படவேண்டும். சாதி ஒழிப்பு என்பது பண்பாட்டு, கருத்தியல் நிகழக்கூடிய சாத்தியத்தினாலேயே தலித் இலக்கியமும் தலித் கலைகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. நிறப்பிரிகை, ''கோடாங்கி'', 'மனுசங்க' போன்ற இதழ்களின் செயல்பாடுகளோடு 'விளிம்பு ட்ரஸ்ட்' சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. புதுவை, மதுரை, நெய்வேலி என்று தொடங்கிய தலித் கலை விழாக்கள் இன்று தமிழகம் முழுவதும் போர்ப்பறையை முழங்கிவிட்டன. நுகர்வு கலாச்சாரத்தின் மாற்றாக, தலித் வாழ்வியல் முன்வைக்கப்படுகிறது. இயற்கையோடிசைந்த எளிய வாழ்வு, குழு வாழ்க்கை முறை. சிறுதெய்வ வழிபாடு, உடலுழைப்பு, சாவு குறித்த தலித் அணுகுமுறை போன்றவை தலித் வாழ்க்கை முறையில் பிறர் போற்றக்கூடிய உயர்ந்த அம்சங்களாக முன் வைக்கப்படுவதில் பார்ப்பனிய-நுகர்வு கலாச்சாரத்திற்கு சரியான எதிர் மாற்றாக தலித் பண்பாடு இருக்குமென்பதில் அய்யமில்லை. அழிவுக்கு, கீழ்மைக்கு உள்ளாக்கப்பட்ட தலித் கலைகள் இன்று குறியீடாக மேடையேற்றப்பட்டு வருகின்றன.


வர்ணாசிர தர்மத்தின் சாதி அடுக்கு முறையை எதிர்ப்பதில் சாதி நிலபிரபுத்துவம், முதலாளியம் சார்ந்த அனைத்து நிறுவனங்களும் கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன. மாற்றுக் கலாச்சாரம், மாற்றுக்கல்வி, அதீத தொழில் மயமாதலில் 'அந்நியமாதலுக்கான, எதிர்ப்பு, மாற்று மருத்துவம், ஏகாதிபத்திய எதிர்ப்பு, தேசியம், பெண் விடுதலையை முன்னிறுத்தி குடும்பம், சமூகம் ஆகிய நிறுவனங்களையும் கற்பு, ஒழுக்கம் போன்ற கருத்தியல்களையும் கேள்விக்குள்ளாக்குதல், எல்லாவிதமான அமைப்பு சார்ந்த அதிகாரத்தையும் கேள்விக்குள்ளாக்குதல் என்றளவில் தலித்தியம் மனித விடுதலையை நோக்கிய அடிப்படையாகத் தெரிகிறது.

இவ்வகையில், முற்போக்கு முகாம்களின் எதிர்ப்பு என்பது அவர்கள் கொண்டுள்ள சாதீய அபிமானம் என்ற அளவிலேயே புரிந்துகொள்ளப்படுகிறது.



படிப்பகம்

www.padippkam.com



தலித் இயக்கங்கள் வேறுசில முக்கியமான பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. எல்லாவித அமைப்புகளையும் எதிர்க்க அமைப்பு ரீதியாகத்தான் போராடவேண்டியதிருக்கிறதென்பது ஒருபுறமிருக்க, தலித் இயக்கம் என்பதே வானவில் கூட்டணிபோலிருக்கிறது. பகுதிவாரியான பல்வேறு தலித் இயங்கங்களிடையே உள்ள ஒத்திசைவு என்பது ''நபர்கள்'' பற்றிய பிரச்சினையாக உள்ளது. தன்னார்வ நிறுவனங்களை சேர்த்துக்கொள்வதா, வேண்டாமா என்பது தொடங்கி, தமிழ், தேசீயம்பற்றியதான, இரட்டை வாக்குரிமை பற்றியதான கருத்து வேறுபாடுகளும் இவற்றில் அடங்கும். தேவேந்திரகுல வேளாளர், என்பதும் கட்டுக்கோப்புடன் இல்லை. இவை சாதாரணமாக இயக்கம் சார்ந்து எதிர்கொள்ளப்படும் சின்ன பிரச்சனைகள் என ஒதுக்கிவிட முடியாது. அது குறித்த, திட்டமிட்ட தொடர்ந்த முயற்சி தேவை. பொருள் விரயமும், காலவிரயமும் இந்த ஒருங்கிணைப்பு முயற்சிகளிலிருப்பதால் வலுவான போராட்டத்தை முன்வைக்கமுடியாத சூழ்நிலை. படித்த தலித்துகள் இவ்வியக்கங்களிலிருந்து அந்நியப்பட்டிருப்பதும், அல்லது நிறுவனம், தொழில் சார்ந்த உதிரி அமைப்புகளாகச் செயல்படுவதும் பெரிய குறையே.

அடுத்து, தலித் இயக்கத்திற்கு தலித் அல்லாதவர்கள் அல்லது ஆதரவாளர்கள் செய்யக்கூடியது குறித்த கேள்வி பேரா. பா. கல்யாணி, நெய்வேலி, தலித் கலைவிழாவில் வெளியிடப்பட்ட ''தலித் கலை இலக்கியம் அரசியல்'' என்று நூலில் தலித் ஆதரவாளர்கள் என்ன செய்யலாம் என்ற தலைப்பில் விரிவாக ஆராய்ந்துள்ளார். ''தலித்துகள் விழிப்புணர்வோடுதான் இருக்கிறார்கள் அவர்களை நாம் போய் தட்டியெழுப்ப வேண்டிய அவசியமில்லை. அதனை தலித் அமைப்புகளே பார்த்துக்கொள்ள விட்டுவிடலாம்'' என்று அவர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கதாயிருக்கிறது.

தலித் அல்லாதவர்கள் தங்கள் சொந்த சாதிக்கு துரோகம் செய்யவேண்டும் என்று சிலர் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். இது அவர்கள் தலித்துகளுக்கான பாதுகாவலர்கள் என்ற தொனியில் சொல்லப்பட்டு வருகிறது. தலித் விடுதலையை முன்வைத்தே சாதி ஒழிப்பும் - ஒட்டுமொத்த மனித விடுதலையும் என்பதை அவர்கள் உணரவேண்டும். துரோகம் என்பது தன்னிச்சையாக நிகழவேண்டியது என்ற தொனியும் அதில் ஒலிக்கிறது. சொந்த சாதிக்குத் துரோகம் என்பது தலித் அல்லாதவர்களின் வரலாற்றுக் குற்றங்களும் குற்றமனப்பான்மையும் சேர்த்துத்தான்.

தலித் மக்களின் அன்றாட வாழ்க்கை முறை, பழக்கவழக்கங்கள் குற்றங்களாக வரையறுக்கப்பட்டதில், பார்ப்பனிய மதிப்பீடுகளில் தங்கள் பங்கும் உள்ளது என்பதை உணர்வதன் மூலம் தலித் மக்களின் பாதுகாவலர்கள் என்ற மாயையிலிருந்து விடுபடமுடியும். எல்லாவிதமான முன் நிபந்தனைகளுமின்றி தலித்திய சித்தாந்தத்தின் அடிப்படையில் தலித்துகளுடன் இணைந்து போராடுவதொன்றே சுயக்கட்டுடைப்பு, சாதியக்கட்டுடைப்புக்கு வழிவகுக்கும். ●



படிப்பகம்

www.padippkam.com

# இன விடுதலை – சாதி விடுதலை

டாக்டர் கரு. அழ. குணசேகரன்

''இந்தியா சாதியத்தைக் கொண்ட ஒரு சமச்சீரற்ற நாடாகும். நில பிரபுத்துவ சாதியமைப்பு தினமும் சாதிவெறி மத வெறியைத் தூண்டி வரும் கிராமங்களைக் கொண்டு விளங்குகிறது. நகரம் முதல் கிராமங்கள் வரை தினமும் அன்றுதொட்டு இன்றுவரை நித்தமும், நேரிடையாகவும், மறைமுகமாகவும் அரசியல் கொடுமைகள் நடந்து வரும் மோசமான நாடு இது. பொருளாதாரம், அரசியல், பண்பாடு ஆகியவற்றில் சாதியத்தின் செல்வாக்கு மேலோங்கி விளங்கும் நாடாகத் தொடர்ந்து இயங்கி வருகிறது. இங்கு சாதியும், வர்க்கமும் தனித்தும், இணைந்தும் செயற்பட்டு வரும் வடிவங்களாக உள்ளன. 'நிலவுடைமைக் காலத்தில் வர்க்கத்தின் பதிலாக சாதியும் அமைந்தது என்பதோடு சாதியத்தின் பிற பரிமாணங்கள் வர்க்கத்தின் விளக்கங்களையும், தாண்டிச் செயல்பட்டன. இங்கு சாதியும் அனைத்தும் தழுவிய தன்மையில் செயல்பட்டது கவனிக்கத்தக்கது.''

(சாதியம், கோ. கேசவன் ப. 141)

ஒடுக்கப்பட்ட மக்கள் காலங்காலமாகத் தங்கள் மேல் சாதியத்தின் பெயரால் தொடுக்கப்படும் கொடுமைகளை சக்திக்கேற்ப எதிர்த்து வந்துள்ளனர். பல நேரங்களில் சமரசங்களும் கொண்டுள்ளனர். எனினும், மொத்தத்தில் பயனடைந்தவர்களாக மேல் சாதிக்காரர்களே உள்ளனர் என்பதே வரலாறு முழுதும் நாம் கண்டுள்ளோம்.

இன்று, தமிழ்நாட்டில் தமிழ் மரபு என்பது பார்ப்பனர்களின் மரபா, சைவ வேளாளர்களின் மரபா, தலித்துகளின் மரபா எனும் ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்தச் சூழலில் தமிழ் இன விடுதலை - சாதி விடுதலை என்பது பற்றிய சிந்தனை தொடர்ந்து எழுந்துள்ளது. தமிழினம் பற்றிப் பேசுவோர் பறைத்தமிழ் என்னும் சாதிய வர்க்கத்தோடு பேசும் கேவலப் போக்கையும் கவனத்தில் கொண்டு இன விடுதலை - சாதி விடுதலை என்பது பற்றி சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

இன்று தலித்துகள் அரசியல், பொருளாதாரம், பண்பாடு ஆகியவற்றில் பங்கெடுப்பு கூடுதலாக எடுக்க முயன்றுவரும் காலம் தொடங்கி உள்ளது. நிலவுடைமையின் ஆதிக்கக் கொடுமைகள் நேரிடையாகவும், மறைமுகமாகவும் தொடர்ந்து முன்பை விடக் கூடுதலாகச் செயற்பட்டு வருகின்றன. வர்க்கப் போராட்டம் என்பது எல்லாச் சமுதாயங்களுக்கும் பொதுவாக இருப்பினும், இந்தியாவில் வர்க்கப் போராட்டம் எனும் பெயரில் சாதியப் போராட்டம் என்பது வினையாற்றாமல் போனதும், ஒருவித மோசடி. நகர்புறத் தொழிற் கூடங்களிலும், கிராமங்களிலும் சாதிய முறைமை என்பது உற்பத்தி முறைகளினூடே தொடர்ந்து செயற்பட்டு வந்துள்ளன. இன்னும் இந்நிலை தொடர்கின்றன. தலித்துகளிடம் அரசியல் அறிவு என்பது இன்னும் தொலைநோக்குப் பார்வையோடு முன்னெடுத்துச் செல்லப்படவேண்டிய தேவை உள்ளது. எனினும், சாதி விடுதலையின் படிகள் வளர்ந்து வருவது என்பது உறுதியாகியுள்ளது. இந்தப் பின்னணியில் தான் இனவிடுதலை பற்றிய



படிப்பகம்

www.padippkam.com



சிந்தனை தலித்துகள் பார்வையில் கவனங்கொள்ளப்படுகிறது. இன விடுதலைப் பற்றி பேசுவோர் அறிஞர் அம்பேத்கர் அவர்கள் கூறும் கருத்தை மனங்கொள்ள வேண்டும்.

'அரசியல் சீர்திருத்தவாதிகள் அவர்கள் விரும்பும் எந்த வழியில் சென்றாலும் சரி, அரசியல் அமைப்பு ஒன்றினை உருவாக்கும் போது நம் நாட்டில் நிலவும் சமுதாய அமைப்பிலிருந்து எழுகின்ற பிரச்சனையைப் புறக்கணித்து விட்டு அரசியல் அமைப்பை உருவாக்கிவிட முடியாது'' (சாதி ஒழிப்பு ப. 61, தொகுதி 1) டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தொடர்ந்து இக்கருத்தை ஒட்டிப் பேசும் போது அரசியல் புரட்சிக்கு முன்பே, சமூக, மதம் சம்பந்தமான புரட்சிகள் ஏற்படுகின்றன, என்பதற்கு வரலாற்று ஆதாரங்களை நிறுவச் செய்வார்.

ஆதிக்கச் சாதியும், வர்க்கமும் அன்றாட நிர்வாக முறைமைகளில் தாழ்த்தப்பட்டோருக்கு சம உரிமைகளைத் தர மறுக்கிறது. ஒதுக்கி வைக்கிறது. இதனால், சாதிப் போராட்டம் தொடர்ந்து ஆங்காங்கே நடைபெற்று வருகிறது. 12-ஆம் நூற்றாண்டில் கர்நாடகத்தில் சாதிகளை ஒழிக்கக் கிளம்பிய பசவர் இயக்கத்தில் சேர்ந்தவர்கள் இன்று ''லிங்காயத்து'' கள் என்னும் புது சாதியானார்களே தவிர சாதி ஒழியவில்லை. 15-ஆம் நூற்றாண்டின் கடைசியில் சாதிகளை ஒழிக்கக் கிளம்பிய கபீர்தாஸ் இயக்கத்தில் சேர்ந்த இந்து முஸ்லீம் நெசவாளிகள் இன்று கபீர் பாந்தி'களென்னும் புது சாதியானார்களே தவிர சாதி ஒழியவில்லை. 17-ஆம் நூற்றாண்டின் முடிவில் சத்தியமே கடவுளென்று சாதிகளை ஒழிக்கக் கிளம்பிய ஜகஜீவன்தாஸ் என்னும் ராஜபுத்திரரின் இயக்கத்தில் சேர்ந்தவர்கள் இன்று 'சத்நமி'யென்னும் புது சாதியானார்களே தவிர சாதி ஒழியவில்லை. 19-ஆம் நூற்றாண்டின் முடிவில் சாதிகளை ஒழிக்கக் கிளம்பிய ரயிதாஸ் இயக்கத்தில் சேர்ந்த சமார்கள் இன்று புது சாதியானார்களே தவிர சாதியை ஒழிக்கவில்லை. (சாதி ஒழிப்பின் தேவையும் தமிழக விடுதலையும். தமிழரசன் பக்கம் 5-6) நமது இலக்கியங்களில் சமண இலக்கியம், பவுத்த இலக்கியம், சைவ, வைணவ, கிறித்துவ இலக்கியம் என்று மட்டும் பிரித்து வரலாறு காணும் போது கண்டுகொள்ளாதவர்கள் சாதி அடிப்படையில் அணுகும்போது மட்டும் அலறினால் அதை எந்த நியாயத்தில் சேர்ப்பது? (ஓம் சக்தி இதழ் சு. பஞ்சாங்கம் பக்-35) இங்கு நியாயங்கள் தலித்துகள் என்றாலே பிறழ்ந்து விடுகின்ற நடைமுறையை நாம் நாள்தோறும் அன்றுமுதல் இன்று வரை தொடர்ந்து கண்டு வருகிறோம். தலித்துகளுக்கான இடம் பற்றி இன விடுதலையினர் முன் வைக்கவில்லை. மாறாக தமிழ் இனம், தமிழ்த்தேச விடுதலை பற்றி பேசுவார்.

***''தமிழ் என்றால் வா தலித் என்றால் போ''*** என்னும் வாதத்தை முன்வைத்தே இன விடுதலை பற்றிச் சிந்திக்கின்றனர்.

**ஒரு இனம் விடுதலை வேட்கை பெறுவது என்பதன் பொருள் முக்கியமானது. என்ன தேவைக்காக விடுதலை என்பது முன்னிறுத்தப்படுகிறது என்பதே விடுதலைக்கான போராட்டத்தில் முதன்மையாகும். இந்திய தேசியம் பெற ஆங்கிலேயரோடு செய்த**



படிப்பகம்

www.padippkam.com



**போராட்டத்தில் தலித்துகள் ஈடுபாடு கொள்ளவில்லை. காரணம் - ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவுக்கு வந்தபிறகே தலித்துக்களுக்குப் பள்ளிப் படிப்பு, அரசு வேலை வாய்ப்பு, அரசியலில் பங்கெடுப்பு, தீண்டாமை ஒழிப்பு என்பதான பல பிரச்சனைகள் ஓரளவு தீர்க்கப்பட வாய்ப்பு ஏற்பட்டன. இந்துத்துவம் எனும் பெயரில் விளைந்த சாதியக் கொடுமைகளால் 'இந்தியா' சுதந்திரமடைய தலித்துகள் முனைப்புக் காட்டவில்லை. பிரச்சனைகளையும், தேவைகளையும் முன் வைத்தே விடுதலைப் போராட்டம் வலுப்பெறும்.**

இன விடுதலை பேசுவோர் தலித்துகளின் உரிமைகள், பிரச்சனைகள் என்பவை குறித்துச் சரியான பார்வை கொள்ளாதுள்ளனர். இன விடுதலைப் போராட்டத்துக்கு முன்பு குறிப்பிட்ட அந்த இனத்துக்குள் சம உரிமை விளங்க வேண்டும். சமத்துவமற்ற சமுதாயத்தில் கீழ்க்கட்டு மக்கள் ஒருங்கிணைந்து அவ்வப்போது தமக்கான உரிமைப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பது இயல்பு. தலித்துகளின் பிரச்சனை பற்றிச் சிந்திக்காமல் இன விடுதலை பேசுவோரை சந்தேகிக்க வேண்டியுள்ளது. சுரண்டல் ஆதிக்கம் நீடிக்கவும், கட்டிக் காக்கவும், இன விடுதலை எனும் பேரில் மீண்டும் வழிகோல் ஏற்படுத்த முனைகின்றனர் எனக் குற்றம் சாட்ட வேண்யடிவர்களாகவே அவர்கள் உள்ளனர். நடந்து வரும் சாதி மோதல்கள் யாவும் தனி மனித உரிமை பாதிப்புகள் எனக் கணிக்கத் தவறுபவர்கள் ஆவர். சாதி ஒழிப்பு இயக்கங்கள் இங்கு 20 ஆம் நூற்றாண்டில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், தந்தை பெரியார் போன்றவர்களால் முன்னெடுக்கப்பட்டன. இன்று அவை வலுப்பெற்று வருகின்றன. சாதிப் பிரச்சனை - சமூகப் பிரச்சனை - இனப்பிரச்சனை என அறியாத சிலர், பிரச்சனையைத் தள்ளிப்போடவும், பிரச்சனைகளை திசைதிருப்பவும் பல்வேறு உத்தி முறைகள் செய்கின்றனர். அவற்றில் ஒன்று "இனவிடுதலை" என அய்யம் கொள்ளத் தக்க வகையில் தலித்துகள் பிரச்சனைகளை அவர்கள் விடுத்துப் பேசுகின்றனர்.

1. தேசிய தன்னுரிமையை (சுயநிர்ணய உரிமை) மறுக்கும் மய்ய நீரோட்டப் பொதுவுடைமைக் கட்சிகள்.
2. தேசியத் தன்னுரிமையை முன் வைக்கும் மார்க்சிய - லெனினியக் குழுக்கள்.
3. தன்னுரிமை முழக்கத்தை முன்வைத்து தமிழ்த் தேசிய இன எழுச்சிச் சக்திகளுடன் இணைந்து செயல்படும் தமிழ்த் தேசப்பொதுவுடைமைக் கட்சி (பேரா. அ. மார்க்ஸ், நிறப்பிரிகை)


மேற்கண்ட மூன்றுவகை இந்திய மார்க்சியர்கள் அனைவருமே தலித் விடுதலையை முன்னிறுத்துவோராக இல்லை.

சாதி அமைப்பு என்பது நிலபிரபுத்துவத்தால் காக்கப்படும் ஒரு சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பு என்பதை மனங்கொள்ள வேண்டும். நிலங்களையும் அதிகாரங்களையும் கைப்பற்றாமல் சாதிகள் ஒழிக்கப்பெறப் போவதில்லை. தலித்துகளில் அடிப்படை



படிப்பகம்

www.padippkam.com



உரிமைகளைப் பற்றி சிந்திக்காமல் சாதியப் பிரச்சனைகளைச் சரிசெய்யாமல் தேசிய இனவிடுதலை (தமிழ்/இந்தியா) என்பது சாத்தியமில்லை. காலப்போக்கில் சரியாகிவிடும் என்றோ அடுத்தக்கட்ட போராட்டம் என்றோ இன விடுதலை பேசுவோர் தள்ளிப்போடுவார்களால் தொல்குடிமக்களால் தமிழ் இனத் தலித் மக்களுக்குத் துரோகம் இழைக்க வழி வகுக்கும் போராட்டமாகிவிடும் ஆபத்து உள்ளது.

இந்தியாவில் மேல் சாதியினர் தனித்தனியாகப் போராடும் பலம் பெற்றவர்கள். ஆனால், தலித் போராட்டம் என்பது நாடு தழுவிய அளவில் தலித் சமூகங்களுக்கு இடையே ஒற்றுமையினாலும், உழைப்பினாலும் உருவாக வேண்டியதாகும். தலித் என்ற மொத்த அடையாளமே பலம் பெற வளர்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் இந்திய தேசிய இனம், தமிழ்த்தேசிய இனம் என்பது மேலும் பிளவுகளை உருவாக்கும். தலித்துகளின் அரசியல் விடுதலைக்குப் பிறகே இனவிடுதலை போராட்டம் எழவும், வெற்றி பெறவும் வாய்ப்புகள் நிறைய உள்ளன.

சாப்பறை கொட்டுவது, கூலிக்கு மாரடிப்பது, பிணம் சுடுவது, செத்த மாடு தூக்குவது, மலம் அள்ளுவது, நகர் சுத்தப்பணி செய்வது, ஊர்ச்செய்தி கூறுவது போன்ற பல்வேறு பணிகள் தலித்துகளின் உரிமைகள் என முலாம் பூசிய சுமைகள் மாறும்வரை தேசிய இன விடுதலையைத் தள்ளிப்போடவும், ஒத்தி வைக்கவும் வேண்டியுள்ளது. தீண்டாமை என்பது நூதனமான முறையில் இன்று தொழிற்சாலைகளிலும், கல்விச் சாலைகளிலும் அரசுப் பணியிடங்களிலும் நிகழ்ந்து வருகின்றன. சம உரிமை பெற்ற சமூகம் என்பதே நம் முன் உள்ள முக்கியப் பிரச்சனையாகும். சம உரிமைச் சமூகம் பெற்ற பின் தேசிய இனம் தமிழ்த் தேசிய இனம், மய்ய நீரோட்டத்துடன் இணைந்த தேசிய இனம் எனும்படியான போராட்டங்கள் முன்வைக்கப்படுவது சரியாகும். ●

## துணைநின்ற நூல்கள்

1. பாபா சாகேப் டாகடர் அம்பேத்கர். நூல் தொகுப்பு - தொகுதி - 1 இந்திய அரசின் செய்தி, ஒலிபரப்பு அமைச்சக புத்தக வெளியீட்டுப் பிரிவு. முதற் பதிப்பு 1993 ஏப்ரல்.

2. நிறப்பிரிகை 8 மே 1996

3. சாதியம், முனைவர் கோ. கேசவன்

4. சாதி ஒழிப்பின் தேவையும் தமிழக விடுதலையும், தமிழரசன் வெளியீடு - 1, 1985

5. கவிதாசரண், ஏப்ரல் - மே 1996

6. ஓம் சக்தி, நா. மகாலிங்கம், மே 1996



படிப்பகம்

www.padippkam.com

# அந்தமான் தமிழர் சங்கத் தலைவர் பர்னாட் ஆண்ட்ரூஸ் படுகொலை - ஓர் ஆய்வு

க. சுப்பையா

1992 மார்ச் 18-ஆம் நாள் இரவு நியூசெஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதுச்சேரி கிளை மேலாளர் திரு. கோபிநாத் தம்மிடம் பணி செய்யும் ஒரு பையனிடம் கடிதம் கொடுத்து புதுச்சேரிக்கு வருகை தந்துள்ள அந்தமான் பிரமுகர் ஒருவரை நான் சந்திக்க வேண்டும் என்றும், சமூகம் தொடர்பான சில உதவிகளை அவருக்கு நான் செய்ய வேண்டும் என்றும் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். மறுநாள் காலை 9.30 மணிக்கு பயணியர் விடுதியில் (யாத்ரிநிவாஸ்) அறை எண். 105-ன் கதவை நான் தட்டியபொழுது கதவைத் திறந்த இளைஞர் ஒருவரிடம் என்னை நான் அறிமுகம் செய்த பொழுது கன்னையன் என்று அறிமுகம் செய்த அவர் என்னை கைகுலுக்கி வரவேற்றார்.

எனது வருகையை பக்கத்து அறையில் இருந்த தமது தலைவரிடம் கூறிவிட்டு கன்னையன் திரும்பிய சில நிமிடங்களில் கருப்பு நிறமுடைய, கம்பீரமான தோற்றத்தில், பட்டு ஜிப்பா உடையில் ஒருவர் எமது அறைக்குள் நுழைந்தபொழுது அங்கிருந்த அனைவரும் எழுந்து நின்றார்கள். நானும் எழுந்து நின்று அவரை கைகூப்பி வணங்கியபொழுது அவரும் வணக்கம் சொல்லி எனது கைகளைப் பற்றி வாழ்த்து கூறினார். அந்த மனிதர்தான் அந்தமான தமிழர் சங்கத் தலைவர் மாஸ்டர் பர்னாட் ஆண்ட்ரூஸ் என்பவர். 45 நிமிடத்திற்கும் அதிகமாக நாங்கள் உரையாடினோம். அவை அனைத்தும் புதுச்சேரி தலித் இயக்கங்களைப் பற்றியதாகவே அமைந்தது.

புதுச்சேரியில் உள்ள தலித் இயக்கப் பொறுப்பாளர்களை அவர்கள் இல்லத்திற்குச் சென்று நாம் சந்திக்க விரும்புவதாகவும் அதற்காக அந்த ஒரு நாள் முழுவதும் நான் அவருடன் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். நீங்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே சென்று சந்திப்பது சிரமமான வேலை. நீங்கள் இருக்கும் இந்த இடத்திற்கே அவர்கள் வந்து உங்களை சந்திப்பதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் என்று கூறியபொழுது ஆண்ட்ரூஸ் நெகிழ்ந்து போனார். சந்திப்பதற்கான நாள் 21.3.92 என்பதாக முடிவு செய்து அழைப்பிற்கான ஒரு அறிக்கையை தயார் செய்து அவரின் ஒப்புதலுக்காக நான் கொடுத்தபொழுது அவற்றில் சில திருத்தங்களைச் செய்தார்.

திரு. கன்னையனும், நானும் ஆட்டோவில் பயணம் செய்து 10-க்கும் மேற்பட்ட தலித் தலைவர்களுக்கு அழைப்புக் கொடுத்தோம். திட்டமிட்டபடி குறிப்பிட்ட நாளில் அச்சந்திப்பு நடந்தது. பயணியர் விடுதியில் உள்ள உணவகத்தில் நடைபெற்ற அக்கூட்டத்திற்கு திரு. சித்ரா சிங்கராஜ் தலைமை தாங்கினார். கூட்டத்தில் பங்கேற்ற ஒவ்வொரு தலித் தலைவரையும் அந்தமான் தமிழர் சங்கத் தலைவருக்கு அறிமுகம் செய்து வைக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதன்பிறகு ராம் இண்டர் நேஷனல் விடுதியில்



படிப்பகம்

www.padippkam.com

அவருக்கு கொடுக்கப்பட்ட விருந்தில் இரண்டாவது முறையாக நான் அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. சில மாதங்களுக்குப் பிறகு அவர் இந்துவாக மதம் மாறியிருக்கிறார் என்று கேள்விப்பட்ட நான் அவரைச் சந்திப்பதை தவிர்த்து விட்டேன்.

இதன் பிறகு 1994 சூன் மாதத்தில் சிங்கராஜ் அவர்கள் புதுச்சேரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த பொழுது அவரைப் பார்க்க வந்த மாஸ்டர் என்னைச் சந்திக்க விரும்பியதாக சிங்கராஜிடம் கூறியதைத் தொடர்ந்து 1.7.94-ல் குமரன் விடுதியில் அவரைச் சந்தித்தேன். அச்சந்திப்பில் அவர் கேட்ட முதல் கேள்வி என்னை நெகிழ வைத்தது. என் மீது உங்களுக்கு வருத்தமா? எல்லோரும் என்னை வந்து சந்திக்கிறார்கள். நீங்கள் மட்டும்தான் வரவில்லை. என்ன காரணம்? என்று கேட்டார். நீங்கள் இந்துவாக மதம் மாறியது எனக்கு மிகவும் வருத்தம் என்றேன். தமிழர்களின் நலனுக்காக அப்படி ஒரு முடிவு எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் தமக்கு ஏற்பட்டதாக அவர் கூறினார்.

திராவிட இயக்கங்களும், அதன் அரசியல் கட்சிகளும் செய்திருக்கிற கடந்தகால துரோகங்களை இன்று நாங்கள் புரிந்து கொண்ட நிலையில் தமிழன் என்று சொல்வதைவிட தலித் என்று சொல்ல வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டுவிட்டது என்று நான் கூறியபொழுது உணர்ச்சி வசப்பட்டு என் கைகளை இறுகப் பற்றினார். பிறகு என் உடல்நலத்தையும், குடும்ப பொருளாதார நிலைமையையும் விசாரித்தார். இந்தச் சந்திப்புதான் நான் அவரைக் கடைசியாகப் பார்த்த நிகழ்ச்சியாகும். இன்று அவர் உயிருடன் இல்லை. குருரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். தமிழகத்தின் தென் பகுதியில் 50 களில் தலித்துகளை வெட்டி அழித்து புலம் பெயரவைத்த ஒரு குறிப்பிட்ட சாதியினர் தமிழர்கள் என்கிற போர்வையில் இப்படுகொலையை செய்திருக்கிறார்கள். இப்படுகொலை தலித்துகளுக்கு பல்வேறு படிப்பினைகளை உணர்த்தியிருக்கிறது.

''தமிழாய்ந்த தமிழனே தமிழ்நாட்டில் முதலமைச்சராய் வருதல் வேண்டும்'' என்றார் தமிழ்க்கவிஞர் பாரதிதாசன், தமிழர்களை ஆள்வதற்கு தமிழில் புலமை தேவையில்லை. சாதித் தகுதி ஒன்றே போதும் என்பதை திராவிட இயக்கத்தின் தோற்றமும், வளர்ச்சியும் அதன் 60 ஆண்டுகால வரலாறு மூலம் நமக்குத் தெளிவாக உணர்த்தியுள்ளன. சாதித் தகுதியின் முகத்திரையை சாதிகளுக்கிடையிலான சமரசம் கிழித்தெறிந்து விட்டது. சாதிகளுக்கிடையிலான சமரசம் ஒரு குறிப்பிட்ட (தலித்) சாதி எந்த நிலையிலும் பிற சாதியினர்க்கு தலைமை ஏற்கக் கூடாது என்பதை எச்சரிக்கவும், மீறினால் அதற்கான தண்டனை மரணம்தான் என்பதை அந்தமான் தமிழர் சங்கத் தலைவரை படுகொலை செய்து ஒடுக்கப்பட்ட மக்களாகிய தலித்துகளை விழிப்படையச் செய்திருக்கிறது.

தமிழன் என்பவன் யார்? என்கிற ஒரு கேள்வியை எழுப்பி அதன் மீது ஒரு குற்ற விசாரணையை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் இன்று தலித்துகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த விசாரணையின் முடிவுதான் தமிழ் தேசிய விடுதலையில்



படிப்பகம்

www.padippkam.com

தலித்துகளுக்குரிய சுதந்திரமான சகல உரிமைகளுக்கும் தீர்வு என்ன என்பதைக் கண்டறிவதற்கான வாய்ப்பிருக்கிறது.

தமிழ்ச்சங்கத் தலைவரின் படுகொலைக்கான காரணங்கள் அவரது அந்தமான் சமூகப் பின்னணியை வைத்தே நாம் முடிவு செய்ய வேண்டும். 1947-க்கு முன்பு ஆங்கில அரசு இந்தியாவில் தமது ஆட்சிக்கு எதிராகச் செயல் பட்டவர்களை பாதுகாப்பு வசதி கருதி கடல் கடந்த அந்தமான் தீவுச் சிறையில் அடைத்தது. அவர்களில் இந்திய விடுதலைப் பேராட்டத்தில் முன்னணிப் பாத்திரம் வகித்த தேசப்பக்தர்கள் ஒரு பிரிவினர். உணவு தானியங்கள் மற்றும கால்நடைகளை திருடியும், வழிப்பறி செய்தும், கொலை, கொள்ளைகளில் ஈடுபட்ட மற்றொரு பிரிவினர் ஆவர். இந்த இரண்டாம் பிரிவினர் பெரும்பாலும் தென் தமிழகத்தின் மதுரை, ராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர். ஆங்கில அரசு இவர்களை குற்றப் பரம்பரையினர் என்றே சட்டம் போட்டுத் தண்டித்தது.

இந்தியா அரசியல் ‘சுதந்திரம்’ பெற்ற பிறகு தேசபக்தர்கள் தமது சொந்த மாநிலங்களுக்கு திரும்பினார்கள். குற்றப் பரம்பரையினர் அந்தமானிலேயே தங்கியதோடு தாமே அம்மண்ணின் மைந்தர்கள் என உரிமையும் கொண்டாடத் தொடங்கினர். ஆனால் வரலாறு அங்கு வாழும் ஆதிவாசிகளே அம்மண்ணின் பூர்வ குடிகள் எனத் தீர்மானிக்கிறது. அந்தமானில் வாழும் மக்கள் நான்கு பிரிவினராக அடையாளப் படுத்தப்படுகிறார்கள். லோக்கல் என அழைக்கப்படும் பூர்வ குடிகள், கைதிகளாய்ச் சென்ற தமிழர்கள், பிற மொழி இனத்தைச் சார்ந்த கன்னட, தெலுங்கு, மலையாள மற்றும் வங்காளிகள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இவர்களில் குற்றப் பரம்பரையினர் தமிழகத்தில் வாழ்ந்தபொழுது வறுமை மற்றும் ஏழ்மை நிலையில் செய்து வந்த பழைய குற்றச்செயல்களையே செய்து வந்தார்கள்.

இச்சூழ்நிலையில்தான் 1978-ஆம் ஆண்டு சென்னையைச் சேர்ந்த 30 வயது நிரம்பிய எஸ்.எஸ்.எல்.சி. படித்த பர்னாட் ஆண்ட்ரூஸ் எனும் மனிதர் தமது இளம் மனைவியை பெற்றோருடன் விட்டுவிட்டு பிழைப்பு நிமித்தமாய் அந்தமானில் குடியேறுகிறார். மரங்களை லாரிகளில் ஏற்றி இறக்கும் ஒரு தொழிலாளியாக தனது வாழ்க்கையைத் தொடங்கிய ஆண்ட்ரூஸ் சில மாதங்களுக்குப் பின் தனது தந்தையின் மூலம் ஏற்கெனவே கற்றிருந்த மெக்கானிக் தொழிலை ஒரு கடை திறந்து அதன் வழியே செய்கிறார். மெக்கானிக் தொழிலில் தேர்ச்சி பெற்ற ஆட்கள் அங்கு இல்லாத அக்காலகட்டத்தில் ஆண்ட்ரூசுக்கிருந்த மெக்கானிக் தொழில் திறமை அவருடைய தொழில் நன்கு வளர்ச்சி பெறவும், வருவாய் அதிகரிக்கவும் வாய்ப்பாக அமைந்தது.

பிழைப்புத் தேடிப்போன ஆண்ட்ருசுக்கு அதன் நோக்கம் ஓரளவு நிறைவேறியபின் சமூகத்தின் பக்கம் அவரது கவனம் திரும்பியது. சகிப்புத்தன்மை, பிறருக்கு உதவுதல்,



படிப்பகம்

www.padippkam.com



அன்பு செலுத்துதல் என்கிற கிறித்துவக் குணங்களோடு வளர்ந்த ஆண்ட்ரூசுக்கு அந்தமானில் அப்பொழுது நிகழ்ந்த அநீதிகள் கவலையளித்தன. தமிழ்ப் பெண்களை கற்பழிப்பது, அதை மறைக்க கொன்று விடுவது, எளியவர்களை மிரட்டுவது, அச்சுறுத்தி பணிய வைப்பது என்கிற கொடுமைகளை குற்றப் பரம்பரையயினரும், பிற இனத்தவர்களும் தமிழர்கள் மீது நடத்தி வந்த நிலையை தடுத்து நிறுத்த வேண்டும் என்கிற முடிவுக்கு வந்தார். சிங்கப்பூரில் ஏற்கனவே தாம் கற்ற கராத்தே பயிற்சியும், பிளாக் பெல்ட் தகுதியும் ஒரு கராத்தே பள்ளியை தொடங்குவதற்கு அவருக்கு வாய்ப்பாக அமைந்தன.

கராத்தே பயிற்சி மூலம் ஒருபுறம் ஆயிரக்கணக்கான இளைஞர்களை தயார் செய்தார். மறுபுறம் அவரது பொருளாதார நிலைமையும் வளர்ச்சி பெற்றது. பயிற்சி பெற்ற இளைஞர்களின் ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும், துணிச்சலையும் முன்னிருத்தி தமிழர்களுக்கெதிரான அநீதிகளை தடுத்து நிறுத்துவதில் வெற்றியும் பெற்றார். தமிழர்களின் வாழ்நிலையில் ஏற்பட்ட இத்தகைய மாற்றம் ஆண்ட்ரூசாக இருந்த அவரை மாஸ்டர் என்கிற தகுதிக்கு உயர்த்தியது. மெக்கானிக்காக , கராத்தே பள்ளி ஆசிரியராக, மாஸ்டராக, படிப்படியாய் பரிணமித்த அவர் அந்தமானின் ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் சேவை செய்வதற்கான பொறுப்பு ஒன்று அவர் மீது திணிக்கப்பட்டது.

சில பத்தாண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட அந்தமான் தமிழர் சங்கம் ஆண்டுக்கு ஒருமுறை பொங்கல் விழா நடத்துவதை மட்டுமே தனது பணியாகக் கொண்டிருந்தது. தமிழர்களின் வற்புறுத்தலின் பேரில் 1985ல் தமிழர் சங்கத் தலைவர் பொறுப்பை மாஸ்டர் ஏற்றபொழுது சங்கத்தின் சொத்தாக ஒரு ஓலைக் கொட்டகையும் சில ஆயிரம் ரூபாய்களுமே இருந்தன. கராத்தே பள்ளியில் சம்பாதித்த சொத்துக்களை தமிழ் சங்கத்தின் வளர்ச்சிக்காக மாஸ்டர் செலவழித்தார். திரைப்பட அதிபர் ஏ.வி.எம் . சரணவன் அந்தமானில் ஒரு தீவை விலைக்கு வாங்குவதற்கு மாஸ்டர் அவருக்கு உதவியதற்காக நாலு லட்சம் ரூபாயை அன்பளிப்பாக வழங்கியபொழுது அத்தொகையை தனக்கென்று வைத்துக்கொள்ளாமல் ஒரு பொதுநிகழ்ச்சி மூலம் தமிழ்ச்சங்க கட்டிட நிதிக்காக அதனை வழங்கினார். தமிழ்ச்சங்கத்தின் இன்றைய சொத்தின் மதிப்பு மாஸ்டரின் கடின உழைப்பால் ஒரு கோடிக்கும் அதிகமானதாகும். மாஸ்டர், சங்கத் தலைவரான பிறகு சங்கத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகமாயிருக்கிறது. 10-க்கும் மேற்பட்ட பிற தீவுகளில் வாழும் தமிழர்களுக்கு பிறரின் தாக்குதலிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்வதற்கான உத்தரவாதம் கிடைத்திருக்கிறது. மாஸ்டர் தலைவராவதற்கு முன்பு தமிழர் சங்கத்தில் அங்கு வாழும் தலித்துகளுக்கு உறுப்பினராகும் வாய்ப்பு, மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. மாஸ்டர் அந்தத் தடையை நீக்கி தலித்துகளையும் உறுப்பினர்களாக்கியிருக்கிறார். **சாதித் தமிழர்கள் மட்டுமே அங்கம் வகித்து வந்த தமிழ்ச்சங்கத்தில் தலித்துகளையும் சேர்ந்ததால் பலர் சங்கத்தை விட்டு வெளியேறி விட்டார்கள். மாஸ்டருக்கு எதிரான முதல் எதிர்ப்பு இங்கிருந்துதான் தொடங்குகிறது.**



படிப்பகம்

www.padippkam.com

தமிழ்ச்சங்க கட்டிடத்தை தமிழர்கள் நன்கு பயன்படுத்த தமிழர்களுக்கு சிறப்பு சலுகைகளை செய்திருக்கிறார். பிற்பகுதியிலிருந்து அந்தமானுக்கு தொழில் மற்றும் சுற்றுலா நோக்கங்களுக்கு வரும் தமிழர்களும், பிற தீவுகளிலிருந்து போர்ட்பிளேயருக்கு வரும் தமிழர்களும், தமிழ்ச்சங்கத்தில் தங்கிச்செல்ல குறைந்த கட்டணமும், கட்டணம் செலுத்த முடியாதவர்கள் இலவசமாகத் தங்கிச் செல்வதற்குமான வசதிகளையும் ஏற்பாடு செய்திருக்கிறார். இத்தகைய செயல் அங்குள்ள ஏனைய விடுதி உரிமையாளர்களிடத்தில் மிகுந்தகோபத்தை உண்டு பண்ணியிருக்கிறது. தங்கள் விடுதியின் வருவாய் பாதிக்கப்பட்ட நிலையில் அவர்களும் மாஸ்டருக்கு எதிராகச் செயல்படத் தொடங்கியிருக்கிறார்கள்.


தமிழர்களின் நலனில் தனது முழு கவனத்தைச் செலுத்தியபொழுது மாஸ்டரிடத்தில் இருந்த பழைய போக்குகளின் அவசியத்தில் ஒரு தவறான மாறுதல் ஏற்பட்டது. எல்லாப் பிரச்சனைகளையும் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்கிற அவரது சமரசவாத சிந்தனையே அவரது வீழ்ச்சிக்கான முதல் காரணமாகும். சமூகத்தின் சிக்கலான சவால்களை சந்திக்கும் எந்த ஒரு மக்கள் பிரதிநிதியும் தன்னை ஒரு ராணுவ ரீதியான தயாரிப்புக்கு உட்படுத்திக் கொள்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும். மாஸ்டரை விட்டு அவருடன் இருந்த இளைஞர்கள் சிறிது சிறிதாக பிரிந்து சென்றதற்கு அவர் பின்னாளில் எதிர்கொண்ட சவால் மிக்க பிரச்சனைகளே இதற்கான ஆதாரமாகும்.

அந்தமானில் வாழும் தமிழர்களில் 60% பேர் தலித்துகள். இவர்களுக்கு இந்திய அரசியல் சட்டத்தின் இட ஒதுக்கீட்டு உரிமை வழங்கப்படவில்லை. நேரு பிரதமராயிருந்த பொழுது அமைக்கப்பட்ட இளையபெருமாள் கமிஷன் அந்தமானில் தலித்துக்கள் இல்லையென்று அறிக்கை கொடுத்திருக்கிறது. தமிழர்களுக்குள் தலித்துகளின் தனிப்பட்ட கோரிக்கையான இட ஒதுக்கீட்டு உரிமையை பெற்றுத் தருவதில் மாஸ்டர் முக்கிய கவனம் செலுத்தியிருக்கிறார். இக்கோரிக்கையை அரசுக்கு முன் வைக்க அவர்களை அரிசன அய்க்கிய சங்கம் என்கிற அமைப்பாக்கி அதற்கு தாமே தலைமை பொறுப்பேற்றார். தமிழ்ச்சங்கத்தில் தலித் மக்களை உறுப்பினராக்கிய பொழுது சாதித் தமிழர்கள் மாஸ்டரை வெளிப்படையாக எதிர்க்கத் தொடங்கி, சங்கத்திலிருந்து சில தலைவர்கள் ஒதுங்கிவிட்டார்கள். அரிசன அய்க்கிய சங்கத்தை ஏற்படுத்தி இட ஒதக்கீட்டு உரிமைக்கான முயற்சியில் ஈடுபட்ட பொழுது மாஸ்டர் சாதிச் சங்கம் நடத்துகிறார் என்று குற்றம் சுமத்தி சாதித் தமிழர்கள் அவரிடமிருந்த இளைஞர்களை பிரித்தெடுப்பதில் வெற்றி பெற்றார்கள். இவர்கள் மாஸ்டரை எதிர்ப்பதில் அய்க்கியப்பட்டார்கள். அதே சமயம் பெரும்பான்மை தலித் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற தலைவராய் மாஸ்டர் உயர்ந்து நிற்கிறார். தமிழ்ச் சங்கத்தின் தலைவர் என்கிற முறையில் மாஸ்டருக்கான வெளித் தொடர்பும் விரிவடைகிறது. இந்த வளர்ச்சி சாதித் தமிழர்களுக்கும் குறிப்பாக குற்றப் பரம்பரையினர்க்கும் வேறு இனத்தவர்க்கும் சமூக, அரசியல், பொருளாதாரத் தளங்களில் எதிர்காலம் குறித்த ஒரு அச்சத்தை ஏற்படுத்துகிறது.



படிப்பகம்

www.padippkam.com



இந்தச் சூழலில் புதுச்சேரி தமிழ் இலக்கிய அமைப்பு உள்ளிட்ட மக்கள் இயக்கங்களின் ஆதரவு மாஸ்டருக்கு சமூக அந்தஸ்தை மேலும் உயர்த்துகிறது. ஆண்ட்ரூஸ் என்கிற பெயரில் மாஸ்டராக புதுச்சேரிக்கு அறிமுகமான அவரை புதுச்சேரி தமிழார்வலர்கள் அந்தமான் அண்ணல் என்கிற கவுரவத்தை வழங்கிய பொழுது அந்தமான் சாதித் தமிழர்களுக்கு கூடுதலான அச்சம் ஏற்படுகிறது.

இதற்குப் பின்னே அந்தமானில் உள்ள முருகன் கோவிலில் தலித்துக்களுக்கான வழிபாட்டு உரிமைப் பிரச்சனை மாஸ்டருக்கு மிகப்பெரும் சவாலாக அமைகிறது. முருகன் கோவிலில் உள்ள 14 படிக்கட்டுகளில் ஒவ்வொரு சாதியினருக்கும் ஒரு படிக்கட்டு வழிபாட்டு உரிமை இருந்து வருகிறது. இந்த வகையில் 14 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் தலித்துகளுக்கு ஒரு நாள் படிக்கட்டுத் திருவிழா நடத்தும் உரிமையை மாஸ்டர் முன் வைத்திருக்கிறார். சாதித் தமிழர்கள் இதனை மறுத்தபொழுது, ஏதேனும் ஒரு சாதியினரோடு தலித்துக்கள் இணைந்து திருவிழா நடத்துவதற்கான மாஸ்டரின் மாற்றுத் திட்டத்தையும் நிராகரித்திருக்கிறார்கள். தலித்துகளின் சமய வழிபாட்டு உரிமையை பெறுதற்கு தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் மூலம் 14 நாள் திருவிழாவை தடைசெய்து தமிழர்கள் அனைவரும் ஒரே நாள் திருவிழா நடத்தும்படியான முயற்சியில் மாஸ்டர் வெற்றி பெற்றிருக்கிறார். அந்தமான் சாதித் தமிழர்களுக்கு இச்செயல் மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. மாஸ்டர் இந்த முயற்சயில் அதிகம் அக்கறை செலுத்தியதற்கு காரணம் தமிழக திராவிட கட்சிகளின் சாதிவெறி நோய் அங்கும் பரவியிருக்கிறது . திருவிழாவில் சமய முழக்கங்கள் எழுப்புவதில்லையாம். வீரப்பரம்பரை என்ற சாதிப் பெருமை பேசும் முழக்கங்கள் இடுவதுதான் திருவிழாவின் முக்கிய நோக்கமாம்.

மாஸ்டரின் இந்த வெற்றியை சாதித் தமிழர்கள் மதப் பிரச்சனையாக்கினார்கள். கிறித்துவரான ஆண்ட்ரூஸ் இந்துக்களின் சமய விவகாரங்களில் எப்படி தலையிட முடியும் என்று பிரச்சாரம் செய்த பொழுது தமிழர்களின் நலனுக்காக முறைப்படி இந்துவாக மதம் மாறித் தன் பெயரை திருநாவுக்கரசன் என்று பெயர் மாற்றிக்கொண்டார். மாஸ்டர் மதம் மாறிய பிறகு அவருக்கு சாதக - பாதகமான இரண்டு அம்சங்களும் ஏற்படுகின்றன. சாதகமான அம்சம் என்பது இந்தியச் சூழலில் ஆளும் அதிகார வர்க்கக் கட்டமைப்பில் செல்வாக்குச் செலுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த வாய்ப்பு சமூக, அரசியல் பொருளாதார அம்சங்களுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதாகும். ஆனால் பாதகமான அம்சங்கள் என்பது இரண்டு நிலைகளில் பிரச்சனையை எழுப்புகிறது. முதலாவதாக, அவர் ஒரு இந்து என்கிற வகையில் அவருக்கான சாதி அடையாளம், முன்னிருத்தப்பட்ட பிறகே அவருக்கான பிற தகுதிகள் பேசப்படுகின்றன. சாதி அடையாளம் இல்லாமல் ஒருவர் இந்துவாக இருக்க முடியாது, என்கிறபோது இந்துவாக மதம் மாறிய ஒருவர் தாம் விரும்புகிற சாதியை தாமே தேர்வு செய்யவும் உரிமையை இந்து மதம் வழங்கவில்லை, என்பதை நாம் கவனத்தில் கொள்வது அவசியமாகும். ஏனென்றால் சாதி என்பது பிறப்பால்



படிப்பகம்

www.padippkam.com



தீர்மானிக்கப்படுவதாக சாதித் தத்துவத்தை எழுதிய மனு கூறுகிறான். திருநாவுக்கரசனுக்கு இந்துக்களான தனது தாத்தா பாட்டியின் சாதி அடையாளங்களைத்தான் தேர்வு செய்ய முடியும். காலம் காலமாய் பார்ப்பனியத்தின் கருத்தியல் வன்முறையாலும் சாதித்தமிழர்களின் ஆயுத வலிமையாலும் ஒடுக்கப்பட்டு வரும் தலித் என்பதுதான் மானிடருக்கான சாதி அடையாளம். ஆண்ட்ரூஸ் என்கிற கிறித்தவருக்கு அவருடைய கிறித்தவ மதம் மனிதன் என்கிற உயர்ந்த தகுதியை வழங்கியது. அதனால்தான் அவர் மிக உயர்ந்த நிலையை எட்ட முடிந்தது. திருநாவுக்கரசன் என்கிற இந்துவுக்கு அவருடைய இந்து மதம் கேடுகெட்ட சாதித் தகுதியை வழங்கியது. அவருக்கு எதிரான இறுதிப் போரைத் தொடங்குவதற்கு இதுவே பிரதானக் காரணமாக அமைந்தது.

இப்பொழுது சாதித் தமிழர்களுக்கு திருநாவுக்கரசனை ஒரு தமிழனாகவோ, கிறித்துவனாகவோ, இந்துவாகவோ கருத வேண்டும் என்கிற அவசியமில்லை. சாதியப் படிநிலையில் கீழாய் புறந்தள்ளப்பட்ட ஒரு தலித் என்பதே போதுமானதாகும். எதிரி தலித் என்றால் அவனைத் தாக்குவதற்கும், அழிப்பதற்கும் சாதி இந்துக்களுக்கு அவர்களது சாதித் தகுதியே போதும் என்பதை மனு தெளிவாகக் குறிப்பிடுகிறான். வருணாசிரமக் கோட்பாட்டின்படி திருநாவுக்கரசன் என்கிற அடிமைக்கும் சாதித் தமிழர்கள் என்கிற ஆண்டைகளுக்குமான எல்லாம் பிரித்து அறியப்படுகிறது. இதன் அடுத்த கட்டம் கையிலே ஆயுதமெடுத்து கணக்குத் தீர்த்துக்கொள்ள வேண்டியதுதான்,

நெருக்கடிகள் இறுக்கமடைந்து வரும் இச் சூழலில் மாஸ்டர் ஒரு முடிவுக்கு வருகிறார். தனது தலைவர் பதவிக்கான காலம் *1995* ஆகஸ்ட் மாதம் முடிவடைய இருப்பதால் இடைப்பட்ட காலத்தில் அந்தமான் தமிழர் நல மாநாட்டை நடத்திவிட்டு தலைவர் பொறுப்பிலிருந்து விலகிவிடுவது என்று முடிவு செய்கிறார். மாநாட்டுப் பணியை தொடங்கி அதற்கான ஆதரவுத் தளமாக புதுச்சேரியை மாஸ்டர் தேர்வு செய்வதற்கான முக்கியக் காரணமாகும். இம்மாநாட்டு முயற்சி மாஸ்டருக்கெதிரான திட்டங்களை மேலும் கூர்மைப்படுத்தின. இதன் விளைவு சாதித்தமிழர்கள் ஊர்வலம் நடத்தி மாநாட்டை தடை செய்யுமாறு அந்தமான் நிர்வாகினுடம் மனுக் கொடுத்திருக்கிறார்கள். சாதித் தமிழர்களின் உணர்வினை மதிக்கும் வகையில் மாஸ்டர் மாநாட்டை தள்ளி வைத்தார். உலகெங்கிலுமுள்ள தமிழறிஞர்களும் தலைவர்களும் அந்தமானில் கூடி திட்டமிட்டபடி மாநாடு நடந்து முடிந்தால் மாஸ்டரின் அடுத்த கட்ட இலக்கு அரசியல் அதிகாரத்தை நோக்கியதாக அமையும், என்கிற அச்சமும், அதன் எதிர்கால நடவடிக்கைகளும் சாதித் தமிழர்களை இறுதி முடிவு எடுப்பதற்கான அவசியத்தை ஏற்படுத்தியுள்ளன. மாஸ்டரைக் கொலை செய்யும் பொறுப்பை கொலை செய்வதில் ஈவிரக்கமற்ற குற்றப்பரம்பரையினரிடமம் சாதித் தமிழர்கள் ஒப்படைத்திருக்கிறார்கள்.

*27.11.94* இரவு மாஸ்டர் தனது பிறந்தநாள் *(3.12.94)* நிகழ்ச்சிக்கு வருகை தரும் புதுச்சேரி தமிழர்களுக்கு உணவு மற்றும் தங்குமிடத்திற்காக ஏற்பாடுகளை கவனித்துவிட்டு



படிப்பகம்

www.padippkam.com



தமிழ்ச்சங்க ஆலோசகர் திரு. குமார் அவர்களை அவரது இல்லத்தில் விட்டுவிட்டு தனது ஜீப்பில் தனியே வீடு திரும்பியிருக்கிறார். குறுகலான பாதையில் மாஸ்டர் வந்தபொழுது குறுக்கே இரண்டு வேன்கள் நிறுத்தப்பட்டு அதிலிருந்து ஒருவன் நீளமான வீச்சரிவாளுடன் மாஸ்டர் ஜீப்பை நோக்கி நடந்து வந்திருக்கிறான். மாஸ்டர் பதைத்த நிலையில் திருப்ப முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அரிவாளுடன் வந்தவனை நோக்கி வெட்ட வந்தியாடா! வெட்டுடா பார்க்கலாம்'? என்று மாஸ்டர் கூறிய சில வினாடிகளில் அவரது ஒரு கை துண்டிக்கப்பட்டுவிட்டது. துண்டித்த கை தரையில் கிடக்க வெட்டியவனை மாஸ்டர் எட்டி உதைத்தபொழுது அலறிக்கொண்டு பின்புறமாக விழுந்திருக்கிறான். ஒரு கை துண்டிக்கப்பட்ட நிலையிலும் அஞ்சாத அந்த வீரன் ஜீப்பின் மறுகதவைத் திறந்து காலை வெளியே வைத்தபொழுது ஜீப்பின் பின்புரம் 10-க்கும் மேற்பட்ட அம்பாசிடர் கார்கள் அணிவகுத்து நிற்க அதிலிருந்து அரிவாளுடன் ஓடிவந்த ஒருவன் மாஸ்டரின் காலில் வெட்டியருக்கிறான். மாஸ்டரின் உடல் அதற்குமேல் அவரை போராட அனுமதிக்கவில்லை. மறுகணம் விழுந்து கிடந்தவன் ஓடிவந்து மாஸ்டரின் கழுத்தில் பலமாக அரிவாளை பதித்தபொழுது மாஸ்டரின் உயிர் பிரிந்துவிடுகிறது. வேன்களிலும், கார்களிலும் வந்த 50-க்கும் மேற்பட்ட குற்றப் பரம்பரையினர் புறாவை கழுகுகள் கொத்திக் குதறுவதைப் போல சுற்றி நின்று 14 முறை வெட்டியும், குத்தியும் உடலைச் சிதைத்திருக்கிறார்கள். சாதிவழியே முருகன் கோவில் 14 படிக்கட்டுத் திருவிழா உரிமையை தடை செய்ததற்காக கொலை செய்வதில் கூட இந்த குரூர முறையை கையாண்டிருக்கிறார்கள்.

மாஸ்டரின் கொலைக்கு மேற்கண்ட சமூகப் பிண்ணனியோடு அரசியல் காரணங்கள் இருப்பதையும் நாம் அறிந்தாக வேண்டும். தொடக்கக் காலத்தில் காங்கிரஸ் ஆதரவாளராக மாஸ்டர் செயல்பட்டு வந்திருக்கிறார். சமீப காலங்களில் எதிர்நிலை எடுத்திருக்கிறார். இதற்கான அடிப்படைக் காரணம் மத்திய அரசுத் தொடர்பான எல்லா நிலைகளிலும் தமிழர்களுக்கெதிராகச் செயல்படும் வங்காளிகளுக்கே முக்கியத்துவம் தரும் போக்கு நிழ்ந்திருக்கிறது. இந்தி மொழி தொடர்பால் வங்காளிகள் பெற்ற செல்வாக்கிற்கு அந்தமான் நாடாளுமன்ற உறுப்பினர் பதிரா என்பவர் பிரதானக் காரணமாக இருந்ததால் பத்ராவை வெளிப்படையாகவே எதிர்த்திருக்கிறார். மிகச்சில மாதங்களில் அங்க நடைபெற இருக்கும் தோ்தலில் பெரும்பான்மை தமிழர்களின் செல்வாக்குப் பெற்றுள்ள மாஸ்டர் அரசியலுக்கு வந்தால் தமது செல்வாக்குச் சரியும் என்கிற அச்சம் பத்ராவுக்கு ஏற்பட்டிருக்கிறது. மாஸ்டரை எதிர்த்து சாதித் தமிழர்களின் ஆதரவு நிலை பத்ரா மாஸ்டரின் தலைக்கு 50 லட்சம் விலை வைத்திருக்கிறார்.

மேற்கண்ட சமூக, பொருளாதார, மற்றும் அரசியல் காரணங்களால் பல்வேறு நிலைகளில் எதிர்த்து வந்த சாதித்தமிழர்கள் இறுதியில் அவருடைய சாதி அடையாளம் தெரிந்த உடனேயே கொன்று விடுவது என்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்த நெடிய வரலாற்றை திட்டமிட்டு மறைக்கும் வகையில் கொலையாளிகள் முன் வைத்த



படிப்பகம்

www.padippkam.com

கொலைக்கான மூன்று காரணங்களையே தமிழக - புதுவை சாதித் தமிழர்களின் பத்திரிக்கைகள் வாந்தியெடுத்துள்ளன. (1) தமிழ்ச்சங்கத்திற்கு தேர்தல் நடத்தவில்லை. (2) அதிகாரம் மூலம் மாஸ்டர் தலைவர் பதவியை தக்கவைத்துக் கொண்டிருக்கிறார். (3) தமிழ்ச்சங்கத்தின் சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன என்கிற இம்மூன்று காரணங்களும் அற்பமானவை. இக்காரணங்களே ஒரு தமிழ்ச்சங்கத் தலைவரை கொல்வதற்கு போதுமானதென்றால் தமிழகத்தில் பல தமிழர் தலைவர்களின் உடம்பில் கைகள் இருக்க நியாயமில்லை. தமிழகத்தை கடந்த 27 ஆண்டுகளாக கொள்ளையடித்துவரும் திராவிடக் கட்சித் தலைவர்களில் பலருக்கு மரண தண்டனை வழங்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

தமிழ்ச் சங்கத்தின் தேர்தல் மற்றும் சொத்துப் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள சங்க விதிகளை முன்னிருத்தி நீதிமன்றத்திற்கு செல்ல வாய்ப்பிருக்கிறது. மாஸ்டரை படுகொலை செய்ததற்கான காரணம் முன்பே குறிப்பிட்டதைப் போல வெளிப்படையான சாதி அடையாளம்தான். தமிழர் சங்கத் தலைவரை தமிழர்களே கொன்றார்கள் என்கிற பத்திரிக்கைகளின் விஷமத்தனம் மொழிவழிப்பட்ட நிலைக்கு மட்டுமே பொருந்தக்கூடியது. அதற்கும் அப்பால் சிக்கலான மதம் சாதி என்கிற எல்லைவரை செல்கிறது. இந்துவான காந்தியை மற்றொரு இந்துவான நாதுராம் கோட்சே சுட்டுக்கொன்றான், என இந்திய அரசு தொடர்புச் சாதனங்களில் அறிவித்தது இந்துக்களில் வணிகம் செய்யும் சாதியினரும், வேதம் ஓதும் சாதியினரும் பிளவுபடாமல் இருப்பதை தவிர்ப்பதற்கான முயற்சியாகும். மாஸ்டரையும், அவரை கொன்றவர்களையும் தமிழர்கள் என்ற சொல்லுவது தமிழர்களுக்குள் நிலவும் சாதிய முரண்பாட்டை அலட்சியம் செய்த திராவிட இயக்கத்தின் துரோகங்களின் மறு பதிப்பாகும்.

மாஸ்டர் தொழிலாளியாக அந்தமானில் குடியேறிய எளிய உழைப்பாளி. மக்களின் தலைவராகி தாமும் ஏழையாகவே வாழ்ந்து மறைந்து இருக்கிறார். சோவியத்தின் தோழர் ஸ்டாலினினது அஞ்சாத மனஉறுதியும், வியட்நாம் தந்தை தோழர் ஓசிமிஷின் குறுந்தாடியும், கியூபா அதிபர் பிடல் காஸ்ட்ரோவின் நெடிய உயரமும் உடைய மகத்தான வீரன் மாஸ்டர் ஆண்ட்ரூசின் ஒவ்வொரு அசைவும் நம் கண் முன்னே நிழலாடுகிறது. வீரத்தையும், துணிவையும் அவரிடமிருந்து கற்றுத் தெளிந்த யினுரமாயிரம் இளைஞர்கள் அவருடைய இழப்பைச் சரி செய்வார்கள். ஒரு தலைவர் கொல்லப்படும்பொழுது அதன் எதிரொலி ரத்தக் களறியாக காட்சியளிக்கும். மாஸ்டரின் இறுதிச் சடங்கில் 5000 பேர் அமைதியாக ஊர்வலம் போயிருக்கிறார்கள். அமைதி என்பது பயந்து ஒதுங்கி விடுவது என்பதன் பொருள் அல்ல. இலக்கைச் சரி செய்து கணக்கைத் தீர்ப்பதற்கான போர்த்தந்திரம்.



படிப்பகம்

www.padippkam.com

# உவன் - இவன் - அவன்

சிறுகதை

சந்ரு

அவன் ஒருவனல்ல மூவர். பேச்சிலும் நடந்து வந்த வழியிலும் பின்தங்கி நின்ற 'அவன்' அவர்களை கடந்து சென்ற பெண்ணை நோக்கி சாடை செய்து அழைத்தான்.

அவள் திரும்பிவந்து அவனிடம் ''என்ன?'' என்றாள்.

''ஒன்னுமில்லை'' என்றான்.

''ஏ பின்ன எதுக்கு கூப்பிட்ட'

''எனக்கு தெரிந்த ஆள் போல - இருந்தது''

''பக்கத்துல வந்ததும் தான் வேற ஆளுன்னு தெரியுதா''

''ம்....''

''என்ன கண்ணு குருடா?''

''அடிங். ங்..க்கூ.....''

''ச்... ச்சி.... போயா வந்துட்டானுக... தொங்க போட்டுக்கிட்டு'' அவள் தன் பாதையில் நடந்தாள் அவன் இவர்களோடு வந்து நடையில் கலந்து கொண்டான்.

இவன் - அவனை நோக்கி ''நீ ஒரு அசிங்கம் பிடிச்ச மனுசன், அந்த பொண்ணு ஒரு குடும்பஸ்தியா இருந்தா இப்போ பெரிய வம்பு வந்து சேர்ந்திருக்கும்'' என்றான். அவன் ''அவ மொகத்தில்தான் எழுதியிருக்கே கிராக்கி அப்படின்னு''

''அது இருக்கட்டும்...; இப்ப அவ என்ன நினைப்பில போய்க்கிட்டு இருந்தாளோ?'' நீ அவள விபச்சாரம் பண்ணிட்ட'

''அவதான் ரெடி..... ரெடின்னு மொட வாடை வீசி போறாளே அந்த வாசனை எனக்குத் தெரியும்''

''இதெல்லாம் பாவம்''

''அது அவ பொழப்பு. ஒன்னொன்னுக்கும் ஒரு ரேட் இருக்கு. அவள பாத்ததும் விலை படியுமான்னு தெரிஞ்சுக்க தோனுச்சி கேட்டேன். உங்களோட நான், வந்ததாள கொள்முதல் செய்யாம திரும்பிட்டேன் எல்லாம் ஒரு குசிதான்''

''நீ ரொம்பவும் மோசமான ஆளு, இனிமே நீ எங்க கூடவெல்லாம் வராதே''

''எல்லாருமே யோக்கியர்கள் தான். உன் மனைவி தங்கச்சிகிட்ட ஒனக்கு என்ன சகஜம் வேண்டியதிருக்கு? அது எந்த வகை யோக்கியத்தில சேத்தி.''

''தனக்கு அடைபடுமுன்னு தெரிந்ததும் அதை கொன்னு தின்னுபுடுற ஆளு நீ. உனக்கு பொய் பித்தலாட்டம் விபச்சாரம் எல்லாமே குசிதான். மனுச வாழ்க்கையால புனிதமுன்ன நீ அது என்னன்னு கேட்பே குடும்பம் பிள்ள குட்டின்னு இருக்கிறவங்களுக்குத்தான் பொருப்பும் நல்லது கெட்டதுங்கிறதுக்க அர்த்தமும் இருக்கும்''

''எப்பா.... குடும்பப் பொறுப்பு, உன் ஆயி அப்பனுக்கு மாசம் என்ன பணம் அனுப்புற? அப்படியே கூடப் பொறந்தவங்களுக்கு செஞ்சி தவிச்சிப்



படிப்பகம்



போய்ட்ட நீ... பேசுராம் பாரு பேச்சு. மாசமானா சம்பளம் வாங்கினதும் என் ஆயி அப்பனுக்கும் கூடப் பொறந்தவங்களுக்கும் அனுப்பீட்டு பலவேள சாப்பாட்டுக்கு இல்லாம இருக்கிறது உனக்கு தெரியும். நீ தனக்குப் போகத்தான் தானதர்மமுன்னு இருக்கிற ஆளு... அங்கேயோ எதையோ படிச்சுப்புட்டு எனக்கு வந்து உபதேசம் பன்னுற என்ன பன்னுறது...''

''உன்னால எதையும் கேவலமா பேச முடியும் அதனால உனக்கும் எனக்கும் இனிமே பேச்சு வேண்டாம். பேச்ச இத்தோட நிறுத்திவிடுவோம்.''

அவர்கள் மூவரின் உவன் ''பேசிப் பேசி இருக்கிற குரோதத்த மேலும் விரிவு படுத்திக் கொள்ள வேண்டாம். நாம் மூவரும் நண்பர்கள்.'' என்றான்.

இவன் ''இனிமே எனக்கும் அவனுக்கும் நட்பு இல்லை'' அவன் ''நானும் அதத்தான் விரும்புகிறேன்'' உவன் ''நாம் நண்பர்கள்''

உவனை நோக்கி இவன் ''நீ எல்லோருட்டையும் நல்லபேறு வாங்கனுமுன்னு விபச்சாரத்துக்கும் துணை போறவன். எனக்கு உன் போல வெல்லம் பாசாங்கு பண்ண தெரியாது. எனக்கு உன் நட்பும் தேவையில்ல'' என்றான்.

உவன் ''எந்த வகையிலும் ஏங்கிட்ட என்னை யோக்கியன் என்று நிரூபிக்க வரல இவன், அதனால நீ எது சொன்னாலும் நான் கேட்டுக்கிட்டு இருக்கவும் தயாரில்லை. ''அவன்'' உடைய செயல்கள்ல எனக்கு உடன்பாடு இல்ல. அதே போல. 'இவன்' நீ உனக்கு அந்தந்த நிமிசத்தில எது பிடிக்கிதோ அதுதான் உலகமகா விசயமுங்கிற மாதிரி உணர்ச்சி வசப்பட்டு கூட இருக்கிற வங்க எல்லாத்தையும், அசிங்கப் படுத்திறதிலையும் எனக்கு உடன்பாடு இல்ல. உனக்கு உன் பெருமைதான் பெரிசு நீ சொன்ன பொய்ய உண்மையாக்கிறதுக்கு மேலும் பல பொய் பண்ணுரவன்.''

இவன் ''இது ஒரு குழப்பவாதி பேச்சி''

அவன் ''குழப்பவாதி, பொய்காரன், விபச்சாரம் பண்ணுரவன் எல்லாம் ஒன்றுதான். இதில் யாரும் தன்னைத்தான் பெருமையாக நினைத்துக் கொள்ளவேண்டாம்.

இவன். ''பேசத் தெரிந்த விலங்கு''

உவன் ''ஒருவருக் கொருவர் இவ்வளவு முரட்டுத்தனமா இருக்கிறோம்; எது நம்ம மூவரையும் நண்பர்களா பினைச்சி வைச்சிருக்கு?

அவர்களிடையே தற்காலிகமாக நேர்ந்த அமைதியில் கடற்கரையை நெருங்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

உவன் ''அங்கபாருங்க..... அந்த நபரை அந்த நபர் நம்மோட வேலை செய்யிர ஆளுதான். அந்த நபர் எனக்கு இது வரை ஒரு தீங்கும் செய்ததில்லை. ஆனால் இதுவரை அந்த நபருட்ட நான் ஒரு வார்த்தை கூட பேசியதில்லை. அந்த நபர் ஒரு வேளை பாவப்பட்ட ஜென்மமாக மறுவேளை கொடூரமான பாவியாகவும் எனக்குத்

www.padippkam.com



தோனுது. மொத்தமா அந்த நபரை பார்த்தாவே எனக்கு அருவருப்பா இருக்கும்.''

அவன் ''அந்த ஆளா....

எவனடா கவுத்துவோமுன்னுதான் அலைவான்.''

இவன் ''அய்யய்யோ.... அந்தாளா! அயோக்கியன் அந்த மூஞ்சே திருட்டு மூஞ்சி. தனக்குத்தானே தன்ன பிஸ்தான்னு நம்புறதுக்கு கிடைச்ச ஆள பலி வாங்கிடுவான் வேசி மகன்..... அந்த நபரை எனக்கு ஒருபோதும் பிடித்ததில்லை''

அவன் ''என்னப்பத்தி அந்த நபருக்கு தெரியும். என்னிட்ட வால் ஆட்டினா மகன கண்டதுண்டமா வெட்டப் போட்டுடுவேன்'' இவன் ''எப்பவாவது கேன்டியன்ல அந்த நபர பார்ப்பேன் 'என்ன' என்ற வார்த்தைக்கு 'என்ன' என்ற பதிலோடு சரி அதுக்கு மேல பேச எனக்கு மனம் ஒப்பாது.''

உவன் ''நம்ம மூவருக்கும் அந்த நபரை பிடிக்கல, இதையே நாம ஒன்னா இருக்கிறதுக்கான ஒரு அம்சமாக கருதலாமா?''

அவன் ''இருக்கலாம்''

உவனை நோக்கி இவன் ''நீ எல்லாத்தையும் பொதுவாக்கனுமின்னு பாக்கிற, நீ வேற, நான் வேற, அவன் வேற,''

உவன் ''சரி இருக்கட்டும்...... இந்த நபரோட நெருங்கிய நபரைப் பற்றி யோசிப்போம்.''

அவன் ''ஓகோ அந்தாளா''

அவன் ''ஆமாம்.....''

இவன்''ஆமாம்.... அவங்க ரெண்டு பேரும் பிரண்டுக நான் பல முறை கவனிச்சிருக்கேன்.''

இவன் ''உவன், நீ அந்த ஆளோட சேர்ந்து 'டீ' குடிப்பத பார்த்திருக்கேன். அந்த நபரை பிடிக்காது உனக்கு ஆனா அந்த நபரோட பிரண்டு அந்த ஆளை பிடிக்கும் இல்லையா?''

உவன் ''அந்த ஆளை எனக்கு பிடிக்காது. அந்தாளுடைய வயதும் என்னோட பேச வர்ராங்கிறதும் நம்மோட வேலை செய்துகிட்டு இருக்கிறார் என்பதையும் தவிர அந்தாளுகூட நின்னு டீக் குடிக்கிறதில எனக்கு வேறு எந்த விசயமுமில்ல நல விசாரிப்புங்கிறது சக மனுசங்களோட நாம வச்சிக்கிற்ற நாகரீகம் தான்''

அவன் ''உவன்' நீ எதிலும் பற்றில்லாதவன் போல இருக்கிற, ஆனா பாசப்பினைப்பா எதிலாவது மாட்டிக்கிட்டு அழுது புலம்பி மனம் சோர்ந்து போய்; நீ எதை உன் கடமையாக கருதுகிராயோ அதையும் செய்ய முடியாதவனா புலம்புரவனா இருக்கிற...''

இவன் ''தனக்கு ஒத்து வரலன்னு தெரிஞ்சா தூக்கி எரிஞ்சுடனும் இல்லன்னா அவமானமும் அருவெருப்பும் குரோதமும் தான் நமக்கு மிஞ்சும்''

அவன் ''இவன் நீ என்ன உடனே பிரசங்கியா ஆகிட்ட''



படிப்பகம்

www.padippkam.com



இவன் ''அவன்' நீ ஒருபோதும் திருந்த மாட்டாய்.''

அவன் ''யாரு யாரை திருத்திறது''

உவன் ''நாம நம்ம நட்பை பற்றி யோசிக்கலாம்''

அவன் '' இதெல்லாம் வேண்டாத வேலை''

இவன் ''உவன் நீ எப்பவும் இப்படித்தான். பிழைப்ப விட்டுப்புட்டு இப்படி வேண்டாத யோசனையில இறங்கி அப்புறம் குத்துதோ குடையுதோன்னு புலம்பிக்கிட்டு அலைவே.''

உவன் ''அதற்கில்ல..... அந்த நபரை நமக்கும் பிடிக்கல அந்த நபர் நம்ப பக்கத்திலேயும் வர்ரதில்லை. அந்த நபருடைய பிரண்டு அந்த நபரு செய்கிற காரியங்களையே செய்கிற ஆளுதான். பின்பு எப்படி அந்த ஆளு நம்மகிட்ட வர முடியுது நாமும் அந்தாளு கூட நின்னு டீ குடிக்க முடியிது.... அந்த ஆளுதான் ஏதோ அபாயகரமான தாய் தோன்றார்.''

இவர்கள் மூவரும் ஒருவரில் ஒருவரை அடையாளப்படுத்தி கொள்கிற வழியில் கடற்கரையில் நகர்ந்து கொண்டிருந்த ஜனத் திரள்களின் பொதுப்பண்பான ஒருவனாய் உருப்பெற்றார்கள். அந்த ஒருவன் அங்கு நடந்து சென்று கொண்டிருந்தான். பாலுறவு, விபச்சாரம், குடும்பம், நம்பிக்கை, கடமை என மனித இனத்தில் நேர்ந்துபோன காலக்குழிவு ஆண் பெண் என்றில்லாது வைத்திருந்த அகன்ற வெளினுல் அவன் நடந்து சென்றான். அவனுக்கு உணவிற்கான வேட்டை அலுத்துப் போனதாக இருந்தும் உணவு அவசியமாக இருந்தது. அவனை அனேக விலங்கினங்கள் கடந்து சென்றன. எதுவும் அவனது வேட்டை கவனத்திலில்லை. எவ்வித கொலைப்பழினுலிருந்தும் தான் விலகியிருக்கும் கவனத்தில் நீண்ட தொலைவு கடந்து வந்திருந்தான். அங்கு இருந்தும் இல்லாததாக அழகிய களைமான் ஒன்று அவன் வந்த திசை நோக்கி நின்றது. அவன் அதனை காண நேர்ந்ததும் அவன் கடந்து வந்த தூரமும் மானின் கவர்ச்சியும் அவனிடமிருந்த வில் அம்புகளை மண்ணில் வீழ்த்தியது. மானின் நிழல் அவன் அறிந்திராத மொழி வரிவடிவங்களாய் சிதரிக்கிடந்தன. அவன் தன்னில் பெருமயக்கமுற்று மானை நோக்கி கைகூப்பி வணங்கி நின்றான். காட்சிகள் விலகி விலகி மானின் வழிகளும் அவனது விழிகளும் ஒன்றை ஒன்று நேர் சேர்ந்த நொடியில் அவன் மானின் சுவாசமாகி அதன் சிறையில் கிடந்தான். அச்சிறையின் இறுக்கமும் முழுக்கமும் அவனை அதிலிருந்து விடுபட முயற்சி கொள்ள செய்தது. அவனை சிறைகொள்ளும் கவனத்தில் முழு ஆக்குறுதியோடு எப்போதும் இருந்த போதிலும் அது புணர்தல் உணர்வு கொள்ளக்கூடியதாக இருந்தது. அவ்வாறு மான் தன்னுள் புணர்தணர்வு மேலெழுந்த நிலையில் தன்னில் பெண்மான் ஒன்றை தோற்றுவித்து அனைபுணரும். புணர்தலின் உச்சி நிலையில் மான் அவனை சிறைக்கொள்ளும் கவனத்திலிருந்து விலகும். அந்த நொடிகளை அவன் பலமுறை கவனித்து



படிப்பகம்

www.padippkam.com



வந்தான். இச்சிறையிலிருந்து தான் விடுதலை பெற சரியான பொழுது அதுவென்று அப்படியே ஒரு பொழுதில் மானின் சிறையிலிருந்து மீண்டு ஓடிவந்தான். மண்ணில் வீழ்ந்து கிடந்த தனது வில் அம்புகளை நோக்கி ஓடிவரும் வழியில், இந்த மாயமானை கொன்று வீழ்த்த வேண்டும் என்ற உறுதியில் வில் அம்புகளை கையில் எடுத்து மான் நின்ற திசைநோக்கினான். அதன் விழிகளோடு தனது விழிகள் பொருந்தாத வண்ணம் அதன் உடல் பகுதியை கவனித்தான். மானின் ரோமங்கள் அழுக்கு பிசுபிசுப்போடு பிணைந்து நீண்ட சடைகளாய் தரைவரையிலும் வளர்ந்து கிடந்தது. கால்கள் கூறிய நகங்களால் தரையில் நின்றன. மாயமான் வேற்று ரூபம் தரித்ததில் அதன் முதுகுத்தண்டு வழியாக அதன் பிடறிவரை பார்வையை செலுத்தினான். பிடரியிலிருந்து அதன் கழுத்து நீண்டு வளைந்து சென்றபடி இருந்தது. அதன் தலை வாத்தின் தலையாக இருந்தது ஒரு இடைவெளியில் அதன் விழிகளும் அவன் விழிகளும் ஒன்று குத்தி நகர்ந்தன. அதில் விலங்கு தன்னை சுவாசித்து சிறைப்படுத்தாததை கண்டு அதன் தலையை வெட்டிச்சாய்க்க இதுவே சரியான நிலை என்று அதன் தலையை நோக்கி, தனது வில் அம்புகளை பொருத்தினான். அம்பு அதன் தலையை குறிவைத்த நொடியில் அது அவனை விலுங்கி சிறைப்படுத்தி இருந்தது. இந்த விலங்கு பெண்ணோடு புணர்ச்சி அற்றதாய் தன் நிழலை ஓடியது புணர்ந்த வண்ணமிருந்தது. அதன் ஜீவதாதுக்கள் வியர்வையாக உடல் மேல் கசிந்து விலங்கின் நிழலில் விழுந்தது. கரைந்த வண்ணமிருந்தது. தனது ஓயாத புணர்ச்சியினால் விலங்கு அவனை சிறைகொள்வதில் கவனம் விலகாது இருந்தது. இதை பல முறையாக அறிந்துணர்ந்து அருவெறுப்பான அச்சிறையிலிருந்து தான் விடுதலை பெறுவதற்கான பிரயாசையில் அவன் அதன் ஜீவ தாதுக்களில் கலந்து வியர்வை துளியாக அதன் உடல்மேல் தோன்றி வழிந்து அதன் நிழலில் விழுந்து கல்லாக உறுமாறிக் கிடந்தான். அவன் விலங்கின் சிறையிலிருந்து அதன் ஜீவ தாதுக்களில் கலந்து வியர்வை துளியாய் விலங்கின் நிழலில் விழுந்து பல கோடிக் கணக்கான கற்களாக மண்ணில் குவிந்து கொண்டிருந்தான். ●



படிப்பகம்

www.padippkam.com





# இன்றெனக்குப் புரிந்தது

பாவட பருவத்துல
படிக்கப்போற நாளையிலே
நம்ம ஊரு பாலுத்தேவர்
சாணிவாறச் சொல்லி ஒன்ன
சாட்டையாலே அடிச்சானாம்.

அடம்புடிச்ச ஒன்னப்பார்த்து
அவுசாரி மகளேன்னானாம்
அம்மாயி சொன்ன அப்ப
அர்த்தம் புரியலம்மா

வாழத்தாறு கறைபோட்ட
காரைக்குடி சேலகட்டும்
செட்டி நாட்டுப் பொண்ணாட்டம்
செல்லம்மா நீ இருக்கையிலே
வயசு வந்த ஒன்னப்பாத்து
பாலுமவன் ரங்கசாமி
பறச்சியின்னு ஏசுவானாம்.

அம்மாயி வடிச்ச கண்ணீர்
ஆறாப் பெருக்கெடுக்க
அப்பக்கூடப் புரியலம்மா

என்னப் பெத்த ராசாத்தி
எங்கப்பனோட பாப்பாத்தி
தவமிருந்து நாம் பொறக்க
தாயான ஒன்னப்பார்த்து
பாலு பேரன் பெரியசாமி
நோழிமக நோழிம்பானாம்.

அப்பன் ஆத்தா பேருசொல்ல
தப்பாம நாம் பொறந்தேன்
எம்பேரு சொல்றதுக்கு
எனக்கு ரெண்டு பிள்ளையம்மா.

பாட்டியான ஒன்னப்பார்த்து
பாலுவோட கொள்ளுப்பேரன்
பத்து வயசு அய்யாச்சாமி
வாடி போடி ஏண்டியின்னு
வக்கணையா பேசுராம்மா.

என்ன கொடுமையம்மா
யாறு செஞ்ச சூதம்மா
அப்பனுக்கு அவுசாரி
பிள்ளக்கி பறச்சாதி
பேரனுக்கு நோழிகே
கொள்ளுப்பேரன் வாடிபோடி.

நாலு தலைமுறையா
நடைபொணமா அலையிறியே
மூட நெல்ல ஒத்தையாளா
முக்காம தூக்கிடுவ.

காலனி சனங்களுக்கு
கவர்மெண்டு தோண்டுன கிணம்
ஊத்துப் பள்ளம் ஓரத்துல
ஏசரமான சிமெண்டுத்தளம்.

மண்பானை சட்டி யோட
மணிக் கணக்கா காத்திருப்ப
தண்ணிப்பிச்ச தாங்கேட்டு
தவியா தவிச்சு நிப்ப

கள்ளசாதிப் பொண்டுகள்ளா
பள்ளத்துல நிக்கச் சொல்லி
தண்ணிப் பிச்ச ஊத்துவாக
தரம் குறைவா பேசுவாக

கைபுடிச்ச நின்ன எனக்கு
காரணம் தெரியலம்மா



படிப்பகம்

www.padippkam.com



தீவாளி பொங்கலுன்னு
திருவிழா காலத்துல
அய்யாமாரு வீட்டுக்கெல்லாம்
அழைச்சுப்போவ கூட என்ன

வீடுவீடா போயிநின்னு
பல காரம் கேப்பியம்மா
சட்டிக்குள்ள விழுந்ததுல
சட்டுன்னு நானெடுத்து
ஆசையோட திங்கையிலே
அணச்சு மொகம் பார்ப்ப.

செருப்பில்லா காலோட
செகப்புச்சட்டை மேலோட
சின்னவனா இருந்த அப்ப
சிந்திக்க முடியலம்மா

ஆத்துல தண்ணிவந்தா
அப்பனுக்கு வேலை வரும்
வெதபாவ ஏறுவுட
நாலுசனந் தேடிவரும்.

நடுப்பட்டி பம்பச்சாமி
வாடா நொண்டியின்னு
டாப்போட்டு கூப்பிடடப்ப
டவுசருல நானிருந்தேன்.

அப்பனுக்கு இளையவரு
அடேயின்னு கூப்புட்டது
அர்த்தம் புரியலம்மா

மாமஞ் செய்ய ஒதவியில
மதுரையில படிக்கையில
சூட்டுச் சட்டை டையோட
சூரக்குண்டு நா வருவேன்
பறப்பய நொண்டி மவன்
தொரையாட்டாம் போறாண்டோ
சேரிப்பய ஊருமேல
செருப்போட போறாம்பாரு
கட்டிவச்சு அடிக்கச் சொன்ன
கள்ளர்கள மறக்கலம்மா

வள்ளால பட்டியில
ஏழுநாளு எருதுகட்டு
கூடப்படிச்ச பெருமாளு
கூப்புட்டு நாம்போனேன்.

பெருமாளு சொந்த பந்தம்
பெருந்தனக்கார வீடு
சாதியில அம்பலந்தா
சண்டை வந்தா வம்பனுக
கூடவந்த நோட்டம் பாய்க்கு
கூடத்துல சாப்பாடு
வீதியில குந்தச் சொல்லி
நாயாட்டம் எந்நெலமை

அப்பஞ் சேர்த்த பண்ணவேல
அக்கா சேர்த்த நடவு கூலி
நீ சொமந்த சாணிக்கூடை
எம்படிப்புக்கு மூலதனம்

அரசாங்க சலுகை யெல்லாம்
அப்பனுக்குத் தெரியலம்மா
பட்டதாரி எனக்குக் கூட
பலன் ஒன்றும் கெடைக்கலம்மா.

பணக்காரன் புள்ள பணக்காரன்
அதிகாரி புள்ள அதிகாரி
ஒதுக்கீடு சலுகைக்குள்ள
ஒளிஞ்சிருக்கு வர்க்கமம்மா

உனக்குள்ள ஆளுமைய
ஒடுக்குது சாதியம்மா
காரணம் புரியுதம்மா

நம்மைப்போல ஏழைபாழ
நாடுபூரா இருக்குறாக
ஒன்னு சேர்த்து யுத்தஞ் செய்ய
உக்கிரமா தெரளுராக
**அம்மா!**
**எனக்கு அருவா வேணும்.**

– நொண்டிக் கருப்பன்



படிப்பகம்

www.padippkam.com

# ன்ன பிற...

*சிறுகதை*

சிவகாமி

"...... னைத்துக கொண்டிருக்கிறான் இவன்? கேரளத்தில்... எங்கே... போயும் போயும் கேரளத்தில் தன்னட கெய்வெரிசையைக் காட்டணும்னு நெனச்சானல்ல..." நபரின் வார்த்தைகளில் அதன் அர்த்தம் முழுதாக வெளிப்பட்டாலும் கேரளம் என்று சொல்லும் போது வெளிப்படும் பெருமையை எதிர்நபரும் கேட்டு உற்சாகமுற்று உடலை முன்தள்ளி தலையைப் பிரயாசையும் திருப்பி எக்ஸார்ஸிஸ்ட் கணக்கில் விளித்தார்.

"....... நல்லதாகிப் போச்சு. அவனை மாத்தினது. இல்லெங்கில் நாங்களே துட்டு வாங்க வெச்சு அவனை ஒரேயடியா வீட்டுக்கனுப்பாமிருந்தது. ஆஷிஹூம் நானும் எப்படி மாட்ட வெக்கலாம்னு யோசிச்சு வச்சிருந்தோம். நல்ல வேளை ட்ரான்ஸ்பர் கெடைச்சாச்சு"

உரையாடலில் ஈடுபட்டிருந்த இவருக்கு மட்டும் தெரிந்த மூன்றாம் நபர் மிகமிக மோசமான ஊழல் பேர்வழியாக சித்திரமாகிக் கொண்டிருந்தான், உடனிருந்த நான்காமவன் பார்வையில். நான்காம் நபருக்கு மலையாளம் தெரியாததால் பேச்சின் சாரத்தையும், தொனியையும், சைகைகளையும், முகபாவனைகளையும் மாற்றி மாற்றிப் படித்துக் கொண்டிருந்தான்.

முதல் நபர் கதைசொல்லி 8 பேர் நடுவே தன்னுடைய அபிப்ராயத்தையும் ஏற்றிச் சொல்லிய விதம் கவனிக்கத் தக்கதாயிருக்கிறது.

"நான் யாராக்கும் 'கோஷி பிலிப்'பாக்கும் இது நாள்வரை என்னைப் பற்றி கரப்ஷன் என்ற வார்த்தையைக் கேட்டாமுண்டோ."

எதிர் நபர் ஆம் இல்லை என்ற எதுவும் சொல்லாமல் ஒருவித சங்கடத்துக்குள்ளானவர் போல் தடுமாறிக்கொண்டிருந்தார்.

"என்னத் துணிச்சல். அவன் லஞ்சம் வாங்கியது உங்களுக்காகவும், ஆஷிஹூக்காகவும் இன்னும் மானேஜிங் டைரக்டருக்காகவும் என்று சொல்ல என்னத் துணிச்சல் என்னைப் பற்றியும் கூட எதுவும் சொன்னானோ...."

இந்த இருவரையும் கதிகலங்க வைத்த அந்த மூன்றாவது நபரைப் பற்றி எண்ணமிட்டவாறே நான்காம் நபர் ஊழல் பற்றி யோசிக்கத் தொடங்கினான்.

விலையுயர்ந்த காற்சராய், பச்சைக் கலர் கட்டம் போட்ட சட்டை, குளிர் கண்ணாடி, அரும்பும் நரை, சதா தன்னைப் பற்றியும் கேரளம் பற்றியும் பேசும் கோஷி பிலிப் எப்படிப்பட்ட மனிதன்? இவருடைய பேச்சு, நடை, உடை, பாவனையைக் கொண்டு இவர் ஊழல் புரிபவரா இல்லையா என்று முடிவுக்கு நான்காமவர் வரமுடியவில்லை.


ஆனால் டையைக் கழுத்தில் இறுக்கி, முஞ்சுறு போல துருதுருவென, தன்னைப் பற்றி எதுவும் சொல்லியிருக்கக் கூடாது என்ற எதிர்பார்ப்பில் என்னைப் பற்றி லஞ்சப் பேர்வழி ஏதும் சொன்னானா என்று மூன்று முறை கேட்ட இரண்டாம் நபர் பற்றி ஓரளவுக்கு ஊகிக்க முடிந்தது.

"இப்போகூட நாம் போகுமிடத்தைப் பற்றி முன்கூட்டியே விசாரிக்கலாம்னு



படிப்பகம்

www.padippkam.com





படிப்பகம்

www.padippkam.com

இருந்தேன். ஆனால் பணம் கேட்டு தூது அனுப்பியதாக சொல்லிடக்கூடாதுல்ல அதனாலதான் யாரையும் அனுப்பல''

கேரளா தூய்மையான மண்ணாயிருப்பதில் இரண்டு நபர்களுக்கும் பல சங்கடங்களும், நெருக்கடிகளும் இருப்பதாக அவர்கள் பேச்சு தொனித்தது. என்ன காரணத்தாலோ, ''எங்கப்பன் குதிருக்குள் இல்லை'' என்ற வாசகம் நான்காம் நபருக்கு ஞாபகம் வந்துகொண்டிருந்தது.

நான்காமவர் கேரளாவைப் பற்றியும், கேரளத்து மக்களைப் பற்றியும் கருத்துக்களை அவரறியாமலே சேகரித்து, மேற்கொண்டு தனது பிரயாணத்தைத் துவக்கினார். மூக்கிலிருந்து ஒலிக்கப்படும் ''ஞான்'', ''கழிஞ்ஞுப்போ'', ''பூனத்தில் குஞ்ஞுப்துல்லா'' போன்றவற்றின் விடுதலையின்றி நடந்தும் புகைவண்டியிலும், பேருந்திலும் சிலகாலம் செலவிட்டார்.

''கேரளத்தில் தேர்தல் தமிழ்நாட்டைப் போல் கிடையாது. இன்னும் பிரச்சாரம் சூடுபிடிக்கவில்லை. சுவரிலும் மிகக்குறைந்த அளவே சுவரொட்டிகள். வாக்குச் சாவடிகளைச் சோதனையிடும் அவசியம் இல்லை. ஏனெனில் பள்ளிக்கூடங்கள் நல்ல நிலையிலுள்ளன. அரசு பணம் கொடுக்காவிட்டாலும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் நிதிவசூல் செய்து நல்ல உறுதியான கட்டிடத்தைக் கட்டி வருகிறார்கள்''.

''.... இங்கே சுத்தமான உணர்வுடன் இருக்க முடியாது. நசநசக்கும் வியர்வையும், அதைக் கசக்கி வெளிக்கொணரும் வெப்பமும்... சதா குளிக்கவேண்டும் போல் ஒரு வேட்கை.''

சந்திரஹாயன் என்ற மலையாளப் பெயரில் கமலஹாசனையும், விலாசினியில் சுஹாஸினியையும், ராமச்சந்திராக்களில் எம்.ஜி ஆரையும் இணைத்து திராவிட நாடு பற்றி யோசித்துக்கொண்டு அவன் போக்கில் நடக்கவிடாமல் சம்பாஷணைகள் சுண்டி விட்டுக் கொண்டிருந்தன.

''....... கேரளாவில் பெண்கள் ஆண்களை விட எண்ணிக்கையில் அதிகம்.''

தேவலையே, பெண்களை உயிரோடு வாழவிட்டு விடுகிறார்களே. நான்காமவர் தனக்குள் சிரித்துக்கொண்டார்.

''இங்கே படித்தவர்களும் அதிகம். படித்தப் பெண்கள் தொகை இந்தியாவிலே அதிகமானது''

''ராஜனை சித்திரவதை செய்து கொன்றுவிட்டது கேரளப் போலீசு''

''உன்னிக்கிருஷ்ணனின் மாந்த்ரீகத்தால் மோகினிப் பிசாசொன்று காளைக் கன்னுக்குட்டியாகி கன்னிப் பெண்ணை முட்டிச் சாய்த்தது''

''வளர்ச்சி மாதிரிகள் இரண்டு. ஒன்று பஞ்சாப், இன்னொன்று கேரளா. ஒரு ஏக்கரில் உற்பத்தி விகிதம், தனிநபர் வருமானம், அடிப்படை வசதிகள் இவற்றை அளவுகோலாகக் கொண்டால் பஞ்சாப்தான் வளர்ச்சியடைந்த மாநிலம். இந்த வருமானமும் வசதிகளும் மேம்பட்ட வாழ்வின் அடையாளங்கள். ஆனால் உற்பத்தி அளவைப் பெருக்காமல், தனிநபர் வருமானத்தைக் கூட்டாமல், மேம்பட்ட வாழ்வின் அடையாளங்களை பெண் கல்வி, சுகாதாரம், சிறுகுடும்பம், அடிப்படை வசதிகளை எட்டிவிட்டது



படிப்பகம்

www.padippkam.com



கேரளா. நாம் கேரளாவைத்தான் நமக்கான மாடலாக' ஏற்றுக்கொள்ள வேண்டும்''

''தமிழ்நாட்டைப் போலவே, கேரளாவிலும் பீடித்தொழிலாளர்கள் உண்டு. ஆனால் குழந்தைத் தொழிலாளிகள் கிடையாது அவர்களது தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் குழந்தைகளைக் காணமுடியாது - ஏனெனில் அங்கே தொழிற்சங்க இயக்கம் வலுவாக இருக்கிறது''

''கேரளாதான் எப்படித் தண்ணியும் தளப்புமா பச்சைப் பசேலுன்னு இருக்கு.''

''இவிட செம்மீனும் (இறால்), குஞ்சுமீனும் (சென்னகுன்னி) கிட்டும், ரொம்ப டேஸ்டி''

''கேரள நாட்டிளம் பெண்களுடனே....''

வல்சலாக்கள், வத்சலாக்கள், சுஷ்மாக்கள், ஒலியம்மாக்காள், சாராக்கள்... தம்புராட்டிகள்....

''வேறெங்கிலுங்காட்டி இவிட நெலம் வெல ரொம்ப ஜாஸ்தியாயி.... திருநெல்வேலில ஏக்கர் எட்டானூரம் பத்தாயிரம் வாங்கலாம். இவிட முடியாது. சென்ட் ஒரு லட்சம் .... ஒரு லட்சமாக்கும்.''

''வளைகுடாப் பணம் கொட்டுகிறது. கேரளப் பெண்கள் நர்சுகளாக, தாதிகளாக......''

அடைக்குறிக்குள் விழுந்த பிரயோகங்கள் நான்காம் நபர் மேல் விழுந்து குவிந்தன.

''தரமான இலக்கியங்கள், தரமான சினிமாக்கள் மலையாளத்திலே உண்டு. உலகத்தில் ஒரே எழுத்தாளரான மிஸ்டர். ஃபிரிக்ஸ்ஸும் சந்தர்ப்பவசமாகக் கேரளாவைச் சேர்ந்தவரே. இங்கு கிராமந்தோறும் படைப்பின் விஷச் சக்தியாய் நாகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.''

''பருவகால மழை கூரையைப் பிய்த்துக்கொண்டு கொட்டும். ஒரு வாரம் தொடர்ந்து மழை பெய்தால் கோன்னி நிலப்பகுதி தொடர்புகள் அறுந்து தீவு போலாகிவிடும்.''

எழுகோன், அடூர், பத்தனந்திட்டா, கொட்டாரக்கரா, நெய்யாற்றின் கரா, சிறையின் கீழ்..... இப்படி குறுக்கும் நெடுக்குமான குறிக்கோளற்ற பயணம் செய்தார்.

பலா மரங்களைச் சுற்றி, கிளிப்பச்சையில் சிறிதும் பெரிதுமாக பலாக்காய்கள் பம்மிக்கிடந்தன. அதன் பெரிய காய்ந்த இலைகள் கால்களுக்கிடையில் சரக்கிட்டுப் போக ஓடுவேய்ந்த கேரளபாயிக் கட்டிடங்களில் ஏறி இறங்கினார். செம்பருத்திப் புதரிலிருந்து கனமற்ற வெண்மையில் பூக்கள் மலர்ந்திருந்ததையும் கண்ணுற்றார். கைகளை நெஞ்சுக்கெதிரே வைத்து குவிக்காத தயக்கமான வணக்கங்கள்தான் அவருக்கும் பரிச்சயம் என்பதில் நிம்மதியேற்பட்டது.

''என்ன நடந்தது தெரியுமா......? என்னவெல்லாம் நடக்குது இங்கே. சபரிமலை குடிதண்ணீரில் புழுக்கள் நெளிந்தன. பக்தர்கள் வழியெல்லாம் மலம் கழித்தார்கள். பதினெட்டு கோடி பக்தர்களின் நெய் நிரப்பிய தேங்காய்களும் உடைந்து விடுவதில்லை. உடையாத தேங்காய்கள் மறு விற்பனைக்குப் போகின்றன. ஆயிரம் வெடிகளும் வெடித்துவிடுவதில்லை.



படிப்பகம்

www.padippkam.com



ஒன்றிரண்டு கட்டுக்களை வெடித்து மீதியை விற்றுவிடுகிறார்கள். கோடிக்கணக்கில் உண்டியலில் துட்டு விழுகிறது. கடவுளின் பெயரால் நடக்கும் காரியங்களின் லட்சணங்கள்.......''

''எல்லா இடத்திலும் அதே லட்சணந்தான்'' நபரும் எதிர் நபரும் பேருந்தில் மும்முரமானதொரு உரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

''தேவசம் போர்டை எதிர்த்து அந்தம்மா கோயம்புத்தூரில் வசதிபடைத்த ஐயப்ப பக்தர்களிடம் வசூல் செய்து சில நல்ல காரியங்கள் பண்ணலாம்னு போனப்போ, தேவசம் போர்டுகாரங்க, அந்தம்மா வர்றா பணம் தராதீங்கோன்னுட்டாங்களாம்........''

''பின்னே, அந்தம்மா பம்பா ஆற்றுப் பாலத்தை ஜீப்பில் கடக்க முயற்சித்தப்போ முன்னால் பெட்ரோல் டயர்களைக் கொளுத்தி உருட்டி விட்டார்கள். வண்டியை ரிவர்ஸ் செய்தப்போ பின்னாலிருந்து தீ உமிழ்ந்துகொண்டு டயர்கள் உருண்டு வந்தன. பாலத்துக்குக் கீழிருந்து கவண்களிலிருந்து கற்கள் பறந்து வந்துகொண்டிருந்தன. போலீஸ் சுட்டதில் ஒருவன் மரணம் ஜீப் பற்றியெறிந்தது. அந்தம்மா தெய்வாதீனமாத் தப்பித்தாள்.''

''..... தெரியுமா, பெண் கழுதை பதினெட்டுப் படியேறி குட்டிப்போட்டது. கருவுற்றக் காட்டுப் பன்றி தேவசம் போர்டு ஆபீஸ் பின்னால் எட்டு அருமையானக் குட்டிகளை ஈன்றது. காட்டு வாசிப் பெண்கள் தூமை தொடக்கு இருந்தாலும் ஐயப்பன் மலையில்தான் வெறகு பொறுக்கறாங்கோ.''

தலை சாய்த்துக் கிடந்தது ஜடாயு மலை. குன்றெங்கிலும் ரப்பர். மலையில் தார் ரோடு போடும் வேலை நடந்துகொண்டிருந்தது.

''இதைவிட ஸ்கில்ட் லேபருக்கு தினப்படி ரூ. 120 முதல் ரூ. 150 வரை கிட்டும். அன்ஸ்கில்டுக்கு ரூ. 80 முதல் ரூ. 100 வரை உண்டு.''

''நம்பூதிரிகள் எண்ணிக்கையில் ரொம்ப குறைவு''

''பார்த்தாலே ஈழவப் பயல் என்ற முத்ர உண்டல்லோ தினப்படி ரூ. 100 கிட்டியும் முன்னேறத் தெரியாத மடப்பசங்கள்''

''சந்திரனில் கூட டீக்கடை திறந்துவிடுவர் மலையாளத்து நாயர்கள்.... என்ட குருவாயூரப்பா.....''

''தற்கொலைகள் கேரளாவில்தான் அதிகம்''

''தேவசம் போர்டை கலக்கிய அந்தம்மா மீனவ சாதியாம். மலையாளம் நல்லா எழுதுவா.''

''முந்திரியாலைகள்ல வேலை செய்யறாங்கோ கையெல்லாம் புண்ணா யிருக்கு. போன தடவை கேரளா காங்கிரஸ்னா, இந்த தடவை எல்.டி.எப் தான் வரும். மாத்தி மாத்திதான் ஓட்டுப் போடுவாங்க.''

''ஓட்டு மை தெரியாத அளவு கை கறுப்பாயிருக்கே''

''அவங்கெல்லாம் ஈழவங்க, புலையங்க... சரியாத் தெரியலன்னாலும் அப்படித்தானிருக்கும்''

''எல்.டி.எப் ஆளை யு.டி.எப்ப ஆள் அடிச்சு மண்டையைப் பிள....'' ●



படிப்பகம்

www.padippkam.com

# தலித் தலைவர்களின் அரசியல் நிலைப்பாடுகள் நேற்று - இன்று - நாளை

எ.த. இளங்கோ

'' நான் என் மக்களுக்குச் செய்திருப்பவை, கொடிய வறுமை துன்பங்களுக்கும், வாழ்நாள் முழுவதும் முடிவில்லாத தொல்லைகளுக்கும், என் பகைவர்களை எதிர்த்துப் போராடி செய்ய முடிந்தவையாகும். மிகவும் சிரமப்பட்டு இந்தப் பயணவண்டியை இன்றுள்ள நிலைக்குக் கொண்டுவந்து நிறுத்தி இருக்கின்றேன். தடைகளும், இன்னல்களும் ஆயிரம் வந்துற்ற போதிலும் இந்தப் பயணத்தொடரை மேலும், மேலும் முன்னோக்கி நடத்திச் செல்ல, எனக்குப் பின்னால் என் தளபதிகளால் முடியாமல் போகுமானால் இப்போது கொண்டுவந்து நிறுத்தியுள்ள நிலையிலேயே அது இருக்கட்டும். எந்த சூழ்நிலையிலும் இந்தப் பயணத்தொடர்வண்டி பின்னோக்கிப் போக அவர்கள் அனுமதிக்கக் கூடாது. என் மக்களுக்கு விடுக்கும் கடைசிச் செய்தி இதுவே.''

- பாபாசாகேப் அம்பேத்கர்

## நேற்று

ஆயிரமாயிரம் ஆண்டுகள் அடிமைகளாய் - உரிமைகள் ஏதுமின்றி வாழ்ந்த - வாழும் தலித் மக்களின் அடிமை விலங்கொடிக்க ஆர்த்தெழுந்திட்ட அரிமா நம் பாபாசாகேப் டாக்டர். அம்பேத்கர் அவர்கள். இந்த நூற்றாண்டின் துவக்கத்தில் எழுச்சிக் கனலாய், புரட்சிப்புயலாய் வீறுகொண்டெழுந்த அவர் இந்துமத சனாதனிகளின் முகத்திரையைக் கிழித்தார். சாதியை ஒழித்து சமத்துவம் படைக்கதன் வாழ்நாள் முழுவதும் உழைத்தார். இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்த ஆங்கிலேயர்களிடமும், 'சுதந்திர' இந்தியாவின் இந்துத்துவ ஆதிக்கம் கொண்ட தலைவர்களிடமும் அவர் தமது போர்க்குணமிக்க களப்பணியால் நமக்க இட ஒதுக்கீடு மற்றும் பல்வேறு உரிமைகளை இந்திய அரசியல் சாசனத்தின்படி பெற்றுத்தந்தார். அதனால் தான், இன்றைக்கு இந்தியா முழுவதும் உள்ள தலித் மக்கள் ஓரளவேனும் தலைநிமிர்ந்து நிற்க முடிகின்றது.

டாக்டர். அம்பேத்கர் அவர்களின் தலித் விடுதலைப் பணியை துவக்கிய அதே காலகட்டத்தில், இந்தியாவில் உள்ள அனைத்து தேசிய இனங்களிலும் பல தலைவர்கள் தோன்றி ஆங்காங்கே உள்ள தலித் மக்களின் விடுதலைக்காக உழைத்தனர். குறிப்பாக, தமிழகத்தில் தலித் மக்களின் விடுதலைக்காக உழைத்த முதல் மனிதராகவும், 'தமிழன்' என்ற இதழின் மூலம் தலித் மக்களின் எழுச்சிக்கு வித்திட்டவரும், தாழ்த்தப்பட்ட மக்கள் இந்துக்கள் அல்ல, அவர்களை இந்துக்கள் பட்டியலில் இணைக்கக் கூடாது என்று



படிப்பகம்

www.padippkam.com

ஆங்கிலேய அரசை எதிர்த்து உரக்கக் குரல் கொடுத்தவர் பண்டித அயோத்தி தாசர். 'பறையன்' என்ற இதழ் நடத்தியவரும், பாபாசாகேப் அம்பேத்கர் அவர்கள் கலந்துகொண்ட லண்டன் வட்டமேசை மாநாட்டில் இந்திய அரசின் பிரதிநிதிக் குழுவிற்கு ஆலோசகராக பங்கேற்றவர் தாத்தா இரட்டைமலை சீனிவாசன் அவர்கள். இந்திய குடியரசு கட்சியின் முன்னோடிகளில் ஒருவரான தந்தை சிவராஜ், அவருடன் இணைந்து தலித் விடுதலைக்காக மட்டுமின்றி தலித் பெண்ணின விடுதலைக்காகவும் உழைத்த அன்னை மீனாம்பாள், மற்றும் எம்.சி. ராஜா, சுவாமி சகஜானந்தா, தியாகி இமானுவேல், ஆரிய சங்காரன் போன்றவர்கள் தலித் மக்களின் விடுதலைக்காக தம் வாழ்நாள் முழுவதும் அயராது உழைத்தவர்கள். அவர்களின் உண்மையான உழைப்பினாலேயே இன்றைக்கும் தலித் மக்களின் மனங்களில் நீங்கா இடம் பெற்று வாழ்கிறார்கள்.

## இன்று

தலித் விடுதலைக்கு உண்மையான உணர்வுடன் உழைத்த உத்தம தலைவர்களை நாம் எண்ணிப் பார்க்கும் நேரத்தில் இன்றைக்கு தமிழகத்தில் தலித் விடுதலைக்காகப் போராடுகிறோம் என்று கூறிக்கொண்டும் பாபாசாகேப் அம்பேத்கரின் பெயரை பயன்படுத்திக் கொண்டு நூற்றுக்கணக்கான அம்பேத்கர் இயக்கங்கள் தமிழகத்தில் உள்ளன. அண்ணல் அம்பேத்கரால் தோற்றுவிக்கப்பட்ட இந்தியக் குடியரசு கட்சியும் கூட மூன்று பிரிவுகளாக பிளவுபட்டு இருந்தது.

மகாராட்டிர மாநிலத்தில், அக்கட்சி பிரகாஷ் அம்பேத்கர் தலைமையில் ஒரு பிரிவாகவும், ஆர்.எஸ். கவாய் தலைமையில் மற்றொரு பிரிவாகவும், கோபர்கடே தலைமையில் இன்னொரு பிரிவாகவும் உடைந்த நிலையில் இங்கே தமிழகத்திலும் அதே போன்று மூன்று பிரிவுகளாக இருந்தது. இதனால், இந்தியக் குடியரசுக் கட்சி மிகப்பெரிய வீழ்ச்சிக்குள்ளானது. நம் தலைவர்களின் ஒற்றுமை கேள்விக்குறியானது. இந்நிலையை தாமதமாக உணர்ந்த இந்திய குடியரசுக் கட்சித் தலைவர்கள் கடந்த ஆண்டு, மகாராட்டிரத்தில் ஒன்றாக இணைந்து செயல்படத் துவங்கிவிட்ட போதிலும் இங்கே தமிழக குடியரசுக் கட்சித் தலைவர்கள் தங்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளினால் ஒன்றிணையவில்லை என்பது தலித் மக்களுக்கு எதிரான செயலே ஆகும்.

அதே போல, தலைமையை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வரும் அம்பேத்கர் பெயரிட்ட பலவேறு இயக்கங்களால் தலித் மக்களுக்குப் பயன் ஏதும் உண்டா என்றால், நிச்சயமாக இல்லை. இவர்கள் இயக்கங்கள் கட்டுவதும், ஆள் சேர்ப்பதும் - அரசு தலித் மக்களுக்கு வழங்கியிருக்கும் சலுகைகளை அனுபவிக்கவும், தேர்தல் நேரங்களில் ஏதேனும் ஒரு அரசியல் கட்சியை ஆதரித்து அவர்களிடமிருந்து லட்சக்கணக்கான பணம் மற்றும் ஓரிரண்டு சட்ட அவை பதவி மற்றும் சலுகைகள் பெறுதவற்குமே என்பது கண்கூடானது மட்டுமல்ல, வெட்கக் கேடானதும் ஆகும்.



படிப்பகம்

www.padippkam.com

பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் பெயரைப் பயன்படுத்தும் இந்த இயக்கங்கள் அவரது கொள்கைகளை முன் வைப்பதில்லை. ஒரு இயக்கம் ஆளும் கட்சிக்கு ஆதரவு தருவதும், மற்றொரு இயக்கம் எதிர்க்கட்சி அணியில் இருப்பதும், இன்னொரு இயக்கம் தலித் மக்களுக்குள்ளேயே உட்சாதி மேலாண்மையை வெளிப்படுத்துவதும், பிறிதொரு இயக்கம் இந்துமத வெறி பிடித்த ஆர்.எஸ்.எஸ். சின் 'பினாமி'யான பாரதீய ஜனதா கட்சிக்கு ஆதரவு தெரிவிப்பதுமாக, அம்பேத்கரின் கொள்கைகளைப் புறந்தள்ளிவிட்டு அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து 'வியாபாரம்' செய்து வருகின்றனர். தலித் மக்களின் விடுதலைப் பணி என்பதை இவர்கள் மறந்து வெகு நாட்களாகி விட்டது. ஏனெனில், முதுகுளத்தூர், கீழ்வெண்மணி, விழுப்புரம் முதல்... கொடியன்குளம், ராஜபாளையம் வரை தொடர்ந்து ஆதிக்க சாதியினரால் தலித் மக்கள் கொல்லப்படுவதும், தலித் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுவதும், அவர்களின் வீடுகள் கொளுத்தப்பட்டு, சொத்துக்கள் திருடப்பட்டு அல்லது அடித்து நொறுக்கப்பட்டு நிராதரவாய் நிற்கும் இம்மக்களைக் காட்டி இந்த இயக்கங்கள் - தலைவர்கள் ஆதாயம் தேடிக் கொள்வதும், பாதிக்கப்பட்ட மக்கள் அதே நிலையிலேயே இருப்பதுமே இயல்பான வாழ்க்கை முறையாகிவிட்டது. இந்த இயக்கங்கள் அனைத்துமே பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் வழியில் தலித் மக்களின் விடுதலைப் பணியில் ஈடுபடாமல் தலைமை ஒன்றையே பெரிதாக எண்ணி சிதைந்து சிறு சிறு குழுக்களாய் ஆகிவிட்ட நிலையில் - அரசியல் கட்சிகள் சாயங்களில் சங்கமித்து விட்ட நிலையில் - இன்றைக்கும் சேரிகளில், ஆதிக்க சாதியினரால் வன்முறைக் கொடுமைகளுக்கு ஆளாகிக் கொண்டிருக்கும் தன்மான தலித் மக்களின் நம்பிக்கை இதுதான்: 'நாம் எப்போது நம் கரங்களை இணைப்போம்; ஒன்றிணைவோம்' என்பது தான்!

ஆனால், ஆதிக்க கட்சிகளின் 'அரசியலு'க்கு இறையாகிப்போன இவர்கள் அவர்களிடமிருந்து மீள்வார்கள், அனைவரும் ஒன்றிணைவார்கள் என்பதெல்லாம் கானல் நீர் போலத்தான் தெரிகின்றது. ஏனெனில், இவர்களிடையே ஒற்றுமை எண்ணமும், தலித் மக்களின் விடுதலையில் உண்மையான ஈடுபாடும் இருந்திருந்தால் பாபாசாகேப் அம்பேத்கர் வாங்கித்தந்த தனித் தொகுதிகளில் அரசியல் கட்சிகள் வெற்றிபெற அனுமதித்து இருப்பார்களா? **ஒற்றுமையாக இருந்திருந்தால் தமிழகத்தில் உள்ள 45 தனித் தொகுதிகளையும் கைப்பற்றி ஆளும் கட்சிகளுக்கு அரசியல் நெருக்கடியை தருவதன் மூலம் தமது சக்தியை அவர்களுக்கு தெரிவிக்க முடியும் அல்லவா? அதன் மூலம் நம் தலித் இன மக்களின் உரிமைகளைப் பெற முடியும் அல்லவா? ஆனால், இவர்களின் ஒற்றுமையின்மையால் 45 தனித் தொகுதிகளும் அரசியல் கட்சிகளின் கைப்பிடியில் சிக்கிக் கொண்டுள்ளன. தலித் மக்கள் ஆதிக்க சாதிகளிடம் அடிமைகளாய் வாழ்வதைப் போல, தலித் தலைவர்களும் ஆதிக்க அரசியல் கட்சிகளின் அடிமைகளாய் இருக்கிறார்கள் என்பதே உண்மை.**



படிப்பகம்

www.padippkam.com



நாளை

இந்நிலையில், பாபாசாகேப் அம்பேத்கர் நூற்றாண்டு விழா கொண்டாடும் நேரத்தில் தமிழகத்தில் முற்போக்குக் கருத்துக்கள் கொண்ட அம்பேத்கரின் சிந்தனைகளை தெளிவுற அறிந்த புரட்சிகரமான எண்ணங்கள் கொண்ட சில இயக்கங்கள் வீறுகொண்டு எழுந்தன. அரசியல் கட்சிகளைப் போற்றி வந்த தலித் மக்களும், தங்களது நிலையினை உணர்ந்து இந்த இயக்கங்களின் வழிகாட்டுதலின் பேரில், இவற்றின் பின்னால் அணியமாகி வருகின்றனர். அம்பேத்கரின் சிந்தனைகளை கடைசி தலித் வரை கொண்டு செல்வதன் மூலமும், இவர்கள் இதுவரை ஆதிக்க சாதி மற்றும் கட்சிகள் மட்டுமல்லாமல் தலித் தலைவர்களின் தவறான அரசியல் வழிமுறைகளால் சீரழிக்கப்பட்டு வந்ததையும் இந்த புரட்சிகர அம்பேத்கர் இயக்கங்கள் தலித் மக்களிடம் விளக்கிச் சொல்கின்றன.

இதன் மூலம், இளம் தலைமுறை தலித்மக்கள் மட்டுமல்ல; தலித் விடுதலையை விரும்பும் அனைத்து தலித் மக்களும் இவ்வியங்கங்களின் பின்னால் அணிவகுப்பது, தலித் மக்கள், தலித் ‘அரசியல்’ தலைவர்களை புறக்கணித்துவிட்டு தலித் விடுதலையை நோக்கி அணிவகுத்துக் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். இது போன்ற உண்மையான, தலித் விடுதலைப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ள ‘‘விடுதலைச் சிறுத்தைகள்’’ போன்ற இயக்கங்கள் சரியான நிலையெடுத்து தலித் மக்களை தலித் கலை, இலக்கியம், பண்பாடு போன்ற தளங்களிலும் செழுமைப்படுத்தி தலித் அரசியல் தளத்திற்கு அழைத்துச் செல்கின்றன.

இதுபோன்ற இயக்கங்களை தலித் மக்கள் ஆதரிப்பதன் மூலம், அவ்வியக்கங்கள் தமிழகம் முழுவதும் தங்களின் களங்களை அமைத்து வருகின்றன. இவ்வியக்கங்கள் உண்மையான தலித் விடுதலையை பெற்றுத்தரும் என்பதில் அய்யப்பாடு ஏதுமில்லை - இதுவரை!

ஆனால், புல்லுருவிகளை இதில் ஊடுருவ விடாமல் உறுதியான கொள்கைப் பிடிப்போடு செயல்பட வேண்டும். அரசியல் நிலைகளைப் புரட்டிப்போட்டு - சமூக விடுதலைக்கான பணியில் தலித் மக்களை அணியமைக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippkam.com

# தலித் வாழ்க்கையில் ஓஷோயிசம் ஒரு புதிய பார்வை

சூர்யா

இந்தியாவின் சிறந்த சிந்தனைவாதியான ''ஓஷோ'' எல்லா மத, சமூக, கடவுள் அரசியல் பாரம்பரியங்களுக்கும் எதிராக சவால் விடுபவராக திகழ்ந்த தத்துவப் பேராசிரியர். அடைத்து வைத்திருந்த ஆன்மீக ரகசியங்களை - அதன் தோற்றத்தை உரித்துக் காட்டி, தியானத்தை வெகுஜன மயமாக்கியவர். தங்கள் நாட்டிற்குள் நுழையக் கூடாது என்று 21 நாடுகள் தடை விதிக்குமளவு பழமைவாதிகளுக்கு எதிர்ப்பாளராயிருந்து ஓஷோவின் சிந்தனைகள் உலகம் முழுவதும் பரவியுள்ளது. அவரின் கருத்துக்கள் 650 நூல்களாக வெளிவந்துள்ள நிலையில்...

ஓஷோவின் தத்துவக் கூறுகள், செயல்பாடுகளின் சாரம் தலித்துக்களின் (தாழ்த்தப்பட்டோர்) வாழ்க்கையில் இயல்பாகவே இயங்கிக் கொண்டிருக்கும் விதத்தை, பகிரங்கப்படுத்திக் கொள்வது தலித் இனத்தைப் பற்றி ய ஒரு புது பார்வையாகப் படுகின்றது (New Look) இக்கட்டுரை.

ஓஷோயிசம் என்று கூறுவதே தவறு ஓஷோ எந்த கொள்கையோ, கோட்பாடோ, செயல்வடிவமோ நிர்மாணிக்க அனுமதிக்கவில்லை என்று சிலர் கூறலாம். இப்படி கூறுவதே ஒரு கொள்கையாய் தெரிகிறது எனக்கு..

ஓஷோவின் தனிமனிதத்துவ கருத்துக்களை தலித் சமூக வாழ்க்கை முறையில் ஒப்பிட்டுப் பார்க்கையில் தெரியும் சில காட்சிகளை ஆய்வோம்.

**'டைனமிக்' தியானமும் சாவு கூத்தும் -**

''யப்பா நா செத்தன்னா நல்லா ஆடி பாடி சாவெடுத்து
கொள்ளி போடுங்க அதுதா(ன்) யங் கட்சி ஆச'' - என்று

தலித் இனத்தின் மூத்த முகங்கள் கூறும் உயில் வார்த்தை மிக சாதாரணமாய் நாம் கேட்பது தான்.

சவ ஊர்வலம் என்பது ஆட்டமும் பாட்டமும், வான வேடிக்கையுமாய் அமைய வேண்டும் என்று தனது இறுதி ஆசையை முன் வைக்கும் வேறு எந்த இனத்திலும் பிரதானமானதாய் தெரியவில்லை. எதைப்பற்றியும், யாருடைய விமர்சனத்தைப் பற்றியும் கவலை படாமல், பறையின் ஓசையோடு இணைந்து, எப்படி தோன்றுகிறதோ அப்படி ஆடி, குதித்து, அய்க்கியமாகும் போக்கு தலித்துகளின் சவ ஊர்வலத்தில் சதா நிகழ்ந்துக் கொண்டிருக்கிறது. அடுத்தவர்களுக்கு அநாகரிகமாய் காட்சி தரும் இந்த சாவு கூத்தில் (இது



படிப்பகம்

www.padippkam.com



கூத்தா? ஆட்டமா? கூத்து என்பதற்கு நடனம், அதிசயம், கேலி என்ற பொருளும் உண்டு) - வேறு எந்த செய்திகளும் தெரியவில்லையா? (Dynamic Meditation மற்றும் Dancing as a Meditation) (ஆட்டம் ஒரு தியானம்) என்ற நூல்களில்...

''உங்கள் மனதை வெளியே தள்ளுங்கள், எந்த கூச்சமுமின்றி, எப்படி தோன்றுகிறதோ அப்படி ஆடு, கத்து, குதி, கொண்டாடு, இசைக்கேற்ப ஆடு... ஆட்டத்தில் அய்க்கியமாகும் போது, ஆழ்ந்த நுன்னிய ஆட்டம் உன் உள் மய்யத்தில், மூடிக்கிடந்த கதவுகளை திறக்க வைக்கிறது, தியான நிலை நிலை பரவுகிறது'' என்கிறார் ஓஷோ.

தலித்துகளின் சவ ஊர்வலத்தில் நிகழும் ஆட்டம் தியானம் என்று நிறுவ விரும்புவதல்ல என் நோக்கம். செயலில் மனம் ஒன்றாக வேண்டும் அப்போது அந்த செயலும் தியானமாகும், ஆட்டமும் தியானம் தான் என்று கூறும் கருத்தின் சாராம்சம் இவ்விடத்தில் கலந்து இருக்கிறது. அந்த தியானத்தின் கூறுகள் சாவு கூத்தில் இயல்பிலேயே பரவியுள்ளது என்பது தான் உண்மை. தலித் கலைகளை தூக்கி நிறுத்துவதற்கான முயற்சியில் இந்த கருதுகோள்களும் ஒன்றாய் இருக்கிறது எனலாம்.

**ஓஷோ கூறும் தனித்துவமும் தலித் பண்பாடும்**

கன்னட கவிஞர் சித்தலிங்கையா, வெற்றி என்பது தலித்துகளின் கலாச்சார, பண்பாட்டை வென்றெடுப்பதில் தான் முழுமை பெறுகிறது என்று கூறும் நிஜ தரிசனத்தை தமிழகத்தில் பண்பாட்டு மீட்பு பற்றி போராடும் அனைவரும் செயல்படுத்த விழைகிறார்கள். ஆரிய கலாச்சாரத்தை, பண்பாட்டை தனதாக்கி முகமூடியையே முகமாக கருதும் போக்கை மாற்ற வேண்டும் என்கிறார்கள். அடுத்தவர்களின் விமர்சனத்திற்கு கவலைப்பட்டு நாம் நமது இயல்பை, ஆனந்தத்தை, அமைதியை அகால மரணத்திற்கு உட்படுத்தக் கூடாது என்ற கூற்றின் சாரத்தை தான் ஓஷோ அவருக்கே உரிய பாணியில்...

''நீங்கள் நீங்களாக இருப்பதே இயற்கை. வேறு யார் போலும் அல்ல. உங்கள் தனித்தன்மையில் இருப்பது ஒரு அழகுதான். ஒன்றை பார்த்து மற்றது நடந்தால் அதில் எந்த உயிர் தன்மையும் இருக்காது - ஒரு பிளாஸ்டிக் பூ போல, நீங்கள் நடிக்கலாம். ஆனால், யாரை ஏமாற்றுவதற்கு?'' - என்று கேட்கும் கேள்வி நமக்கான கேள்வி. பண்பாட்டு மீட்பாளர்களும் ஓஷோவும் வைக்கும் கேள்வி சாறின் மூலக்கூறு எனக்கு ஒன்றாகத் தெரிகிறது.

**மரணம் ஒரு கொண்டாட்டம்:**

''யார் வாழ்க்கையை அதன் இயல்பாக தடுத்தல், மாற்றுதல், அடக்குதல், இன்றி வாழ்கிறார்களோ அவர்களுக்குத் தான் மரணம் அழகானது. மரணம் ஒரு கொண்டாட்டம் தான் - வாழ்க்கைக்கு சமமாக மரணத்தை கருத முடிகிறவர்களுக்கு'' என்று The Art of Dying..... (மனம் இறக்கும் கலை) என்ற நூலில் குறிப்பிட்ட ஓஷோவின், மரணத்தையும்



படிப்பகம்

www.padippkam.com

அவரது சீடர்கள்; ஆடிப் பாடி வானவேடிக்கையோடு கொண்டாடினார்கள் என்பது உலகறிந்த செய்தி. ஒரு போதும் காஞ்சி சங்கராச்சாரியார் மரணத்தை போல் துக்கம் கடைப்பிடிக்கவில்லை.

மரணம் ஒரு கொண்டாட்டம் என்கிற கூறு தலித் வாழ்க்கையில் இயல்பிலேயே இயங்கிக் கொண்டு இருக்கிறது. சென்னை நகர சேரிகளில் (சேரி என்பது மக்கள் சேர்ந்து வாழும் இடம் என்ற பொருளில் சங்க இலக்கியங்களில் ஆதாரம் உண்டு என்கிறார் முனைவர் கபிலன்) மரணம் நிகழ்ந்து, சவ அடக்கம்... மறுநாள் நடப்பதாய் முடிவானால், அந்த இரவில்... சவத்திற்கு அருகே வட்டமாய் உட்கார்ந்து இறந்தவரைப் பற்றியும் அவரைச் சார்ந்த அனுபவங்களை பற்றியும்... அவர்கள் அறிந்த வட்டார வழக்கு மொழியிலேயே ஒட்டுண்ணி கற்பனையின்றி சுயமாகவே பாடல் புனைந்து, வீட்டு பயன்படு பொருள்களையே இசைக்கருவியாக்கி, துயரத்தின் சாயல் இன்றி, அப்படியொரு மரண சம்பவம் நிகழ்ந்ததற்கான சுவடு இன்றி பாட்டம் இசையுமாய் ''கானா'' என்ற பெயரில் ஒரு கொண்டாட்டம் நடந்தேறும். ஓஷோவின் மரணம் ஒரு கொண்டாட்டம் என்கிற தத்துவம் தலித்துகளிடையே ஒரு மரபாய் பிணைந்துள்ளது - காரணம் வாழ்க்கைக்கு சமமாய் அவர்களால் மரணத்தை கருத முடிகிறது.

### ஓஷோவின் சிந்தனையும் தலித்துகளின் செயல்பாடும்

''கடவுள் என்பது இல்லை. இந்த கடவுள் கற்பனைகளையும் மதங்களையும் தூக்கி எறியுங்கள். தன்னம்பிக்கை பெற இந்த கடவுள்களை தூக்கி எறிய வேண்டும். உங்களிடம் ஓர் புரட்சிகரமான மனமாற்றம் (Transformation) தான் தேவை. ஆறுதல் அல்ல. இதுவரை சுமந்து வந்த பல தீராத தொல்லைகளுக்கு இதுதான் சிகிச்சை'' - என்பது வார்த்தைகளற்ற மனிதனின் (ஓஷோவின்) வார்த்தையாய் இருக்கிறது.

இந்த சிந்தனையை 1956-லேயே வேறு வடிவில் செயலாக மாற்றி மானுடத்திற்கு புது பரிணாமத்தை அளித்தவர் அம்பேத்கர் ''மத கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் வரை நமக்கு எந்தவித இன்பமும் ஏற்படப் போவதில்லை. உண்மையான சுதந்திரமும், உரிமையும் பெற இந்த மதத்திலிருந்து விடுபட்டு புத்த மார்க்கத்தை தழுவுவது ஒன்றே சிறந்த வழி'' என்று கூறி லட்சோப லட்ச மக்கள் புத்த மார்க்கத்தை தழுவ காரணமாயிருந்தார் அம்பேத்கர். தலித்துகளின் இந்த செயல்பாடு ஆறுதலுக்கு அல்ல. புரட்சிகரமான மனமாற்றத்திற்குத் தான். கடவுள்களை தூக்கியெறியும் இந்த மனப்போக்கு தலித்துகளிடையே இன்னும் தொடர்கிறது. புத்தர் கடவுள் அல்ல ஞானமடைந்தவர். பவுத்தம் மதம் அல்ல மார்க்கம் என்பதனை ஓஷோவிற்கு முன்பாகவே தலித்துக்கள் தங்கள் வாழ்க்கைச் சூழலிலேயே உள்வாங்கிக் கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

### 1. எதார்த்த வாழ்வில்

தலித்துகளிடையே புழக்கத்தில் இ ருக்கும் ஒரு விஷேச விழா. மாசி அமாவாசையில் நடக்கும் ''மயமான கொல்லை'' சக்தியை வழிபட எடுக்கும் இவ்விழா மற்ற இனத்திலிருந்து



படிப்பகம்

www.padippkam.com

முற்றிலும் முரண்பட்டது. சிவசக்தியை ஆலயங்களில் வழிபடுவார்கள் - இங்கோ சுடுகாட்டில். இறைவனை தேடி மனிதர்கள் செல்லும் பழக்கம் உடைத்து மனிதனே இங்கு ''சாமிவேசம்'' (இறைவேடம்) போட்டு ஊர்வலம் வரும் விந்தை. அழகு ரூபத்தில் இறைவனை பார்ப்பது மறுத்து, மாமிச உறுப்புக்களை மாலையாய் அணிந்து அகோர வடிவில் தரிசிக்கும் அதிசயம். சைவ பொருள்களை படையலுக்கு வைக்கும் பழக்கம் முறிந்து ஆடு, கோழி அறுக்கும் வழக்கம், இத்தனையும் உள்ளடக்கிய மயானகொல்லை விழாவில் பங்கேற்க, பார்க்க தனி தைரியம் தேவை.. உயர்ந்தது தாழ்ந்தது, புனிதம், தீட்டு, சுத்தம் அசுத்தம் ஆகியவற்றையும் ஒரு கூறாக கொண்டு இருக்கும் இந்துத்துவ வழிபாட்டைக் கட்டுடைத்து, ஆதிக்கத்தை மீறத் துடிக்கும் குணத்தின் குறியீடாய் இருக்கிறது இந்த நள்ளிரவு விழா.

**2. இலக்கிய துறையில்**

இயல்பான வாழ்வில் மட்டுமல்ல இலக்கியத்திலும் இக்கட்டுடைத்தல் துளிர்விட்டு வளர ஆரம்பித்துவிட்டது. எழுத்து என்பது தவமாய், பிரசவ வலியாய், தலைக்கு பின் ஒளிவட்டம் சுழலுவோரின் ராஜபாட்டையாய், படைப்பாளி என்பவன் பிரத்யேக பரிணாமம் பெற்றவனாய் ''பம்மாத்து'' காட்டிக் கொண்டிருந்த சூழலில்... ஒருவனது வலியை, அனுபவத்தை எந்த வகையிலும் சம்மந்தமில்லா அடுத்தவர் எழுதுவது இரண்டாம் தரமானது என்பதை தலித் இலக்கியம் மூலம் வென்றெடுப்பதை கான்கையில்'' தலித்துகள் இயல்பிலேயே கட்டுடைப்பவர்களாய் இருக்கிறார்கள்'' என்பதை உணர முடியும்.

''கட்டுடைப்பு'' எனும் இந்த மரபுப் பண்பு ஓஷோவிடத்தில் செயல்பாடாகவே இருந்து வந்துள்ளது. கடவுளை மறுக்கும் நீங்கள் உங்களை பகவான் என அறிவித்துக் கொள்ள காரணம் என்ன? காவி உடையில் சுவாமி என்ற அடைமொழி உங்கள் சந்நியாசிகளுக்கு எதற்கு? ஏன் இந்த முரண்பாடு? என்று ஓஷோவிடம் கேட்டதற்கு...

''மகரிஷி, சாய்பாபா, முக்தானந்தா போன்றோர்களுடன் (அவதார மனிதர்களாக வேடமிடும்) வெளியிலிருந்து நான் போராடுவது சிரமமாகப்பட்டது. எனவே, அவர்களுள் ஒருவனாக மாறி போரிட என்னை பகவான் என அறிவித்தேன்''

''இந்து மதவாதிகள் காவி உடைக்கு கொடுக்கும் புனித தன்மையை அழிக்க மதவாழ்க்கையை சர்வசாதாரண வாழ்வாக்கி என் சீடர்களுக்கு காவி உடை அளித்தேன். சந்நியாசி என்றால் அனைத்தும் துறந்தவன் என்பதை அழித்து முழுமையாக வாழ்வாது, எதிர்காலத்தை சுமக்காமல் காலமின்றி வாழ்வது என்பதாய் மாற்றுகிறேன். மதவாதிகளின் புனித தன்மையை உடைக்க, ஆதிக்கத்தை முறிக்க சுவாமி என்ற அடைமொழியுடன் எங்கள் சந்நியாசிகள் ஒரு பெண்ணுடன் இயல்பாகவே செல்கிறார்கள்'' - என்கிறார்.



படிப்பகம்



ஓஷோவின் செயல்பாட்டிலும் தலித்துகளின் வாழ்வியலிலும் இயல்பான மனித சுதந்திரத்தை ஆதிக்கத்தை மறுக்கும் கருத்துக்களை 'கட்டுடைக்கும்' நிலைப்பாடுகளை அறியமுடியும்.

**ஏற்ற பாதை எது?**

தலித்துக்களை ஒருங்கிணைத்தல், - சாதிகளில் சமத்துவம் கொண்டு வருதல் - சாதிகளை ஒழித்தல் என்கிற செயல்பாட்டை தனித்துவமான தலித் அரசியல் மூலமாய் அதிகாரத்தை வென்றெடுத்தல் என்பதாய் நீள்கிறது .. நமது பாதை.

பாதையை பற்றி ஓஷோ, ''.... நீங்கள் நடந்து தான் உங்கள் பாதையை உருவாக்க வேண்டும். அந்த பாதையில் நீங்கள் தீவிரமாய் நடக்கவேண்டும். தனக்காய் போட்டுள்ள அடுத்தவர் பாதையில் நீங்கள் செல்லாதீர்கள்'' என்று சொல்வது கூட நமக்கான செய்தியாய் கொள்ளலாம்.

**இறுதியாய் சில முடிவுகள்**

* ஓஷோவின் தத்துவ கூறுகள் . பல தத்துவங்களின் வாழ்வியல் நடைமுறையாயுள்ளது.

* ஓஷோவின் சிந்தனை செயல்பாடு - தலித்துகளின் எதார்த்த செயல்வடிவம் இவ்விரண்டுக்குள் ஒரு பொதுத்தன்மை நிலவுகிறது.

* ஓஷோவின் தனி மனிதத்துவ கருத்துக்கள் இங்கு சமூக சார்ந்த கருத்தாய் பரிணமித்துள்ளது.

---

* சென்னை சார்ந்த கொரட்டூர் பகுதி தாழ்த்தப்பட்டவர்களிடையே இப்போதும் மயான கொல்லை விழா நடக்கிறது.

**குறிப்புக்கு உதவிய நூல் பட்டியல்:**

1. I Teach Religiousness not Religion.

2. Word from a man of no words

3. The Art of Dying

4. Meditation & Love..

ஆகிய நூல்களின் தமிழாக்கத்திலிருந்து குறிப்புகள் எடுக்கப்பட்டது.

www.padippkam.com

# வி. ரா. ப. மாவட்டத்தில் பழங்குடியினர் மீதான அத்துமீறல்களும், அதை எதிர்த்த நடவடிக்கைகளும்

பேராசிரியர் பா. கல்யாணி

விழுப்புரம் வாசு - திருமண மண்டபத்தில் 25.02.1996 ஞாயிறு காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தை மக்கள் கல்வி இயக்கம், மற்றும் மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் உறுப்பினர் பா. கல்யாணி ஏற்பாடு செய்திருந்தார்.

இக் கூட்டத்திற்கு (i). 29.7.1993 அன்று புதுச்சேரி போலீசாரால் கற்பழிக்கப் பட்ட அத்தியூர் விஜயா, (ii). 3.10.1993 அன்று திருப்பதி போலீசாரால் கடத்திச் செல்லப்பட்டு சித்திரவதைக்குள்ளான விஜயா தந்தை மாசி, (iii). செஞ்சி போலீசாரால் 16.2.1994 முதல் 14.3.1994 வரை சட்ட விரோதக் காவலில் வைக்கப்பட்டு பொய் வழக்குகளும் போடப்பட்ட அத்தியூர் பச்சையப்பன், ஈச்சங்காடு பலராமன். (iv). மன்னம்பூண்டியில் 22.3.1995 முதல் 24.3.1995 வரை பொது இடத்தில் கட்டி வைத்து சித்திரவதை செய்யப்பட்ட விழுக்கம் மா. கண்ணன் வயது 60. (v). 20.1.1996 அன்ற பிடாரிப்பட்டு அருகே முயல் வேட்டைக்கு போன இடத்தில் கொலை செய்யப்பட்ட வி. நல்லாளத்தைச் சேர்ந்த ரஞ்சித் உறவினர்கள். (vi). 30.1.1996 சென்னை அருகே உள்ள செங்கற்சூளையில் மணல் சரிவில் மாட்டிக்கொண்டு இறந்த குழந்தைகளின் உறவினர்கள், (vii). 21.2.1996 அன்று சென்னை அருகே உள்ள காரனோடை செங்கற் சூளையில் அடித்துக் கொல்லப்பட்ட சங்கர் மனைவி குமாரி மற்றும் அவர்கள் உறவினர்கள் என 40 பழங்குடியினர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இக் கூட்டத்திற்கு சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்களான பொ. இரத்தினம், ஆர். இராஜகோபால், விழுப்புரம் வழக்கறிஞர் எஸ். சவரி, பண்ருட்டி வழக்கறிஞர் இரா. வைத்தீஸ்வரன், பேராசிரியர் அரிவாசகம், மக்கள் கவிஞர் பழமலய், ''மக்கள் சிந்தனையாளன், ஆசிரியர் சங்கமித்திரா, ''புரட்சித்தமிழன்'' ஆசிரியர், எல்லாளன், ''மக்கள் தளம்'' பத்திரிகை ஆசிரியர் சந்திரசேகரன், ஜாக்டீ மாவட்ட அமைப்பாளர் இராசேந்திரன், மதவெறி எதிர்ப்பு இயக்கத்தைச் சார்ந்த ரவி கார்த்திகேயன், கட்சியின் மாவட்ட பொறுப்பாளர் அனவரதன், ம.தி.மு.க. மாவட்ட இலக்கிய அணி தலைவர் இரா. சஞ்சீவி, சி.பி.அய்.எம். கட்சியின் வள்ளலார் மாவட்டச் செயலாளர் என். கலியமூர்த்தி, இ.யூ. முஸ்லீம் லீக் கட்சியை சார்ந்த இஸ்மாயில் பேக், தமிழியக்கத்தைச் சேர்ந்த தமிழ்வேங்கை, இந்திரா நகர் குடியிருப்போர் சங்கத்தைச் சார்ந்த சைமன், திண்டிவனம் பெண்கள் இயக்கம் சார்பில் சகோதரி லுசினா மற்றும் அன்னமேறி மற்றும் பலர் ஆக 40 பேரும் மொத்தம் 80 பேருக்கும் மேற்பட்டோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். முதலில் பாதிக்கப்பட்டோர் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை விளக்கினர். அடுத்து மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதித்து கீழ்கண்ட முடிவுகளை எடுத்துள்ளனர்.



படிப்பகம்

www.padippkam.com

இக்கோரிக்கைகள் நிறைவேற்ற மாவட்ட நிர்வாகமும் தமிழக அரசும் உரிய நடவடிக்கைகள் விரைந்து எடுப்பார்கள் என நம்புகிறோம்.

1. அத்தியூர் விஜயா கற்பழிப்பு வழக்கை விரைவு படுத்துக

29.07.1993 அன்று புதுச்சேரி போலீசார் நல்லான் கிருஷ்ணராய பாபு உட்பட அய்வரால் கற்பழிக்கப்பட்ட அத்தியூர் விஜயா தொடர்பான விசாரணையை சிறந்த முறையில் நடத்தி தமிழக அரசுக்கு 7.2.1994 அன்று அறிக்கை சமர்ப்பித்த அப்போதைய மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி என். ஜகதீசன் அவர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் திரு. அசோக்வரதன் ஷெட்டி அவர்களுக்கும் இக் கூட்டம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது. இதனையடுத்து தமிழக அரசு பாதிக்கப்பட்ட விஜயாவிற்கு ரூ. 25,000/- கருணைத் தொகை வழங்கியதற்கும் நன்றி தெரிவிக்கிறது. ஆனால் கற்பழித்த புதுச்சேரி போலீசார்மீது, சம்பவம் நடந்து மூன்றாண்டுகள் இருக்கும். இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது. கற்பழித்த போலீசார் மீது விரைவிலேயே குற்றப்பத்திரிக்கை தாக்கல் செயது வழக்கை விரைவுபடுத்த, தமிழக அரசை இக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

2. பழங்குடியினருக்கு கொடுமை இழைத்தவர்கள் மீது எஸ்.சி.எஸ்.டி (வன்கொடுமை தடுப்புச்) சட்டம் 1989-ன் படி வழக்குப் போடுக

20.1.96 அன்று இரவு வி. நல்லாளத்தைச் சார்ந்த ந. ரஞ்சித் (32) தனது சகோதரி லட்சுமியுடன் முயல் வேட்டைக்காக அருகில் உள்ள பிடாரிப்பட்டு வயல்வெளிக்கு போயுள்ளார்கள். அப்போது பிடாரிப்பட்டைச் சார்ந்த கொடியன், முத்துக்கிருஷ்ணன், மற்றும் ரெங்கநாதன் ஆகிய மூவரும் லட்சுமியை கற்பழிக்க முயன்று உள்ளனர். இதனைத் தடுத்த ரஞ்சித் அடித்து கொலை செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக கஞ்சனூர் போலீசார் நிலைய குற்ற எண். 21/96-ல் இந்திய தண்டனைச் சட்டம் 323, 354, 302 பிரிவுகளின் கீழ் வழக்கு; பதிவு செய்துள்ளனர். சம்பவம் நடந்து ஒரு மாதத்திற்கு மேலாகியும் ரெங்கநாதனும், முத்துக்கிருஷ்ணனும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

பாதிக்கப்பட்டவர்கள் பழங்குடியினராக இருப்பதாலும் கொலையாளிகள் சாதி இந்துக்களாக இருப்பதாலும் கொலையாளிகள் மீது மேலே குறிப்பிட்டுள்ள எஸ்.சி/எஸ்.டி. சட்டம் 1989-ன்படியே வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகத்தையம், தமிழக அரசையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது. மேலும் இச் சட்டத்தில் 23(1)ன்படி இந்திய அரசாங்கத்தின் நல்வாழ்வுத்துறை அமைச்சகம் 31.3.95 நாளிட்ட சுற்றறிக்கையில் கூறப்பட்டிருப்பது போல் 1.5 லட்சம் நிவாரணத் தொகையை ரஞ்சித் குடும்பத்தாருக்கு மாவட்ட நிர்வாகம் வழங்குவதோடு, அவர்களுக்கு போதிய பாதுகாப்பும் அளிக்க மாவட்ட நிர்வாகம் அனைத்தையும் ஏற்பாடு செய்ய இக் கூட்டம் வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.



படிப்பகம்

www.padippkam.com

திண்டிவனம் அருகே உள்ள மன்னம்பூண்டியில் விழுக்கத்தைச் சார்ந்த மா. கண்ணன் வயது 60 என்பவர் 22.3.95 முதல் 24.3.95 வரை மூன்று நாட்கள் பொது இடத்தில் கட்டிவைத்து சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். மேலும், இவரிடம் இருந்து அபராதமாக ரூ. 1,500/-ம் வசூலிக்கப்பட்டுள்ளது. இக் கொடுஞ்செயல் புரிந்த மன்னம்பூண்டி சாதி இந்துக்கள் மீதும் எஸ்.சி.எஸ்.டி சட்டம் 1989ன் படி நடவடிக்கை எடுக்க மாவட்ட காவற்துறையை இக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

### 3. கொத்தடிமைகளாய் உள்ள பழங்குடியினரை விடுவிக்க நடவடிக்கை எடுத்திடுக

விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் உள்ள பழங்குடி இருளர்கள் தாங்கள் வாழும் பகுதிகளில் கூலிவேலை கிடைக்காத காலங்களில் சென்னைக்கு அருகே உள்ள காரனோடை மற்றும் அதைச் சுற்றியுள்ள செங்கற்சூளைகளில் கொத்தடிமைகளாய் வேலை பார்த்து வருகின்றனர். அப்படி வேலை பார்த்து வந்த அத்தியூரைச் சார்ந்த வ. சங்கர் (30) 21.2.96 அன்று சூளைக்கருகே அடித்து கொலை செய்யப்பப்பட்டுள்ளார். அவருடைய பிணத்தையும் உறவினர்களிடம் கொடுக்காமல் 22.2.96 அன்று இரவு அவர்களே எரித்து விட்டனர்.

இதுபோன்றே 30.1.96 அன்று அனந்தபுரம் மற்றும் பொம்பூர் பகுதிகளைச் சார்ந்த பழங்குடியினர்ன் நான்கு குழந்தைகள் காரனாடை பகுதியில் உள்ள ஒரு சூளைக்கருகே மணல் சரிவில் சிக்கி இறந்துள்ளனர். சூளையின் உரிமையாளர் அக்குழந்தைகளின் சடலத்தை பெற்றோர்களிடம் கொடுக்காமல் அவர்களே எரித்து விட்டனர். மேலும் அவர்களை வேலையை விட்டும் விரட்டியுள்ளர். இது தொடர்பாக குற்றமிழைத்தவர்கள் மீது எஸ்.சி. எஸ்.டி சட்டம் 1989ல் நடவடிக்கை எடுப்பதோடு அப்பகுதி செங்கற் சூளைகளில் பணிபுரியும் தொழிலாலர்களின் நிலையை அறிய, தமிழக அரசு உடனடியாக விசாரணை மேற்கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ள தமிழக அரசு இக் கூட்டம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

### 4. பழங்குடியினருக்கு சான்றிதழ் வழங்க அதிகாரிகள் மீது குற்றம் நடவடிக்கை மேற்கொள்ள சட்டம் இயற்றிடுக

பழங்குடியினருக்கு, சாதிச் சான்றிதழ் வழங்குவதில் 1 வருடத்துக்கும் மேலாக காலதாமதம் ஆகிறது. இதனால் கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் எஸ்.சி/எஸ்.டி பிரிவில் வழக்கு தொடுத்தல் ஆகியவற்றில் பழங்குடியினர் அதிகம் சிரமத்திற்கு ஆளாகின்றனர். எனவே விண்ணப்பித்து 1 மாதத்திற்குள் சான்றிதழ் வழங்காத வருவாய்த்துறை அதிகாரி மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளத்தக்க வகையில் சட்டமியற்ற தமிழக அரசை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது. மேலும் இம் மாவட்டத்தில் வாழும் குறவர்கள், காட்டுக்காரர்களை பழங்குடியினராக தமிழக அரசு அங்கீகரித்து அதற்கேற்ற வகையில் அவர்களுக்குள்ள இட ஒதுக்கீட்டையும் அதிகரிக்க இக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.



படிப்பகம்

www.padippkam.com

5. திண்டிவனம் அருகே உள்ள தைலாபுரம் ஈச்சங்காட்டைச் சேர்ந்த பலராமனையும், அத்தியூரைச் சார்ந்த பச்சையப்பனையும் அப்போதைய செஞ்சி காவல் நிலைய உதவி ஆய்வாளர் எஸ்.வி. கிருஷ்ணமூர்த்தி 16.2.94 முதல் 14.2.94 வரை சட்டவிரோதக் காவலில் வைத்து சித்திரவதை செய்து அவர்கள்மீது பொய் வழக்கும் போட்டுள்ளார். இது தொடர்பான வழக்கு விழுப்புரம் அ.பிரிவு நீதிமன்றத்தில் நடந்தபோது சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பொ. இரத்தினம் இலவச சட்ட உதவிக் கழகத்தின் சார்பில் பலராமனுக்காக ஆஜர் ஆகி வாதாடினார். அவருக்கு உதவியாய் இருந்த விழுப்புரம் வழக்கறிஞர்கள் தட்சிணாமூர்த்தி, எஸ். சவரி, குமார், பண்ருட்டி வழக்கறிஞர்கள் ப. கிட்டு, இரா. வைத்தீஸ்வரன், திண்டிவனம் வழக்கறிஞர்கள் த. பவணந்தி, ச. லாரன்ஸ், திருவண்ணாமலை வழக்கறிஞர் ஜோஸ், பச்சையப்பனுக்கு உதவிய விழுப்புரம் வழக்கறிஞர் எம்.எஸ். நடராஜன், செஞ்சி வழக்கறிஞர் இரா. செல்வராஜ் மற்றும் பால சுப்பரமணியன் அனைவருக்கும் இக் கூட்டம் நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

6. பழங்குடியினருக்கு ஆதரவளிக்கும் அனைத்துக்கட்சி, மற்றும் இயக்கங்களுக்கு நன்றி

அத்தியூர் விஜயாவை கற்பழித்த புதுச்சேரி போலீசார் மீது நடவடிக்கை எடுக்க 4.1.95 அன்று புதுச்சேரி அனைத்து இயக்கங்களின் சார்பில் கண்டனப் பேரணியும், 22.1.95 அன்று விழுப்புரத்தில் உள்ள அனைத்துக்கட்சி, மற்றும் இயக்கங்களில் சேர்ந்து மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து மனுவும் கொடுக்கப்பட்டது. இதுபோன்ற தொடர்ந்து பழங்குடியினருக்கு ஆதராவாகச் செயல்படும் அனைத்துக்கட்சி மற்றும் இயக்கங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு தொடர்ந்து ஆதரவாக இருக்க இக்கூட்டம் அனைவரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றது.

7. வரும் மே மாதத்தில் பழங்குடி இருளர் மாநாடு

பழங்குடியினர்களின் கோரிக்கைகளை முன் நிறுத்தி அதற்கு ஆதரவு திரட்டும் வகையில் வி.ரா.ப. மாவட்டத்தில் வரும் மே மாதம் ஒரு நாள் மாநாடு நடத்த இக்கூட்டம் முடிவு செய்துள்ளது. இம்மாநாட்டிற்கு, பழங்குடியினர் தலைவர்களையும், உச்சநீதிமன்றம், மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்களையம், மனித உரிமை ஆர்வலர்களையும், தொழிற் சங்க தலைவர்களையும் அழைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட தீர்மானங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி, மாவட்ட நிர்வாகத்தினையும், தமிழக அரசையும், பிற துறைகளைச் சார்ந்த அதிகாரிகளையும் கூட்டத்தின் சார்பில் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். ●



படிப்பகம்

www.padippkam.com

# ஆதித்தமிழர் விடுதலை

வினோத்

''எம் மக்களின் விடுதலைக்காக நான் எடுக்கும் முயற்சிகள் இந்நாட்டுக்கு சாதகமாக இல்லை என்றாலும் பாவமில்லை. எனது இலக்கு எம்மக்களின் மனித உரிமையே''.

- புரட்சியாளர் அம்பேத்கர்

''எனக்குத் தாயகம் இல்லை, என்னை ஏன் நீங்கள் துரோகி என்று எமது இயக்கத்தை எதிர்க்கிறீர்கள். மிருகத்தை விட கேவலமாக நடத்தப்படும் நாடு எனக்கு தாயகம் ஆகாது. சுயமரியாதையுள்ள தீண்டப்படாத எவனும் இந்நாட்டைத் தனது தாயகமாக கருதமாட்டான்''

- அம்பேத்கர்.

இந்திய துணைக்கண்டத்திலும், ஏன் உலகளவிலும் தொன்மையான நாகரீகமும், பண்பாடும், கலாச்சாரப் பெருமையும் உடையது ஆதித் தமிழர் இனமும் அவர்தம் மொழியுமேயாம். தமிழர் தம் வீரத்தை உலகுக்கு பறைசாற்றும் பழம்பெரும் இலக்கியங்களில் முன்னிலையிலிருக்கும் புறநானூறு, கூறுவதாவது:

''துடியன், பாணன், பறையன், கடம்பனென்று
இந்நான்கல்லாது உயர் குடியுமில்லை''

(புறநானூறு 335-7/8 வரிகள்)

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய இச்சமுகத்தில்தான், உலகப்பொதுமறை தந்த திருவள்ளுவரும், ஆத்திச்சூடி தந்த அவ்வையும், பிறந்தார்கள். அரசனுக்கு ஆலோசனை வழங்கும் அரச குருவாக இருந்து பறைசாற்றுவோன், திராவிட குருக்கள் ஆகி இருந்தவர்கள், நம்முன்னோர்களே (பறைதல் - சொல்லுவது), இந்திய விடுதலைப் போரில் அரும்பணியாற்றிய தாத்தா இரட்டை மலை சீனிவாசன், இந்நாட்டுக்கு அரசியல் சாசனம் தந்த புரட்சியாளர் அம்பேத்கர் என்று, தொன்றுதொட்டு இன்றுவரை, கலைகள், அறிவு, வீரம் ஆற்றல் ஆகிய அருங்குணங்களை ஒருங்கே பெற்று பண்பாட்டில் சிறந்து விளங்கிய இனம் ஆதித்தமிழர் இனம்.

செல்வ வளத்திற்குச் சான்றாக, அரிச்சந்திர காதையில் விசுவாமித்திரனின் ஆணைப்படி, அரிச்சந்திரன் ஏலம் கூறி விற்கும் நட்சத்திர கண்டேயன் கேட்ட தொகை, யானை மீதேறி கவனெறிந்து விழும் அளவு பொன் தருவோர் அரிச்சந்திரனை அடிமையாக்கி கொள்ளலாம். வடநாடு முழுவதும் இத்தொகை தருவோர் இல்லாமல், மன்னன் வீரபாகு மட்டுமே இத்தொகை கொடுத்து பார்ப்பன அரிச்சந்திரனை அடிமையாக அடைகிறார். (அவனைப் புலையனாக சிறுமதியாளர் கூட்டம் சித்தரித்தது)



படிப்பகம்

www.padippkam.com



நமது சமூகத்திற்கு இயற்கையிலேயே இயல்பாக இருக்கக்கூடிய இரக்கம், நேர்மை, விசுவாசம் இவைகளை தமக்குச் சாதகமாக பயன்பத்திக்கொண்ட, வந்தேறி மடிப்பறிந்த, ஆதிக்க சாதிவெறி ஆரியப்பார்ப்பனக் கூட்டத்தின் சதியால் நம் பழம்பெருமைகள் புழுதியிலிடப்பட்டன. உண்மை வரலாறுகள், பண்பாடு யாவும் மறைக்கப்பட்டு பொய்யாக புனைச்சுருட்டு செய்யப்பட்டன. நமது பண்பாடும், கலாச்சாரமும் பின்னுக்குத் தள்ளப்பட்டு, பார்ப்பனியத்தை நிலைநிறுத்தச் செய்யும், மனுதர்ம சாத்திரம் உயர்த்திப் பிடிக்கப்பட்டது. விளைவு.

''அவர்கள் வேத நூல்களோடு வந்தார்கள்,

அப்போது,

எங்களிடம் நாடு இருந்தது,

கண்ணை மூடிச் செபியுங்கள் என்றார்கள்,

கண் விழுத்தபோது

எங்களிடம் வேதநூலும்

அவர்களிடம் நாடும் இருந்தது.''

- சூலியசு நைரேரே, தான்சானியா.

ஆயுதத்தை இழந்தவன் அதிகாரத்தை இழக்கிறான். அதிகாரம் இழந்தவன் அடிமையாகிறான், என்பது உலக வரலாறு. அதேபான்று வந்தாரை; வாழவித்த, நம் இனத்தை வந்தேறிப் பார்ப்பனியமும், அதற்கு அடிவருடி சுகம் காணும் ஆதிக்க சாதிகளாலும் சாதி, மதத்தின் பெயரால் இங்கு அடிமைகளாக, சொந்த நாட்டிலேயே அகதிகளாக தீண்டப்படாதவர்களாக, விலங்கினும் கேடாக நாம் நடத்தப்பட்டோம். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக மனித உரிமைகளை இழந்து, ஆதிக்க சாதிவெறிக் கூட்டத்திடம் மடிப்பிச்சை கேட்டு மன்றாடும் நிலைக்குத் தள்ளப்பட்டோம். வந்தேறிகள் நமக்கு அடையாளமும், அடைமொழியும், அவலட்சண பெயரையும் சூட்டி மகிழ்ந்தார்கள். (எ.கா)

அவர்ணா - ஆரியர் சூழ்ச்சி,

பஞ்சமர் - வேத குப்பைகள் விளக்கம்

அட்டவணை இனம் - வெள்ளையர் விளிப்பு,

அரிசன் - காந்தியின் மோசடி,



படிப்பகம்

www.padippkam.com

ஆதிதிராவிடன் - அரசியல் சூழ்ச்சி,

தாழ்த்தப்பட்டவன் - தன்மானமின்மை,

தலித் - தமிழின இழப்பு.

(இப்படி பல இழிவான பெயர்களால் அழைக்கப்பட்டோம். ஆந்திரத்தில் ஆதி ஆந்திரர், கேரளா - ஆதி மலையாளி, கருநாடகா - ஆதி கன்னடர். தமிழகத்தில் மட்டும் ஆதி தமிழர் என்ற நம் தேசிய அடையாளத்தை இழந்து நிற்கிறோம்)

இம் மண்ணின் மைந்தர்களான நமக்கு பொது வாழிடங்கள் மறுப்பு, காலணி அணிந்து செல்லத்தடை, தொட்டால் தீட்டு, பார்த்தால் தீட்டு, (மலம் கழிக்கும் இடத்தை கழுவினாலே சுத்தமாகிவிடும், நம்மைத் தொட்டாலோ குளித்த பின்பே சுத்தமாகுமாம்) போன்ற சமூகக் கொடுமைகள், மனித உரிமை மீறல்கள் நம்மீது திணிக்கப்பட்டது. இவைகளை நியாயப்படுத்துகிற விதமாக, ஒழுங்கீனங்கள் ஒழுங்கானதாக, ஆதிக்க சாதிகளால் அங்கீகரிக்கப்பட்டது. இதிகாச மதப்புராண குப்பைகள் நமக்கு எதிராக புனையப்பட்டது. அநீதிகள் - நீதியாகவும், முறைகேடுகள் - முறையானதாகவும் நிலை நிறுத்தப்பட்டது. உண்மைகள் மறைக்கப்பட்ட சரித்திரங்கள் சரியானவையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(எ.கா) பிரம்மா வானவன் இந்த உலகை காப்பாற்ற தன் முகம், தோள், தொடை, பாதம் இவைகளினின்று உண்டான பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர வருணத்தாருக்கு இம்மைக்கும், மறுமைக்கும் உபயோகமான கருமங்களை தனித்தனியே பகுத்தார்.

(மனு, அத் 1, சுலோகம் 87)

பிரம்மனின் இந்த வர்ணாசிரம விதிக்கு புறம்பாக அய்ந்தாம் சாதியெனும் 'அவர்ணா' என்கிற பஞ்சமர் எனும் சாதியை நால்வகை வர்ணத்திற்கும் தொண்டு ஊழியம் செய்ய படைக்கப்பட்டதாக எழுதினான்.

பிற்கால இலக்கியங்கள் கூட உண்மைக்கு மாறாகவும், சாதியத்தை காப்பாற்றுகின்ற (அ) நிலைப்படுத்துகிற விதமாக உள்ளது. (எ.கா)

''நந்தியே விலகி நில்'' என்று நந்தனாருக்காக பரிந்து பேசிய தில்லைக் கூத்தன் கூட ''நந்தா தயக்கம் ஏன் நேராக கருவறைக்கு வா''வென அழைத்ததாக பெரிய புராணம் சொல்லவில்லை.

சாதி, மதம் இச்சமூகத்தின் ஒட்டுமொத்த சீரழிவுக்கும் இழிநிலைக்கும் பெருங்காரணியாக இருப்பது இந்து மதமும் அதன் தத்துவங்களும் தாள், எனவேதான் அம்பேத்கர் கூட ''ஒடுக்கப்பட்ட மக்களின் இரண்டு எதிரிகள் பார்ப்பனீயமும், முதலாளித்துவமும்'' என்றார்.



படிப்பகம்

www.padippkam.com



முதலாளித்துவம் எவ்வளவு தூரம் உழைக்கும் மக்களை ஒடுக்குகிறதோ அதில் கிஞ்சிற்றும் குறையாத வகையில் பார்ப்பனீயம் தோற்றுவித்த இந்துமதம் செயலாற்றுகிறது. இந்து மதம் என்ற கருத்தாக்கம் மக்களைப் பிறவி அடிப்படையில் சாதிகளாக கூறுகளாக்கி, அதில் பழநிலை அமைப்பிலான ஏற்றத்தாழ்வையும் உருவாக்கிய பார்ப்பன வருணாசிரம படிநிலையின் மேல்மட்டத்தில் இருந்தவர்களால் இக்கட்டிடமைப்பு மேற்கொள்ளப்பட்டது. காலனிய ஆட்சி மாற்றங்களின் போது, பாரம்பரிய பார்ப்பன, மேல்சாதி மேலாண்மை சற்றே அசைந்து கொடுக்க நேர்ந்தது. பதிலாக தங்களின் மேலாண்மையை நிலைநாட்டிட, இங்கு இந்துத்துவ அரசியல் உருவாக்கப்பட்டது.

வர்ண நெறிகள் ஆரம்பத்தில் பிறவியோடு இறுக்கமாக தொடர்பு படுத்தப்படவில்லை. பின்னாளில் பார்ப்பனியம் அரியணை ஏறிய 'மனுநீதி' காலத்தில் வாண பிரிவுகளுடன் தொழிலும் தொடர்புறச் செய்யப்பட்டது—அம்பேத்தகர்.

புரோகிதமும், கல்வியும் சாதிப்படி நிலையில் மேல்நிலைப் பரிவுக்கும், ஆயுதம், செல்வம் என்கிறவனைத்தும், வர்ணாசிரம படிநிலையில் உள்ளோருக்கும் உடமையாக்கப்பட்டன. வர்ணாசிரம படிநிலைக்கு புறம்பே தள்ளப்பட்ட 'அவர்ணா' மக்களுக்கு இவைகள் அனைத்தும் மறுக்கப்பட்டது. பஞ்சமன், சூத்திரன் சொத்துடையாளனாக்க கூடாது என்பதற்கு மனுஸ்மிருதி (அத்–1. சுலோகம் –13) வரையரை விதித்தது.

இத்தகைய வர்ணாசிரம தரும, 'நியாயங்களை' மீறுவோரும், எதிர் கலகம் செய்தவர்களும், கடுந்தண்டனைக்குள்ளாக்கப்பட்டனர். (எ.கா.) இதிகாச வீரர்கள் சம்பூகன், ஏகலைவன், பின்னாளில் மதுரை வீரன், நந்தனார், இந்நூற்றாண்டில் இமானுவேல் சேகரன் ஆகியோர்.

கொலை, களவு, பொய், சூது, தீங்கு, ஆகிய பஞ்சமா பாதகங்களைச் செய்தாலும் பார்ப்பனர்கள் மீதமான தண்டனை கூட இன்றி அவசியமானால் மன்னிக்கப்பட வேண்டியவர்களே (மனு அத் 9–சு17) இவ்வளவு ஆதிக்க சாதிகளால் அநீகள், நீதிகளாகவும், அநியாயங்கள் நியாயங்களாகளவும் இச்சங்கத்திற்கு அதிகாரத்தின் துணைகொண்டு கற்பிக்கப்பட்டு வந்துள்ளது.

இத்தகைய சமுக கொடுமைகளுக்கு எதிராக மக்கள் எழுச்சி வந்து விடக்கூடாது என்பதற்காக, இம் மண்ணின் மைந்தர்களான நம் மக்களுக்கு மீட்சி வழங்கப் போவதாக வந்த சமுக சீர்திருத்தவாதிகள் (குறிப்பாக தலித் அல்லாத) எல்லாம் மதத்தையும், அதன் வீரியமான சாதியையும் ஒழிக்காமல் வசதியாக தீண்டாமையை ஒழிக்கப்போவதாக சொன்னார்கள். அவர்கள், தீண்டாமையின் வேர் சாதி அமைப்பில் உள்ளது.

சாதியத்தின் வேர் வர்ணாசிரமத்தில் உள்ளது



படிப்பகம்

www.padippkam.com



வர்ணாசிரமத்தின் வேர் பார்ப்பனியத்தில் உள்ளது

பார்ப்பனியத்தின் வேர் எதேச்சதிகாரம் அல்லது

அரசியல் அதிகாரத்தில் உள்ளது.

என்பதை உணராமல் போனதால், அத்தகைய சீர்திருத்தவாதிகள் ஓய்ந்து போனார்கள் (அ) ஒழிக்கப்பட்டார்கள். ஆம்

பூனைகளால் எலிக்கும்

புலிகளால் புள்ளி மானுக்கும்

ஆண்டைகளால் அடிமைகளுக்கும்

விடுதலை கிட்டாது.

இந்திய அரசியல் அமைப்பும் – கட்சிகளும்,

முடி மன்னர்களுக்கு முன்பு இந்தியத்துணைக்கண்டத்திற்கு பிழைப்புத்தேடி வந்தேறிகளான, பிரிட்டிசு ஏகாதிபத்தியம் இந்நாட்டு மக்களின் உழைப்பைச் சுரண்டுவதற்காக தங்களின் அரசை இங்கே நிர்மாணித்தது. அந்த அரசு அவர்களின் நிர்வாகத்திற்கு துணை செய்கிற, குமஸ்தாக்களை உற்பத்தி செய்கிற ஒரு கல்வி முறைளை இங்கே நடைமுறைப் படுத்தியது. அந்தக் கல்விமுறையில் தேர்ச்சி பெற்ற ஐ.ஏ.எசு, ஐ.பி.எசு, ஐ.எப்.எசு அதிகாரிகளால் அரசு நிர்வாகம் செய்யப் பட்டது. வரிவசூலிக்க, பராமரிக்க நிருவாகத்துறையையும், மக்களை ஒடுக்க சிறைத் துறையும் நிறுவியது. இங்குள்ள விசுவாச அடிமை அடிவருடிகளின் துணைகொண்டு ஆட்சி புரிந்தார்கள்.

இத்தகு ஒடுக்கு முறைகளுக்கெதிராக, வெகுமக்கள் கிளர்ந்தெழுந்த போது, இம்மக்களை, இத்தகைய அமைப்புகளின் துணை கொண்டு ஒடுக்கிவிடமுடியாது என்பதைப் புரிந்து கொண்டு, இப்போது நடைமுறையில் உள்ள சட்ட மன்ற, பாராளுமன்ற முறையைக் கொண்டு வந்தார்கள். இவ்வமைப்பில் பங்கேற்கும் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க எசமான விசுவாசமிக்க படித்த பட்டதாரிகளுக்கும், சொத்து வைத்துள்ள பட்டாதாரிகளுக்கும் வாக்கு (ஓட்டு) உரிமை வழங்கினார்கள். மக்களை திசை திருப்புவதற்காக இம்முறை அமலாக்கம் செய்யப்பட்டது. அப்போதும் கூட, இந்நாட்டில் பெருவாரியான தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்களுக்கு இவ்வுரிமைகள் வழங்கப்படவில்லை.

இந்நாட்டின் வளங்களை, மக்களை சுரண்டிக் கொழுத்த பெரும் நிலப்பண்ணைகளும், சமீன்களும், ஆதிக்கசாதி வெறியர்களும், மிட்டாமிராசுகளும் தங்களுக்குப்



படிப்பகம்

www.padippkam.com



போட்டியாகவும், ஏகபோக உரிமையுடனும் பிரிட்டிசு ஏகாதிபத்தியம் வளர்ந்து விட்டதைக் கண்டு பொறுக்க முடியாமல், வெள்ளையரை விரட்டி அடிக்க வேண்டும் என்ற நோக்கோடு 'சுதந்திரம்' என்ற ஒன்றை முன்வைத்து போராட்டத்தை நடத்தினார்கள். (உ.ம்) கப்பலோட்டிய ..... வ.உ.சி., கட்டபொம்மன் உள்நோக்கம் அறியாத ஏனைய சக்திகளும், தங்களுக்கு ஆதரவாக ஒரு குறிப்பிட்ட அளவு மக்களையும் இணைத்துக்கொண்டு, நடத்திய நீண்ட நெடிய போராட்டத்தின் விளைவாக 1947லே நமக்கான சுதந்திரத்தை 'நள்ளிரவிலே' வழங்கியதாக – வாங்கியதாக சொன்னார்கள்.

பிரிட்டிசு (வெள்ளை) ஏகாதிபத்தியம் இந்நாட்டை விட்டு வெளியேறும் போது, அவர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்ட பாராளுமன்ற முறையையும், அப்படியே இந்தியாவின் சாதிவெறிப்பிடித்த, ஆதிக்க சாதிகளிடம் கைமாற்றிவிட்டுச் சென்றார்கள். இம்முறை ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, வெகுமக்கள் நலனுக்காக, வெகு மக்களால் போராடிப் பெறப்பட்டதல்ல, எவரின் நலனுக்காக பெறப்பட்டது என்பது தெளிவு.

இப்படிப்பட்ட பாராளுமன்ற, சட்டமன்ற முறையில் பங்கேற்பதற்கென தொடங்கப்பட்ட கட்சிகளும் ஆதிக்க சாதிகளுக்கே சொந்தமானதாகவே உள்ளது. அம்பேத்கர் கூற்றுப்படி.

''என்னருமை தாழ்த்தப்பட்ட சமுதாயமே, இந்த நாட்டின் ஆதிக்க சாதிகளின் தலைமையில், உருவாக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிகள் உன்னுடைய கட்சியல்ல. உன்னுடைய கட்சி கட்சியல்ல. உன்னுடைய கட்சி என்று நம்பி அதை தோளிலே தூக்கி வைத்துக்கொண்டால் உன்னைவிட முட்டாள்கள் எவரும், இந்நாட்டில் இருக்க முடியாது'' என்றார்.

இந்திய சுதந்திரம் நமக்கு வழங்கியது வெறும் செல்லாத ஓட்டுரிமை மட்டுமே. அவர்களால் நிறுத்தப்படுகிற வேட்பாளர்கள் கடந்த 50 ஆண்டுகளாக நம்மிடம் ஓட்டு வாங்கிச் சென்று, அவன் சார்ந்துள்ள கட்சிக்கும் தலைமைக்கும் விசுவாச அடிமைகளாகவே செயல்பட்டு வருவது வரலாறு. 5 ஆண்டுக்கொரு முறை புதுப்புது வேசங்களோடும், புதுப்புது கோசங்கேளோடும், வந்து ஓட்டு வாங்கிச் சென்றவர்கள் தீட்டியதாக சொல்லப்படும் திட்டங்களும், பல்வேறு சட்டங்களும் நடைமுறைப் படுத்தப்பட்டதாக வரலாறு இல்லை. (உ.ம்) தீண்டாமை ஒழிப்புச் சட்டம், நில உச்சவரம்பு சட்டம் சமகூலி சட்டம், இன்ன பிறவனைத்தும் நமது தார்மீக கோபத்தை சமாதானப்படுத்துவதாகவும், சமரசம் செய்வதாகவும் மட்டுமே உள்ளது. பெயரளவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டங்கள் யாவும் ஏட்டளவில் மட்டுமே உள்ளது. நடைமுறை படுத்தப்பட வேண்டிய அதிகாரம் இந்நாட்டின் நிரந்தர அமைப்பாக இருக்கும் அரசு அதிகாரிகள் வசம் உள்ளது. அதிகாரிகளும், ஆதிக்க சாதிவெறிப் பிடித்தவர்கள்

www.padippkam.com

# தலித் விடுதலைக்கு ஆயுதப் போராட்டம் அவசியமா?

புனித பாண்டியன்

''சாதி என்பது இந்துக்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து விடாமல் தடுக்கின்ற செங்கல் சுவரோ, முள் வேலியோ அல்ல. அப்படி சாதி வெறும் சுவராகவோ வேலியாகவோ இருந்தால் அதைத் தகர்த்து விடலாம். சாதி என்பது ஒரு கண்ணோட்டம்; ஒரு மனநிலை. எனவே, சாதியைத் தகர்ப்பது என்றால், வெறும் பவுதீகத் தடையைத் தகர்ப்பது என்பது அல்ல. சாதியைத் தகர்ப்பது என்றால், இந்துக்களின் மன நிலையில் ஒரு மாறுதல் ஏற்படுத்த வேண்டும் என்பதேயாகும்.''

- பாபாசாகேப் டாக்டர். அம்பேத்கர்.

முப்பது கல் தொலைவிலே உள்ள தமிழீழத்திலே, நமது இன மக்கள் கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக, அம்மண்ணின் - மக்களின் விடுதலைக்காக முற்றிலும்–நியாயமான ஒரு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். தமிழகத்தில் உள்ள இளைஞர்கள் குறிப்பாக, தலித் இளைஞர்கள் தமிழீழப் போராட்டத்தின் பால் ஈர்க்கப்பட்டு - தங்களின் இன விடுதலைக்கும் ஆயுதப் போராட்டம் மிகவும் இன்றியமையாதது என்றே கருதுகின்றனர். இதற்கான எண்ண ஓட்டத்தில் தங்களின் கவனத்தைச் செலுத்தி வருகின்றனர்.

தமிழீழப் போராட்டத்தின் அதிர்வுகளால் உந்தப்பட்டு அப்போராட்டத்துடன் தங்களின் போராட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம், இங்குள்ள இளைஞர்கள் பல்வேறு காலகட்டங்களில் - ஆயுதங்களுக்கான தேடலில் - 'தடா' போன்ற கருப்புச் சட்டங்களால் உழல்கின்ற ஒரு துன்பகரமான - இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இந்தியாவின் ஆதிக்க சக்திகளை எதிர்கொள்ள, ஆயுதப் போராட்டத்தின் மூலம் மக்களைப் புரட்சிக்கு ஒன்றுபடுத்தலாம் என்ற எண்ணமே இதற்கான அடிப்படைக் காரணம்.

ஆயதப் போராட்டத்தின் மூலம் தலித் விடுதலையை வென்றெடுக்க முடியுமா? இதுதான் நம்முன் உள்ள கேள்வி. இதற்கான தெளிவான பதில்தான் நம்முடைய போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல உறுதுணையாக இருக்கும்.

தமிழீழத்திலே நம்மின மக்கள் மீது நிகழ்ந்து கொண்டிருப்பது ராணுவப் படையெடுப்பு. அங்குள்ள சிங்களர்களால் தமிழினம் அடக்கப்படுகின்றது - ஆயுதத்தால்! சிங்களர்கள்தான் தங்களின் எதிரி என்று அங்குள்ள சிறுபிள்ளைக்குக்கூட சரியாகத் தெரியும். இங்கு எதிரி யார் என்று படித்தவர்களும் எளிதில் தெரிந்து கொள்ள முடியாத - புரிந்து கொள்ள இயலாத ஒரு விந்தையான நிலை. இங்கு, மதத்தின் ஊடாக நிகழும் அடக்கு முறையை சரியாகப் புரிந்து



படிப்பகம்

www.padippkam.com

கொள்ளாத வரை விடுதலை என்பது எட்டாக்கனியாகவே இருக்கும். இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்கள் மீது நிகழ்வது பண்பாட்டுப் படையெடுப்பு. கடந்த 3000 ஆண்டுகளாக நம்மினம் அழுத்தி வைக்கப்பட்டிருப்பது - ராணுவப் படையெடுப்பால் அல்ல. இங்கு அடக்குகின்ற ஆரியர்கள் சிறுபான்மையினர், அடக்கப்படுகின்றவர்கள் - பெரும்பான்மையினர். இதுபோன்ற ஒரு நிலையை எளிதில் புரிந்து கொள்ளாதவாறு, எதிரி நம்மிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றான் - பல்வேறு தளங்களில். எதிரி யாரென்றே தெரியாத - தெரிந்தும் புரியாத நிலையில் ஆயுதமேந்தினால் யாரைத் தாக்குவது?

தலித் மக்களின் கலை, இலக்கியம், அரசியல், பண்பாடு, வாழ்வியல் முறைகள், கல்வி, நெறி, ஆளுமை, தத்துவம், மொழி, என அனைத்திலும் ஆதிக்கபுரியினர் அவர்களின் கருத்தைத் திணித்து நம்மை அடிமைப்படுத்திவிட்டனர். நாம் அடிமைகளாய் இருப்பது கூட விழிப்புணர்வு பெற்ற சில தலித் மக்களுக்குத்தான் தெரியுமே தவிர - பெரும்பான்மை மக்களுக்கு தாங்கள் அடிமைப்படுத்தப்பட்டுள்ளோம் என்ற உணர்வே இன்றி மகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றனர். அந்த அளவிற்கு மிகக் கச்சிதமாக அடிமைப்படுத்துதல் இங்கு தொடர்கின்றது.

இங்கு உண்மையான - முதன்மையான எதிரி சில நேரங்களில் நமது 'நண்பனாகவே' இருந்து விடுகின்றான். இதைக் கண்டுபிடிப்பது மிகவும் சிரமமான பணி. அம்பேத்கர் - பெரியார் என்ற தத்துவக் கண்ணாடியை அணிந்து பார்த்தால்தான் உண்மை எதிரி யார் என்பதை தெளிவாகக் காண முடியும். தலித் மக்கள் மீதான உடல் ரீதியான காயப்படுத்துதலை விட, உளவியல் ரீதியான காயப்படுத்துதலே ஆழமான வடுக்களை ஏற்படுத்துகின்றது. உளவியல் ரீதியான ஊனம் வெளியே தெரியாததால் - விரைவில் மருந்து போடுவது கூட முடியாமல் போகின்றது – பல்வேறு நேரங்களில்!

இந்தியாவில் நடக்கும் இதுபோன்ற விந்தையான சூழலில்தான், தலித் மக்கள் - உடல் ரீதியாக தாக்குபவனை மட்டுமே எதிரி எனக் கருதி - உளவியல் ரீதியாக மிகப்பெரும் பாதிப்பு ஏற்படுத்துபவனை - அதற்குக் காரணமாக இருக்கும் தத்துவத்தை -அடையாளம் காணத் தவறிவிடுகின்றனர். நம்மை உடல் ரீதியாக காயப்படுத்துகின்றவன் - உள்ளபடியே வேறு ஒருவனால் கட்டுப்படுத்தப்படுகின்றான் என்பதுதான் மறைந்து நிற்கும் உண்மை. நம்மை உடல் ரீதியாக ஊனமுற்றவர்களாக ஆக்குவது துப்பாக்கிகளாக இருந்தாலும் - துப்பாக்கியே நமக்கு எதிரியாகி விடாது. துப்பாக்கியை ஏவுகின்றவன் - இயக்குகின்றவன்தான் எதிர்க்கப்படவேண்டிய உண்மையான எதிரி.

அவன் ஒருபோதும் நேரில் வருவதில்லை. மறைந்திருந்தே தாக்குகின்றான். துப்பாக்கியை இயக்குகின்றவனை நாம் அடையாளம் கண்டு எதிர்கொள்ளாதவரை – நமது விடுதலை தாமதமாவதைத் தடுக்க முடியாது.



படிப்பகம்

www.padippkam.com



எனவே, நேரிடையாக நடைபெறும் ராணுவத் தாக்குதலை விட மறைமுகமாக நடைபெறும் பண்பாட்டுத் தாக்குதலே முதலிடம் பெறுகின்றது. பண்பாட்டுப் படையெடுப்பு என்பது மூளையில் போடப்பட்ட விலங்கு போன்றது. இது வெளியில் தெரியாது. இஃது அனைத்துத் துறைகளிலும் பரவி இருப்பதால் நம்மால் சுதந்திரமாக செயல்பட முடிவதில்லை. **தலித் விடுதலைக்கு முட்டுக்கட்டையாக இருப்பது மறைந்து நிற்கும் பார்ப்பனீயம் தான் என்பதை பாபாசாகேப் டாக்டர். அம்பேத்கரும், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரும் கண்டறிந்தனர். இப்புரட்சியாளர்கள் கூறியபடி, இதன் ஆணிவேர் கிள்ளி எறியப்பட்டால்தான் - அடக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிரந்தர விடுதலை கிடைக்கும். தலித் மக்கள் மீதான உடல் ரீதியான ஒடுக்குமுறை முடிவுக்கு வரும். எனவே, பார்ப்பனீயத்தை உயர்த்திப் பிடிப்பவர்கள் – எந்த முகமூடி அணிந்து வந்தாலும் அதை அடையாளங்கண்டு, நிர்மூலமாக்குவதன் மூலமே நம்முடைய விடுதலை உறுதிப்படுத்தப்படும்.**

ஏனெனில், பார்ப்பனீய எதிர்ப்பில்தான் தலித் விடுதலையே அடங்கியுள்ளது.

பார்ப்பனீயம் என்றால் என்ன?

1. பல்வேறு வகுப்புகளிடையே உள்ள சமமற்ற தன்மை.
2. சூத்திரர், தீண்டப்படாதவர்களை நிராயுதபாணியாக்குதல்.
3. சூத்திரர், தீண்டப்படாத மக்களுக்கு கல்வியை முற்றிலும் தடை செய்தல்.
4. சூத்திரர், தீண்டப்படாதவர்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதிலிருந்து தடை செய்தல்.
5. சூத்திரர், தீண்டப்படாதவர்கள் சொத்து வைத்திருப்பதை தடை செய்தல்.
6. பெண்களை அடக்கி - அடிமை நிலையிலும் - தொண்டூழிய நிலையிலும் வைத்திருத்தல்.

- சுருக்கமாகக் கூறினால், சமத்துவமின்மைதான் பார்ப்பனீயத்தின் அதிகாரப் பூர்வமான கொள்கை.

– டாக்டர். அம்பேத்கர், *''காங்கிரசும், காந்தியும் தீண்டப்படாத மக்களுக்குச் செய்தது என்ன?''* – நூல். பக்கம் 215.

பார்ப்பனீயம் , பார்ப்பனரல்லாதவர்களிடமும் இருக்கின்றது எனக் கூறுவோர் - பார்ப்பனீயம் என்றால் என்ன என்று அம்பேத்கர் விளக்கியுள்ளதை - புரிந்து கொள்ள இயலாதவர்களேயாவர். அம்பேத்கரின் விளக்கப்படி அந்த பார்ப்பனீயத் தன்மை - பார்ப்பனரல்லாதவர்களிடம் இருக்க வாய்ப்பில்லை. அது பார்ப்பனர்களிடம் மட்டும்தான்



படிப்பகம்

www.padippkam.com

உள்ளது; சரிவர கையாளப்படுகின்றது - இன்று வரை!

எனவே, முழு மூச்சுடன் எதிர்க்கப்பட வேண்டியது - பார்ப்பனீயம் என்ற நச்சுக் கருத்தியலே. இதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். பார்ப்பனீயம், இந்துத்துவம் என்ற பெயரில் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட, மலைவாழ் மக்களிடையே ஊடுருவி அடிமைப்படுத்துகின்றது. பார்ப்பனீயமும் - இந்துத்துவமும் வேறு வேறு அல்ல. இரண்டும் ஒன்றேதான். பார்ப்பனீயம் என்ற பெயருடன் வரும்போது தயங்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் இந்துத்துவம் என்ற பெயரில் வரும்போது ஏற்றுக்கொள்கின்றனர்.

இந்தியாவில், இன்றுவரை பார்ப்பனீயத்தை அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் போவதற்கு முக்கிய காரணம் என்னவெனில், பார்ப்பனீயம் என்ற சமத்துவமற்ற கொடுந்தன்மை - 'இந்து' என்ற மதத்தின் மூலம் நம்மை அணுகி – அணைத்து அழிக்கப் பார்க்கின்றது. எனவே, இந்த மத போதையால் பெரும்பான்மை மக்கள் - இதை மதம் இட்ட கட்டளையாகவே எண்ணி ஏற்றுக் கொள்கின்றனர். இதிலிருந்து விடுபட வேண்டிய தேவை இருந்தும் விலக மறுக்கின்றனர். கத்தியின்றி, ரத்தமின்றி, இங்கே மதம் என்ற ஆயுதத்தினால் - பார்ப்பனீயம் என்ற நச்சுக் கருத்தியல் நம்மீது திணிக்கப்படுகின்றது.

எனவே, கருத்து மோதல்தான் இங்கு முழு வீச்சுடன் நடைபெற்றாக வேண்டுமே தவிர - உடல் ரீதியான மோதல்கள் அல்ல! ஆயத மோதலோ - ஆள் மோதலோ அல்ல!

இக்கருத்தியலுக்கு எதிரான மோதல் - வாழ்வியலின் அனைத்துத் தளங்களிலும் இடைவிடாது நடைபெறல் வேண்டும். எந்த நிலையிலும் விட்டுக்கொடுத்தல் இருக்கவே கூடாது. ஆனால், இன்றுவரை இதற்கு எதிரான தாக்குதல் தலித் மக்களால் சரியான முறையில் தொடுக்கப்படவில்லை என்பதுதான் உண்மை. இதை சரிவர தலித் மக்கள் புரிந்து கொண்டால், அடக்கு முறைக்கு எதிரான அத்து மீறல் – புரட்சி நடைபெறுவதை - உலகின் எந்த சக்தியாலும் தடுக்க முடியாது.


பார்ப்பனீயத்தை யார் பலங்கொண்டு தாக்கினாலும் அவர்கள் தலித் விடுதலைக்கு வழி வகுப்பவர்கள் - தலித் மக்களின் நண்பர்கள். எனவே, இது குறித்து கடுமையான விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். பார்ப்பனீய எதிர்ப்பில்தான் தலித் விடுதலை அடங்கியுள்ளது. வேறு செயல்கள் பயன்தராது. அம்பாகப் பயன்படும் பிற்படுத்தப்பட்ட மக்கள் தலித் மக்களின் எதிரிகள் இல்லையா என்ற கேள்வி எழலாம். நம் மீது தாக்குதல் தொடுக்கின்ற, சாதியைக் கடைப்பிடிக்கின்ற பிற்படுத்தப்பட்ட மக்களும் எதிர்க்கப்பட வேண்டியவர்களே, ஆனால், அவர்களே எதிரிகள் அல்ல.

தலித் இன விடுதலைக்கான போராட்டத்திற்கு தேவைப்படுவதெல்லாம் - ஆயுதங்களோ, வெடிமருந்துகளோ அல்ல. நம்மிடம் ஏ.கே.47 – ரக துப்பாக்கியை விட வலிமை வாய்ந்த கருத்துத் துப்பாக்கி உள்ளது. அம்பேத்கர் – தந்தை பெரியார் அவர்களின் நூல்கள்தான் அவை. இவற்றை நாம் ஒழுங்காகப் படித்து - பயன்படுத்தத் தெரிந்து கொள்ள



படிப்பகம்

www.padippkam.com



வேண்டும். இளைஞர்கள் ஆயுதங்களுக்கான தேடலைத் தவிர்த்து விட்டு - அம்பேத்கர் – பெரியார் நூல்களை முழுமையாகப் படித்து மக்களிடையே இடைவிடாத பிரச்சாரம் மேற்கொள்வதுதான் சரியான வரலாற்றுப் பணியாக இருக்க முடியும். அதுதான் சாதி ஒழிப்புக்கு – தலித் விடுதலைக்கு மிகச் சரியான போராட்டமாகும்


**பொதுவுடைமைத் தத்துவங்களெல்லாம், பொது உரிமை பேசும் மண்ணிற்கேற்ற அம்பேத்கர் – பெரியார் தத்துவங்களின் உள்ளடக்கம்தான். 21ஆம் நூற்றாண்டு அம்பேத்கர் – பெரியார் நூற்றாண்டாகவே மிளிரும். அதற்கான பணியில் நாம் அணியமாவோம்.**

> **''சாதி அமைப்பைப் பிளவு படுத்த நீண்ட காலம் ஆகும் என்றாலும் சரி அல்லது அந்தப் பெரும்பணியை வெகு விரைவில் முடித்து விடலாம் என்றாலும் சரி, நீங்கள் ஒரு உண்மையை மறந்துவிடக் கூடாது. சாதிக்கோட்டையில் பிளவு ஏற்படுத்த வேண்டுமென்றால் – பகுத்தறிவுக்கும், ஒழுக்கத்திற்கும் சிறிதும் இடம் கொடுக்காத வேதங்களுக்கும், சாத்திரங்களுக்கும் வெடிவைத்தே தீரவேண்டும். சுருதிகள், சுமிருதிகளாலான மதத்தை அழித்தொழிக்க வேண்டும். வேறு எந்த செயலும் பயன் தராது. இதுவே என் முடிவான கருத்தாகும்.''**
>
> **– பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கர்**



படிப்பகம்

www.padippkam.com




# விளிம்பு டிரஸ்ட்

பழைய எழுத்துக்கள், பழைய பார்வைகள், பழைய அணுகல்கள் எல்லாம் காலாவதியாகிக் கொண்டிருக்கின்றன.

புதிய சூழல்களை எதிர்கொள்ள புதிய சிந்தனைகள், புதிய எழுத்துக்கள், புதிய செயல்பாடுகள் தேவைப்படுகின்றன.

இதுவரையிலான அதிகார மையங்கள், எழுத்து மையங்கள், ஆய்வுக் குவி மையங்கள் . . . எல்லாவற்றிலிருந்தும் ஒதுக்கி வைக்கப்பட்டு விளிம்புகளில் நின்று கொண்டிருந்தவர்களையும், நிறுத்தப் பட்டவைகளையும் நாம் கவனம் கொள்ள வேண்டிய காலம் இது.

**விளிம்புகளின் வரலாற்றை எழுதுதல், விளிம்புகளின் பிரச்சினைகளை ஆய்வு செய்தல், விளிம்பு நிலை எழுத்துக்களை வெளிக்கொணர்தல் ஆகிய நோக்கங்களுடன் விளிம்பு டிரஸ்ட் உருவாக்கப்பட்டுள்ளது.**

தமிழ் மக்கள் உவந்தளிக்கும் சிறிய நன்கொடைகளின் ஆதாரத்தில் முறைப்படி பதிவு செய்யப்பட்டு, எள்ளளவும் லாப நோக்கின்றி, இயங்க உள்ளது.

முதல் மூன்றாண்டுகளுக்கு தலித் எழுத்தாளர்களின் எழுத்துக்களை மட்டும் வெளியிடுவது எனவும், தீண்டாமை, சாதிப் பிரச்சினைகள் தொடர்பான ஆய்வுகளுக்கு உதவி செய்து பின் அவற்றை வெளியிடுவது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து புலம் பெயர்ந்த எழுத்துக்கள், பெண்ணிய எழுத்துக்கள், ஆய்வுகள்... முதலியனவும் வெளியிடப்படும்.

- தலித் எழுத்தாளர்கள் தங்களின் கதைகள், நாவல்கள், கவிதைகள், ஆய்வுகள் மொழி பெயர்ப்புகளை அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.
- தீண்டாமை, சாதீயம் தொடர்பாக ஆய்வுகள் செய்ய விரும்புவோரை தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.
- விளிம்பு ட்ரஸ்ட் குழுவினரின் முடிவு இறுதியானது.

நிறப்பிரிகை, விடியல் பதிப்பகம் மற்றும் நண்பர்கள் ஆதரவுடன் அமைக்கப்பட்டுள்ள விளிம்பு டிரஸ்ட்டிற்கு நிதி வழங்க வேண்டுகிறோம்.

| *தலைமையக முகவரி* | *நிதி தொடர்புகளுக்கு* | *புனைவுகள் மற்றும் ஆய்வுத் திட்டங்களை அனுப்பி வைக்க* |
|---|---|---|
| விளிம்பு ட்ரஸ்ட்,<br>மே/பா. நிறப்பிரிகை,<br>அ.பெ.எண்.192.,<br>பாண்டிச்சேரி 605001 | விளிம்பு ட்ரஸ்ட்<br>3,மாரியம்மன் கோவில் வீதி,<br>உப்பிலிபாளையம்,<br>கோவை 641 015 | அ.மார்க்ஸ்,<br>31, சேவியர் நகர்,<br>தொம்பன் குடிசை,<br>தஞ்சாவூர் 613 001 |

படிப்பகம்

www.padippkam.com



# தலித் கலை விழா மலர்

**20. 07. 1996**

**சென்னை**

படிப்பகம்